172



வசந்தம்

JL
2II, N42VM
N45.4.7
197236

பார்த்திப - ஐப்பசி

1945 - அக்டோபர்

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ் லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-௵ கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

13 JAN 1946

ஒரு கரடுமுரடான பாதை

வாழ்க்கை, பய[illegible]வுகளும், கிடுகிடு பள்ளத் தாக்குகளும் இருள் சூழ்ந்த இடங்களில் பதுங்கிக் காத்திருக்கும் அபாயங்களும் நிறைந்த ஒரு கரடுமுரடான பாதை. இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி, இருட்டை விரட்டி ஒளி பரப்பும் ஒரு தீபமாகும். இருட்டின் அபாயங்களுக்கு நீங்கள் ஏன் இலக்காக வேண்டும்? ஒரு பிருத்வி பாலிஸியைத் துணை கொண்டு, அச்சமின்றி நிமிர்ந்த தலையுடன் வாழ்க்கைப் பாதையில் முன்னேறுங்கள்.

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிட்.

தலைமை ஆபீஸ்: 120, அரமனைகாரன் தெரு, ஜி.டி. சென்னை

தமிழ் நாட்டில் கிளை ஆபீசுகள் :— சிதம்பரம், மதுரை, சேலம், திருச்சி, வேலூர், காரைக்குடி, நாகப்பட்டணம், கோயமுத்தூர்.

நெல்ஸன் கம்பெனி

எழுத்துக்கள்

★ அச்சுத் தொழிலிலே ஒரு அற்புதமான காரியத்தைச் சாதித்து தமிழ் நாட்டாரின் பரிபூரண அன்பைப் பெற்றவர் ஸ்ரீ மாணிக்க முதலியார் அவர்கள்.

★ எழுத்துச் சிருஷ்டியிலே அபாரமாக கவனத்தைச்செலுத்தி அருமையான வடிவங்களைச் செய்து, அறிஞர்களும், அச்சக நிர்வாகிகளும் போற்றிப் புகழும்படி பணி புரிந்து வருகின்றோம்.

★ பார்வைக்குப் பரவசம் தந்து ஈடு இணையற்று உறுதியுடன் விளங்குபவை நெல்ஸன் கம்பெனி எழுத்துக்கள் தான்.

நெல்ஸன் கம்பெனி

சூளை :: சென்னை.

வெள்ளித் திரைக்கு விரைவில் வருகிறது !

காதலியை வெல்ல 'சாது' வேடங் கொண்டவனின் சித்ரம்.

ராஜரிஷி வேடங்கொண்ட அர்ஜுனனின் காதல் வேட்டை! மகோன்னத காதல், மாபெருங் காக்ஷியின் சித்திர வர்ணனை கொண்டது.

மாடர்ன் தியேட்டர்ஸ்

சுபத்ரா

டைரக்ஷன் T. R. சுந்தரம்
B. A. B. Sc (Leeds)

வஸந்தா முதலிய தமிழ் நாட்டு "உயர்ரக" நக்ஷத்திரங்கள் நடித்தது.

விபரங்களுக்கு

மாடர்ன் தியேட்டர்ஸ் லிட்.,

சேலம் :: மதுரை

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர்
கவர்ன்மெண்ட்
தயாரிப்பு.

கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: பம்பாய்)

தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷுரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர் :- ஸர். சுனிலால் வி. மேதா.

உபதலைவர் :- ஸ்ரீ ஜே. ஆர். டி. டாடா.

ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

1944-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ்	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் செய்யப்பட்ட பாலிஸிகளின் மொத்த தொகை	ரூ. 21 கோடிக்கு அதிகம்.

பொருளாதார புள்ளி விவரங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 71,21,055.
மொத்த நிதி	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
மொத்த இருப்பு (சுமார்)	ரூ. 8 கோடி
ஆரம்பம் முதல் கிடைத்த பிரிமியம் வருமானம்	ரூ. 22 கோடிக்கு அதிகம்.
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை	ரூ. 11 கோடிக்கு அதிகம்.

இன்ஷியூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளைநிலையம்,
4 & 5 முதல் லைன் பீச்.

கே. கணபதி,
பிராஞ்சு மானேஜர்.

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

★

வசந்தம் சந்தா விபரம்

வருஷ சந்தா	...	ரூ. 6 0 0
ஆறு மாத சந்தா	...	ரூ. 3 0 0
தனிப்பிரதி	...	ரூ. 0 8 0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மானேஜர், வசந்தம் காரியாலயம்,
4/12 A, திருச்சிரோட், கோயமுத்தூர்.

விளம்பர அட்டவணை

வசந்தா மில்ஸ் லிமிடெட்
பி. ஏ. ராஜு செட்டியார்
ஜூபிடர் பிக்சர்ஸ்
அரவிந்த் மில்ஸ்
ப்ருக் பாண்ட்
மைசூர் சில்க்
மைசூர் சந்தன அத்தர்
உம்மிடியார்
கவர்னர் யுத்த நிதி
எஸ். பீமைய செட்டி
ஆர்ய வைத்ய பார்மஸி
இந்தியன் பாங்கு லிமிடெட்
வசந்தா டையிங் ஒர்க்ஸ்
நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்
நெல்ஸன்
டாடா ஹேராயில்
சித்ரா
சுபத்திரா
பிருத்வி இன்ஷ்யூரன்ஷ்

வசந்தம்

மலர் 4	பார்த்திப ஹூ ஐப்பசி மீ	இதழ் 7

பொருளடக்கம்

இயற்கை	...	"ரதி"	... 1
உயிரும் உப்பும்	...	சு. கிருஷ்ண ராவ் தி. சி. சங்கரன்	... 2
செந்நிலத்துக் குப்பன்	...	அ. சிதம்பரநாதச் செட்டியார்	6
சிறுமை	...	ஆர். கே. பார்த்தசாரதி	... 10
புத்தக ஆராய்ச்சி	...	ஆர். டி.	... 11
வாழ்க்கை	...	"செந்தாமரை"	... 12
காதலர்கள்	...	"ஸ்ரீரா"	... 13
கசிந்த கண்ணீர்	...	சே. வண்ணக்கண்	... 19
ஆடும் மயில்	...	சரஸ்வதி தியாகராஜன்	... 24
ஐந்தாம்படை அணுக்குண்டு	...	"சுகி"	... 31
பாக்கியசாலிகள்	...	எச். விஜயகுமார்	... 39
மூன்று மணி	...	"பெ. தூரன்"	.. 46
சூர சம்மாரம்	...	து. ராஜகோபால்	... 50
கலைக்கோயில்	...	சுத்தானந்த பாரதி	... 56
சாவித்திரி	...	ஆர். ஷண்முகசுந்தரம்	... 61
கோணல்ப் பார்வை	...	ரா. நா.	... 74
எழில்	...	கே. ஸி. எஸ். அருணாசலம்	... 76
திக்குத்தெரியாத காட்டில்	...	"பராங்குசம்"	... 77
மலர் மணம்	...	... ...	... 84

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181. Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபிஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபிஸ்கள் :

எஸ்பிளனேட் — திருவல்லிக்கேணி
மயிலாப்பூர் — தியாகராயநகர்
புரசவாக்கம் — மவுண்டுரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபிஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 60,00,000
செலுத்தப்பட்ட ,, ,, 33,66,622
ரிஸர்வ் நிதி ,, 35,00,000
டிபாஸிட்டுகள் 12½ கோடிக்கு மேல்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபிஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"

வசந்தம்

கௌரவ ஆசிரியர்கள் :

டி. கே. சிதம்பரநாத முதலியார். சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

அட்டைச் சித்திரம்:

இயற்கை

அந்தியது செந்தீயைச்
சிந்தி யணையும்!
முந்தும் மதி பந்தெனவே
வந்து விரியும்!

மண மணக்கும் முல்லை மலர்
வாசம் வீசுதே!
கண கணக்கும் கோயில் மணி
காற் றிழையுதே!

பூ நிலவைத் தூவி ஒயில்
புரியுதே ஒளி
பாவின் சுவை போல எழில்
படம் விரியுதே!

தேவ மகள் போல அவள்
திரிந் தசைகின்றாள்;
பாவமற்ற தொழில் புரிந்து
பாரைக் காக்கின்றாள்!

இயற்கை தரும் உணவை யவள்
ஈட்டு கின்றாளே!
இயற்கை அது! உழத்தியின் கை
எழிற் கரம் அன்றோ?

"ரதி"

197236

உயிரும் உப்பும்

[சு. கிருஷ்ண ராவ் எம். ஏ; பி. எல். தி. சி. சங்கரன் பி. எஸ்ஸி]

“உப்பிட்டவர்களை உள்ளளவும் நினை” என்பது ஒரு பழமொழி. உலகில் உண் பொருள்கள் பலவிருக்க உப்பை மட்டிலும் இவ்வாறு சிறப்பித்துக் கூறியிருப்பது ஏன்? நம் பழக்கங்களில் மட்டுமல்ல, பிற நாடுகளிலுங்கூட உப்பை எல்லாப் பொருள்களிலும் சிறந்ததெனக் கூறும் பல நன்மொழிகள் இருக்கின்றன. எனவே “உப்பு” உணவிற்கு மிக மிக இன்றியமையாதது என்றும் அஃதின்றி உயிர்வாழ இயலாது என்றும் இப்பழமொழிகள் சுட்டிக் காண்பிக்கின்றன. குடி வீடு புகுமுன் நாம் உப்பைத்தான் முதலில் கொண்டு போகிறோம். சிலருடைய பழக்கத்தில் உண் கலத்தில் உப்புதான் முதலில் பறிமாரப் படுகிறது. இது ஏன்?

பார்க்கப்போமளவில் உப்பு தன் மட்டில் சுவையுள்ள பொருளல்ல. பழங்கள் போன்று தனியே விரும்பி உண்ணப்படுவதும் அல்ல. இவ்வாறிருக்க இதற்கென்ன இவ்வளவு பெருமை? உணவில் உப்புக்குத்தானா முதலிடம் கொடுக்க வேண்டும்? இக்கேள்விகளுக்கு தற்கால விஞ்ஞானம் எல்லாரும் ஒப்புக் கொள்ளக்கூடியபடி தக்க சமாதானம் கூறுகிறது. அதை இங்கு சிறிது ஆராய்வோம்.

“உப்பு” ஒரு இரசாயனச் சேர்க்கைப் பொருள். இதில் “சோடியம்” என்னும் காரப் பொருளும் “குளோரின்” என்னும் ஒரு வகைப் பச்சை வாயுவும் சேர்ந்திருக்கின்றன. “சோடிய”த்தின் ஒரு சிறு துண்டை நாம் விழுங்கினால் வயிற்றுக்குள் அது தீப்பற்றி எரிந்து அரை நொடியில் அது நம்மை எமனுலகத்திற்கு அனுப்பிவிடும். இத்துடன் சேர்ந்த குளோரின் விஷயமும் அவ்வாறே. அதை நாம் சுவாசித்தால் அது நம் நுரை ஈரலைத் தின்று இரத்தத்தைக் கக்கும்படி செய்து சோடியத்தைக் காட்டிலும் விரைவில் நம்மைக் காலனிடம் கொண்டு சேர்க்கும். இவ்வாறு தனிப்பட்ட மூலப் பொருள்கள் நிலையில் இவையிரண்டும் கொடிய பொருள்களாக இருப்பினும், இவை இரசாயன முறையில் கலந்தவுடன் “சோடியம் குளோரைட்” என்னும் கலப்புப் பொருளாக ஆகி கடலிலுள்ள சிறு மீன் முதல் மனிதன் வரை எல்லா உயிரினங்களுக்கும் மிகவும் இன்றியமையாத சிறந்த உணவுப் பொருளாக ஆகிறது. உப்பின்றி உயிர் இல்லை. என்ன விந்தை! இயற்கையன்னையின் கருணை இதில் விளங்குகிறது.

உப்பில் கலந்திருக்கும் “சோடியம்” உயிரினங்களுக்கு மிகவும் தேவையான ஒரு மூலப் பொருள். அதன் அளவு நம் தேகத்தில் குறைந்தால் பிணிக்கு காரணமாகும். இதுபோல் தாவரங்களுக்கு சோடியம் இனத்தைச் சேர்ந்த “பொடாசியம்” என்னும் மூலப் பொருள் அதிக தேவை. பொடாசியம் கலந்த “பொடாசியம் கார்பனேட்” என்னும் கலப்புப் பொருள் பூமியிலிருந்து தாவரங்கள் தம் வேர்களின் மூலமாய் உட்கொண்டு தம் உட

லுறுதியைப் போஷிக்கின்றன. எனவே தாவரங்களுக்கு உப்பைக் காட்டிலும் பொடாசியம் கார்ப நேட்தான் அதிகம் தேவை என் றும் கண்டு பிடிக்கப் பட்டிருக் கிறது.

தாவர உலகிற்கு பொடாசியம் எவ்வாறு தேவையோ அவ்வாறு பிராணி உலகத்திற்கு சோடியம் தேவையாகும். தாவர உணவை மட்டிலும் உட்கொள்ளுவதால் உடலில் பொடாசியத்தின் அளவு தேவைக்கு அதிகமாகச் சேர்கி றது. இப்படிச் சேர்வதால் உட லில் இருக்கும் சோடியமும் பொடாசியமும் ஒன்றை ஒன்று தாக்குகின்றன — இதனால் உட லின் செயல்களில் சில இவையிரண் டிற்கும் சமாதானத்தை உண்டாக் குவதில் ஈடுபட வேண்டியிருக்கின் றன. தாவர உணவால் பொடா சியம் அதிகப்படவே, அது சேர் ந்த பொடாசியம் கார்பநேட்டும், உடலில் ஏற்கனவே இருக்கும் சிறிதளவும் உப்பும் (அதாவது சோடியம் குளோரைட்டும்) ஒன்று சேர்ந்து கலந்து அவை களின் சேர்க்கைப் பகுதிகளில் ஒரு பரிவர்த்தனை ஏற்பட்டு, பொடாசியம் கார்பநேட் – சோடி யம் குளோரைட், பொடாசியம் குளோரைட் — சோடியம் கார்ப நேட் என்ற இரு கலப்புப் பொருள் கள் உண்டாகி விடுகின்றன. இவ்விரண்டு புது கலப்புப் பொருள்களும் உடலுக்குத் தேவையில்லை. எனவே அவை இரண்டும் நம் தோலில் உண்டா கும் வியர்வையாலும் சிறு நீர் வாயிலாகவும் வெளியேற்றப்படு கின்றன. இதனால் உடலுறுதிக் கான உப்பு வீணாக்கப் படுகிறது. இது தாவர உணவுகளை மட்டிலும் உட் கொள்ளுவதால் ஏற்படும் ஒரு தீமை. இத்தீமைக்கு ஈடு கட்ட அடிக்கடி நாம் உப்பை உட்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால் உயிர்ப் பிராணிகளின் உடல்களில் ஏற்கனவே உப்பு இருந்து வருகிறதென்று முன்பே குறிப்பிடப் பட்டது. ஆதலால் உயிர்ப் பிராணிகளைக் கொன்று தின்பவர்களுக்கு சாகபட்சணி களைப் போல் பொடாசியத்தின் அளவு அதிகப் படுவதில்லை; இத னால் உடலிலுள்ள சோடியம் குளோரைட் உப்பும் அதிகமாக வெளித்தள்ளப் படுவதும் இல்லை. எனவே, அடிக்கடி உப்பை வெளி யிலிருந்து உள்ளே செலுத்த வேண்டியது என்கிற தேவையும் அதிகம் கிடையாது. காடுகளில் உயிர்ப் பிராணிகளைக் கொன்று தின்னும் சிங்கம், புலி முதலியன வைகளுக்கு வெளியிலிருந்து உப்பு வேண்டுமென்கிற தேவை இல்லை. கொல்லப்பட்ட பிராணிகளின் சதையிலும், இரத்தத்திலுமுள்ள உப்பின் அளவே அவைகளுக்குப் போதுமானதாக இருக்கிறது. இதனால்தான் சாகபட்சணிகளுக்கு மாமிச பட்சணிகளைக் காட்டிலும் உப்பின் தேவை அதிகமாக ஏற் படுகிறது. மனித இனங்களில் கூட சாகபட்சணிகளும், மாமிச பட்சணிகளும், இரு உணவுகளைக் கலந்துண்பவர்களும் உளர். இந் தியாவில் தாவர உணவையே அதிகமாக உண்கிறார்கள். மற்ற நாட்டினர் இருவகை உணவுகளை யும் கலந்து புசிப்பவர்கள். எஸ்கிமோ போன்ற மிக்க குளிர் ந்த நாடுகளில் வாழ்பவர்கள் மாமிச உணவை மட்டிலும் உண் பவர்களாக இருக்கின்றனர் பொதுவாக சூரிய வெப்பம் மிகு ந்த நாடுகளில் தாவர உணவுகள் அதிகமாகவும், சூரிய வெப்பம் குறைவான நாடுகளில் மாமிச உணவுகள் அதிகமாகவும் உண்

ணப்படுவதாகத் தெரிகிறது. ஆகையால்தான் இந்தியா சீனா, தாய்லாந்து முதலிய நாடுகளில் அதிகப்படியாக உப்பு செலவாவ தற்குக் காரணம். ஆங்கிலேயர் களுக்கு நாம் உட் கொள்ளும் அளவிற்கும் குறைவாகத்தான் உப்பு தேவையாகும்.

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி களால் ஒரு நாளைக்கு $\frac{3}{5}$ அவுன்ஸ் பொடாசியத்தை நாம் தாவரங் களில் உட்கொள்ளுகிறோம் என வும், வியர்வை, சிறு நீர் மூலம் $\frac{1}{2}$ அவுன்ஸ் உப்பு வெளித் தள்ளப் படுகிறதென்றும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. பொடாசியக் கலப்புப் பொருள் அதிகமாக நம் உடலில் சேர்ந்தால் அவை நம் இருதயத்தை வலிமிழக்கச் செய் கிறதாம். $\frac{1}{7}$ குந்துமணி எடை யுள்ள பொடாசியக் கலப்புப் பொருளை ஒரு நாயின் இரத்தத்தில் சேரும்படி ஊசிபோட்டால் அது உடனே இறந்துவிடும். இதனால் தான் பொடாசியத்தின் தீமை யைக் குறைக்க சோடியம் கலந்த உப்பை அதிகமாகச் சேர்க்க வேண்டியிருக்கிறது. மற்றும் ஓர் ஆராய்ச்சி: இப்போதுதான் கொல்லப்பட்ட ஒரு தவளை அல் லது ஒரு ஆமையின் இருதயத் தைப் பிரித்தெடுத்தால் அது பல மணி நேரம் துடித்துக் கொண்டி ருக்கும். ஆனால் அதை கடல் நீரில் அமுக்கி வைத்தால் பல நாள் துடிக்கும். இதனால் இருதயத்தை நீடித்து உழைக்கச் செய்வது உப்பு ஆகும். உடலுறுதியையும் ஆயுட் பெருக்கத்தையும் கொடுப் பதில் உப்பிற்கு விசேஷ வன்மை உண்டு என்பது விஞ்ஞானிகளின் முடிவு.

உயிர் நூற் பேராசிரியர்கள் மற்றும் ஓர் உண்மையைக் கண் டிருக்கின்றனர்- நீரில் வாழும் சிறு உயிரினங்களை இரசாயன சுத்தமான உப்பில்லாத நீரில் விட்டு வைத்தால் அவை உடல் வெடித்து இறந்து விடுகின்றன வாம். ஆனால் அவைகளை உப்புக் கலந்த நீரில் போட்டு வைத்தால் பல நாள் உயிர் வாழ்கின்றனவாம். இதனால் உயிரினங்களுக்கு உப்பு மிகவும் அவசியமென்றும், இரசா யனப் பரிசுத்த நீர் உடலுக்குத் தீமையை அளிக்கும் என்றும் தெரிகின்றன.

உப்புக் குறைவான உடலில் சரிவர சிறு நீர் இறங்காது. மூத் திரப் பைகள் தங்தொழில்களைச் சரிவரச் செய்ய உப்பு அவசியம். ஒரு நகரில் தோட்டிகளின் வேலை நிறுத்தத்தால் நகரம் எவ்வளவு அசுத்தமாகுமோ அவ்வாறே நம் உடலிலும் உப்பின்றேல் ஆகி விடும். மற்றும், உப்பின் அளவு குறைந்தால் தாவர பட்சணிகளின் இரத்தத்தில் பொடாசியத்தின் அளவு அதிகப்பட்டு அதனால் இரத் தக் குழாய்கள் வெடித்துப் போகக்கூடியதாக ஆகும். இத னால் இரத்தத்தில் பிராண வாயு வின் ஓட்டம் தடைபட்டு இருதய மும் நின்று விடவும் காரணமா கும். எனவே பொடாசியத்தின் பெருக்கத்தால் இருதயத்தின் வலிமை குன்றுவதன்றி இரத்தத் தில் பிராண வாயுவின் ஓட்டமும் தடைபடக் கூடியதாக ஆவதால் இருதயத் துடிப்பு நிற்கவே நேரு கிறது. இவ்வாறு தீமையை விளைவிக்கும் பொடாசியத்தை வெளியேற்றுவது உப்புதான்.

உடலில் பல் வேறு உறுப்பு களில் பல காரணங்களால் வெளி யினின்றும், உள்ளின்றும் அநேக விஷக் கிருமிகள் சேருகின்றன. அவைகளால் உடல் நயம் கெடா

மல் பாது காப்பது உப்புதான். இவ்விஷயத்தில் கை படாமல் நன்றாகப் பக்குவப் படுத்திய ஊறுகாய்கள் நல்ல சான்றாகும்.

நம் உடலின் நீர்களில் "ஆல்புமின்" என்னும் ஒரு வகைப் பொருள் இருக்கிறது. அதை திரவ ரூபமாக நிலைத்திருக்கும்படி வைத்திருப்பது உப்பின் ஒரு சிறந்த வேலையாகும். எலும்புகள் அசையும் கீல்களில் சுரக்கும் எண்ணைச் சத்துக்களில் இந்த ஆல்புமின் அதிக அளவில் இருக்கின்றன. எனவே உப்பின் அளவு உடலில் குறைந்தால் கீல்களில் ஆல்புமின் கெட்டியாகிப் படிந்து எலும்புக் கீல்களைச் சரிவர இயக்க முடியாமல் ஆகிவிடும். இதனால் உப்பு நம் உடல் நலத்திற்கு எவ்வளவு அவசியம் என்று அறிகிறோம். இக்காரணங்களைக் கொண்டுதான் அடிக்கடி கடல் நீரில் ஆடவேண்டுமென்றும் அதனால் உடல் வலிமை ஏற்படக் கூடுமென்றும் பெரியோர் கூறுகின்றனர். இவ்வாறு சமுத்திரஸ்நானம் செய்வதால் நம் திரேகத்தின் மூலம் உப்பு உட் சென்று உடல் நயத்தைச் செய்ய அநுகூலமாகிறது.

உப்பின்றி மனித வாழ்க்கையை நடத்த முடியாது. உப்பின்றி சில நாட்கள் உணவு கொண்டால் அப்பொழுதுதான் உப்பின் பெருமை நன்கு விளங்கும். உப்பில்லாப் பொருள்கள் குப்பையிலே போடத் தக்கன. இதனால்தான் நம் முன்னோர் உண் பொருள் எல்லாவற்றிற்கும் தலையாக உப்பைக் கொண்டிருக்கின்றனர்.

செந்நிலத்துக் குப்பன்

[டாக்டர் அ. சிதம்பர நாதச் செட்டியார், எம். ஏ]

செந்நிலம் தாலுகாவில் ஒருபெரிய கிளர்ச்சி. ஹரிஜனங்களைக் கோயிலுள் விட வேண்டும் என்று ஹரிஜனங்களே முறையிடுகின்றனர்; வாதிக்கின்றனர். சொக்கநாதசாமி, கோயிலை விட்டு ஓடிவிடமாட்டார், தாங்களும் மனிதர்கள்தாம்; பூனை, எலி, பல்லி நடமாடும் கோயிலுள்ளே தங்கட்கு இடமில்லை யென்பது அடாது என்றெல்லாம் வாதிக்கின்றனர். அவர்கள் தலைவன் குப்பன் பொதுக் கூட்டங் கூட்டி மக்கள் மனதைக் கவரவல்ல வகையிற் பேசுகிறான். அவனைப் பேச ஒட்டாது தடுக்க முயன்றும் மாஜிஸ்டிரேட்டு தடையுத்தரவு போட மறுத்து விட்டார். அவனே பேசுகிறான்; ஊரிலோ பெரிய அமளி. கள் குடிக்கிறார் பறையர் என்று சொல்லிக் கதவை அடைக்கிறீர்; உங்களில் எத்தனையோ பேர் குடிக்கிறீர்களே; நீங்களெல்லாம் கோயிலுட் போகலாமோ என்கிறான். சொக்கர் கோயிலுள்ளே ஒரு காளியம்மன் இருக்கிறதே! அதற்கு ஆடுங் கோழியும் பலியிட்டுக் கள்ளையும் மொந்தையாக வார்க்கிறீர்களே! அதை உண்ணும் காளிதேவி எங்களைப் பார்த்தவுடன் ப்ள் எர் எனப் பயந்தோடிப்போவாளோ? எனக்கேட்கிறான். எலும்பையும் ஏற்கிற கடவுள் எங்களுக்கு அருள் செய்ய மாட்டாரோ? கண்ணப்பன் கொடுத்த பன்றி இறைச்சியை விரும்பி விரும்பி யுண்ட எம்பெருமான் எங்களையும் வெறுப்பாரோ? நந்தனுக்குப் பதங் கொடுத்த நடராசர் எங்களுக்குச் சொந்தம் என்றால் என்ன தப்பு? உலகமெல்லாம் ஈசன் காக்கின்றான் என்கிறீர்; உலகனைத்தும் அவனுடைப்பு என்கிறீர்; உலகில் யாவரும் அவன் மக்கள் என்கிறீர்; எங்களை மாத்திரம் அவன் கண்டால் கண்ணைக் கழுவிக் கொள்ள வேண்டுமோ? பெற்றவனைக் காண வரும் பிள்ளைகளைத் தடுக்கிறீர்! இதைவிட வேறு என்ன பாவம் வேண்டும்? ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்றாளே ஔவை! அந்தச் சொல் எங்களுக்கு மாத்திரம் விலக்கோ, ஐயா?

"சாவியிட்டுப் பூட்டுமிட்டுச்
சந்நிதியில் காவலிட்டுத்
தேவிருக்கும் கோவிலை நீர்
சிறைச்சாலை ஆக்கலாமோ?"

நம் தேசம் நமதாக வேண்டும் என்கிறீர். நம் தேசத்தில் நாம் குடியரசு செலுத்த வேண்டும் என்கிறீர். கோயிலை மாத்திரம் நீடாகத் தனியரசு நாட்டத் துணிகின்றீர். இது முறையா, நியாயமா? நாங்கள் பக்தியுடன் கோயிலிலே போய் வழிபாடு செய்தால் முத்தியில் இடமில்லாமல் முழுமோசம் ஆகி விடுமா? என்று இவ்வாறு பேசுகிற குப்பனுக்கு எதிர் வார்த்தை சொல்வார் இல்லை. எங்கும் குப்பனுக்கு ஜே, குப்பன் வாழ்க என்ற முழக்

கம். எனினும், கோயில் திறக்கப் படவில்லை. என்ன சொன்னாலும் கோயிலைத் திறக்கக் கூடாது. அவர்கள் வேண்டுமானால் வேறு கோயில் கட்டிக் கொள்ளட்டும் என்று ஊரில் பேசிக் கொள்கிறார்களே. சுப்புரெத்தினம் ஐயரே சாகும் வரையில் உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்து விட்டார். கொட்டை எழுத்துக்களில் அச் செய்தி தினசரியில் வெளி வந்து விட்டது.

●

மறுவாரம் மாஜிஸ்டிரேட்டு மாற்றப்பட்டார். புதிதாக வந்தவர் கூட்டங்களுக்குத் தடையுத்தரவு போட்டார். முன்னால் இருந்தவர், பொது ஜனங்களுக்கு உள்ள பேச்சுரிமையை நல்க வேண்டும் என்ற காரணத்தாலும், கோயிலிற் சென்று விடத்தான் வேண்டுமென்று கட்டாயப் படுத்திக் குழப்பம் விளைவிக்கவில்லை என்ற காரணத்தாலும், அமைதியாகப் பிரசாரம் செய்து பொது மக்கள் கண்ணைத் திறந்து விடுவதே குப்பன் நோக்கம் என்ற எண்ணத்தாலும் தலையிடாமல் இருந்தார். இப்பொழுது வந்தவரோ, அனுஷ்டானத்தில் உள்ளதையே பாதுகாப்பது தம் கடமை என்று நினைத்து, அதற்கு விரோதமாகச் செய்யப்படும் பிரசாரத்தில் ஊரில் கலகம் விளையும் என்று அஞ்சித் தடையுத்தரவு போடுவதாகச் சொல்லிவிட்டார். கூட்டங்கள் நிறுத்தப்பட்டன. குப்பனும் எங்கேயோ போனான்.

ஐந்து வருஷம் கழிந்து விட்டது. உபாத்தியாயர் சுப்புரெத்தினம் ஐயர் இப்பொழுது தலைமை ஆசிரியராகத் திகழ்கிறார். அவர் அமுலே ஒரு விதம். மாணவரெல்லாம் கிடுகிடென அஞ்சுகிறார்கள். ஆசிரியரெல்லாம் ஒத்துழைக்கக் காத்திருக்கிறார்கள். ஊரிலே மிக்க கௌரவத்தோடு வாழ்ந்து வருகிறார். இன்று அந்த உயர்தரப் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட பெரிய இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார். அவருக்கு ஐயரவர்கள் வீட்டில் விருந்து. விதவிதமான பண்டங்கள் தயாராகின்றன. தேங்குழலும் வெல்லச் சீடையும் அருமையாக அவர் மனைவி தயார் செய்திருக்கிறாள். அவர் தாயார் கொஞ்சமும் நோவாமல் சர்க்கரை நாரத்தம் பழத்தை உரித்துச் சுளையோடு சர்க்கரை கூட்டித் தட்டில் வைத்திருக்கிறாள். பையன் மெட்றிகுலேஷனிற் படிக்கிறவன் நல்ல சிகரெட்டும் ஸ்பென்சர் சோடாவும் வாங்கப் போயிருக்கிறான். வேளாள கிளர்க்கு பள்ளிக்கூடச் சாவியை இடுப்பிற் செருகிய வண்ணம் ஜேகபி கேக்கு வாங்கப் போயிருக்கிறார். "என்னடா, மடையா, நிற்கிறாய்! ஐயா பூட்சை அவிழ்த்துவிட வேண்டாமா?" என முதலியார் அட்டெண்டரை உருட்டுகிறார் ஹெட்மாஸ்டர். "வரணும்" எனச் சொல்லி அகத்துக்குரிய அம்மையார் வரவேற்கின்றார். "இங்கே கொடுங்கள்" என்று சொல்லி, இன்ஸ்பெக்டருடைய தொப்பியை வாங்கிப் பத்திரமாகச் சட்டை மாட்டியிற் சேர்க்கிறார் சுப்புரெத்தினம்.

"நம் ஊர்க் கோயிலைக் கட்டாயம் பார்த்து விட்டுத்தான் போக வேண்டும். மூர்த்தி ரொம்ப விசேஷம். பஞ்சலோகத்தால் ஆனது. மிக்க சிற்பத்திறம் வாய்ந்தது" என்கிறார் ஐயர். "நான் கொடிக் கம்பம் வரையில் தானே வரலாம். மேலே அழைத்துப் போவீர்களோ?" என்ற கேள்

விக்கு, "ஆட்சேபணை இல்லை. தர்மகர்த்தா நமக்கு ரொம்ப வேண்டியவர். ஒரு வார்த்தை சொன்னால் சாயங்காலம் தரிசனத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்ற விடை வந்தது.

போட்ட சட்டையைக் கழற்றாமல் சாமி தரிசனம் செய்துவிட்டு, விபூதி வாங்கி யணிந்து, சந்தனத்தை என்ன செய்வது என்று தெரியாமல் இரட்டை மாலையோடு திருப்புகிறார் இன்ஸ்பெக்டர். அவரது ஏந்திய கையில் உள்ள சந்தனத்தை ஐயர் வாங்குகின்றார், அது பிறகு பள்ளிக்கூடச் சேவகன் மார்பிற்குச் செல்கிறது. கற்கண்டுப் பொங்கற் பிரசாதத்தை கணக்கடி மேடையிற் போட்டுள்ள மேசையில் வைத்துக் கொண்டு சுப்புரத்தினம் ஐயர், இன்ஸ்பெக்டர், தருமகர்த்தா நல்லகுற்றாலம் பிள்ளை எல்லோரும் சாப்பிடுகிறார்கள். கோயிற்காரியதரிசி சாமி சாஸ்திரிகள் பீடா வாங்கப் போயிருக்கிறார்.



அன்றிரவு ரயில் நிலையத்தில் இன்ஸ்பெக்டரை வழியனுப்பப் பல ஆசிரியர்கள் வந்து நிற்கிறார்கள். டெபுட்டி இன்ஸ்பெக்டர்கள் பியூன்களுடன் வந்திருக்கிறார்கள். ஹெட்மாஸ்டர் சுப்புரத்தினம் ஐயர் பெரிய கும்பிடு போட்டு இன்ஸ்பெக்டரோடு கைகுலுக்கவே ரயில் புறப்படுகிறது. கமலாபுரியிலிருந்து வருகின்ற ஒருவர் அதே வண்டியில் உட்கார்ந்திருக்கிறார். ரயில் புறப்பட்டுச் சற்று நேரமானதும் "நீங்கள் கல்வி இலாகா போலும்!" எனத் தொடங்கினார். "ஆம். இந்த ஜில்லா இன்ஸ்பெக்டர்" என்ற பதில் வந்தது.

"உங்கள் பெயரைத் தயவு செய்து தெரிவிக்கலாமா?"

"என் பெயர் மிஸ்டர் கூப்பர் (Mr. Cowper.)"

"நீங்கள் மேல்நாடு சென்று வந்திருக்கிறீர்களோ?"

"ஆம்! அதற்கென்ன?"

"இங்கிலாந்திற்கா, அமெரிக்காவிற்கா?"

"இத்தாலி தேசத்திற்கு."

"இத்தாலியில் என்ன படித்தீர்கள்?"

"படிப்பதற்குப் போகவில்லை. இடிப்பதற்குப் போனேன். இந்தியப் படையில் ஒருவனாகச் சென்று யுத்தத்

தில் பங்கெடுத்துக் கொள்ளும் பேறு பெற்றேன்.''

"உங்கள் சொந்த ஊர்?''

"இந்த ஊர்தான்.''

"செந்நிலமா?''

"ஆம், ஆம்.''

"இங்கே கூப்பர் என்று ஒருவரும் கிடையாதே.''

"கூப்பர் என்று கிடையாது குப்பன் என்று உண்டு, என் பெயர் குப்பன்தான். யுத்தத்திற் சேர்ந்ததும் எங்கள் படைத் தலைவர் Cowper என்று கூப்பிட ஆரம்பித்தார். அந்தப் பேரே பலித்து விட்டது''

பிறகு, தன் கதையைக் கூப்பர் முழுதும் சொன்னார். எப்படித் தாம் ஊரை விட்டு ஓடியதும் படையில் சேர்ந்தார் என்பதையும், மெட்றிக் வரை படித்திருந்தவன் திரும்பி வந்ததும் எப்படி நேரே பீ.ஏ. பரீட்சை எழுத அரசாங்கம் அனுமதித்த தென்பதையும், எல்.டி. பரீட்சை யெடுக்காததால் குற்றமில்லை என விலக்குக் கொடுத்தது என்பதையும், தாம் சொந்த ஊருக்குச் சென்றதையும், கோயிலுட் சென்று சேவித்ததையும் எல்லாம் சொன்னார்.

கேட்டவர் "என்னை மன்னிக்க வேண்டும். நான்தான் முன் பேசக் கூடாது என்று உங்களுக்குத் தடையுத்தரவு போட்ட கனகரத்தின சாஸ்திரிகள். இப்பொழுது கமலாபுரியில் தாசில்வேலை. அங்கே வரும்போது கட்டாயம் காண வேண்டும். எனக்கு அந்த வித்தியாசம் எல்லாம் கிடையாது. உங்கள் சிவவடிவேலு என்னுடைய அத்யந்த சிநேகிதர். மதுரை பேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை யொட்டி அடுத்த வாரம் எங்கள் ஊரில் அவருக்கு ஒருபாராட்டு இருக்கிறது. நீங்களும் வரலாமே'' என்றார்.

"அடுத்த வாரம் இறுதியில் செந்நிலத்திற்குப் போய் என் சுற்றத்தாரை யெல்லாம் பார்க்க வேண்டும். அல்லாமலும், செந்நிலம் போர்டு உயர்தரப் பள்ளிக்கூடத்தைக் கல்லூரியாக உயர்த்தப் போவதால், தக்க ஆட்களைப் பார்த்து ஆசிரியராக நியமிப்பதற்குரிய குழுவினுள் என்னையும் ஒருவனாகச் சேர்த்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியின் கூட்டமும் அடுத்த வாரந்தான் இருக்கு



மென்று நினைக்கிறேன். மற்றொரு சமயம் வருகிறேன். வந்தனம்.'' எனக் கூப்பர் கூறினர். "சுப்பு ரத்தினம் இரண்டாம் வகுப்பு எம். ஏ. ஏதோ துரதிர்ஷ்டம், ஹைஸ்கூலில் அகப்பட்டுக்கொண்டார். அங்கிருந்தும் அடுத்த வருஷம் ஒய்வு எடுக்க வேண்டியிருக்கும். காலேஜில் ஆங்கிலப் பேராசியராக நியமிக்க முடியுமா எனப் பாருங்கள். வேலையை ஒழுங்காகப் பார்ப்பார். நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை'' என்றார் தாசில்தார். அதற்குள், அடுத்த ரயில் நிலையம் வந்து விட்டது. "ஆகட்டும் பார்க்கலாம்'' என இறங்கிப் போனர் மிஸ்டர் கூப்பர்.

சிறுமை

ஆர். கே. பார்த்தஸாரதி, எம். ஏ., எல். டி.

நிர்மலமான விசும்பினிடையே
நிலவுக்கதிர்கள் வீசியெங்கும்
கர்மவீர னெனவுலவும்
குளிர் மதிக் களங்கம் கூறுமெனே.

"மனம் போன் மானிடர் கதைக்கின்றார்
என்றனுட் பொருளறியாமல்;
எனவே யுன்னிடம் கூறிடுவேன்
என்றன் பிறப்பு வரலாற்றை.

"சுதந்திர வாழ்வே சொர்க்கமெனச்
சிறிதுந் தெரியா மதியென்பான்
கதிரவனொளியிற் கருத்தழிந்து
கேட்டனன் 'நின்னெளிதா' வென்று."

"எரிகதிரோன் 'மதி மதியில்லான்'
என்று மனத்துள் நகைசெய்து
'சரி' யெனத் தன்னெளி தருங்காலைச்
சிரங் குனிந் தேற்றனன் சிறுமதியும்."

"பிறரின் பிச்சையிற் பெரும் பேறு
பெறுவது பீடுடைச் செயலோ சொல்?
உறுவன வறியா மதிமூடன்
உயர்வெனப் பிறனெளியிற் களித்தான்.

"கனவிருள கற்றக் கதிரோனும்
காலையிற் பிடுங்கினன் தன்னெளியை,
மனமுறிந்தே மதி மூலையினில்
மன்பதை நகைத்திட மங்கினனே!"

"இன்று மிரந்தே கரம் நீட்டி
'இன்னெளி பரப்பும் நிந்தையிதேன்?''
என்றுலகோர்க்குக் கூறிடவே
இணைந்தேன் நீங்காக் களங்கமதாய்.

"எனவே சொல்வேன் மானிடனே
எத்துணைப் பெருமை எய்திடினும்
தனதல்லாத வெதையுமே நீ
தேடிச் சிறுமை தேடாதே!"

புத்தக ஆராய்ச்சி

[மணல் வீடு: (சிறு கதைகள்) ஆசிரியர்: சி. எஸ். செல்லப்பா; பிரசுரம்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை]

சிறு கதைகளுக்கு 'மதிப்புரை' எழுதுவதென்றால் ஒரு கஷ்டமான காரியம். ஏனென்றால், கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ் இலக்கியப் பூங்காவில் எண்ணற்ற கதை மலர்கள் பூத்துக் குலுங்கி ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விட்டன. எத்தனை எத்தனையோ விதமான உணர்ச்சிச் சித்திரங்களைத் தீட்டித் தந்திருக்கிறார்கள் கதாசிரியர்கள். இந்தக் கதைகளில் தராதரம் பிரிப்பதோ, மதிப்பிடுவதோ சற்று சிரமமான வேலைதான். இருந்த போதிலும் கதை உலகின் மன்னனென விளங்கிய, காலஞ் சென்ற கு. ப. ரா. ஒரு தரம், கதாசிரியர் செல்லப்பாவைப் பற்றி பின் வருமாறு சொன்னார்: "மறக்க முடியாத கதைகளைப் படிக்க வேண்டுமானால் செல்லப்பாவின் கதைகளை வாசியுங்கள். தித்திப்பும், திகைப்பும் உங்கள் நெஞ்சை அள்ளிக் கொள்ளும். திகைப்பு என்றால், மதுரம் கலந்த திகைப்பு: மனோகரம் கலந்த உன்னதமான மயக்கம் அது."

மேலும் கு. ப. ரா. சொன்னார்: "செல்லப்பாவின் சிருஷ்டிகள் சாமான்யப் பட்டவை அல்ல. கோமளமான உள்ளங்களிலிருந்து 'கல் நெஞ்சு' வரை — அவர் அறிவுக் கண்ணோடும் — கலைக் கண்ணோடும் ஊடுருவி நோக்கி அமர சிருஷ்டிகளாகப் படைத்து விடுகிறார்! அப்பா! மனித மனத்தை அவை என்னென்ன செய்யும் வல்லமை பெற்றவை தெரியுமா?" என்றார்.

கு. ப. ரா. சொல்வதை நாம் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறோம். பத்து வருஷங்களுக்கு முன்பே செல்லப்பா, கதைவானில் ஜொலிக்கும் நக்ஷத்திரமாகத் திகழ்ந்தார். அவருடைய கதைகளும், நாடகங்களும் அப்போதே மிகப் பிரபல்யப்பட்டன. தேர்ந்த அவரது நடை ஒரு 'புதிய பாதை'யையே வகுத்தது என்றாலும் மிகையாது. அதற்கு அத்தாட்சி சமீபத்தில் வெளியான 'மணல் வீடு.' நட்சத்திரங்கள் சிந்துவதைப் போலவும், அலைகள் ஒன்றோடொன்று இணைந்து கொஞ்சுவதைப் போலவும், இனிய ராகம் போலும் அமைந்த செல்லப்பாவின் கதைகள் பற்றி தனியான விமர்சனம் தேவையில்லை. செல்லப்பாவின் இலக்கியத் தொகுதி எது வந்தாலும் கண்டிப்பாக வாங்கிப் படிக்க வேண்டியது என்பதை வலியுறுத்திச் சொல்லுகிறோம்.

— ஆர். டி.



வாழ்க்கை

'செந்தாமரை'

★

வாச முள்ள ரோஜா
வாடி விட்ட பின்னர்
தூசு பட்ட தரையைத்
தொட்டு மூத்தச் செல்லும்

இனிய கீதம் எழுப்பி
இன்பம் கொட்டும் வீணை
தொனியே இன்றிச் சாகும்
தந்தி தெறித்து விட்டால்

வசந்த ருதுவைக் கண்டு
மயங்கிப் பாடும் குயிலும்
வசந்தம் நின்று விட்டால்
வாய்ய மூடிக் கொள்ளும்

நிலவைக் கண்டு துள்ளும்
நல்ல நீலக் கடலும்
நிலவு நின்று விட்டால்
நெஞ்சம் இருண்டு குமுறும்

வான வில்லின் அழகு
மேகம் இருக்கு மட்டும்
வானம் தெளிந்து விட்டால்
வில்லும் மங்கிப் போகும்

கொட்டும் வெய்யி லோடு
கொஞ்சு கின்ற காற்று
கொட்டும் மழையில் பொல்லாக்
கோர நடனம் பண்ணும்

கொள்ளை இன்பம் நல்கும்
காதல் தளிரை இங்கே
கிள்ளி எறிந்து விட்டால்
கரிந்து போகும் வாழ்க்கை

★

சொற் சித்திரம்:

காதலர்கள்

"ஸ்ரீரா"

வெய்யிலின் வேகம் தணிந்து, உறங்கிப்போன பின்னர் தோன்றும் வானக்காட்சியை உங்களில் அநேகம் பேர் பார்த்திருக்கலாம். அந்த வர்ண ஜாலத்தைக் கடலின் சுற்று வட்டாரத்தோடு இணைத்துப்பாருங்கள். கனவுக் கூடாரமாக ஒரு கற்பனை தோன்றும்.

அன்று நானும், டாக்டர் தர்மராஜனும் மணல் திட்டுகளையும், சிறு கொடிப் புதர்களையும் தாண்டிக் கடலை நோக்கிச் சென்றபோது இந்த வரவேற்புப் பத்திரத்தைத்தான் இயற்கை எங்களுக்கு சமர்ப்பித்தது.

வானத்துக் கீழெல்லையை வெட்டிப் பாய்ந்து வந்த சூரியனது செங்கதிர்கள் நீரில் மூழ்கி எழுந்து அலைக்குமிழிகளின் நுனியில் தோன்றிக் கண் சிமிட்டின. எங்களுக்கு முன்னே மண்டபம். அதன் உயரம் அதன் பழமையை நன்றாக விளக்கியது. செவ்வொளியின் மறையும் ஜலத்தில் இந்த மண்டபம் புனித நிழலாகத் தோன்றியது அப்போது. அந்த நிழலை நோக்கி நாங்கள் ஊர்ந்து சென்றோம்.

வாழ்வை சோகம் உன்னதமாக்குகிறது என்று கவிகள் சொல்லுவார்கள். இந்த சோகம் குறிப்பிட்ட அன்றாட சம்பவங்களில் மாத்திரம் தோன்றுவதில்லை. சிலைகள், மண்டபங்கள், வானம், அதோடு உறவாடும் கடல், கடலின் நாதம், தோற்றம், மரங்களின் இடைவெளியினூடே தெரியும் தூரத்துக் குடிசை — இன்னும் எத்தனையோ உயிரற்ற விஷயங்களின் நாடிகளில் இந்த சோகம் ரத்தமாகிப் புகுந்து விடுகிறது. இந்த சோகம்தான் அன்றும் அந்தச் சூழ் நிலையைக் கவ்விக் கொண்டிருந்தது.

நாங்கள் நடந்தோம். கூழாங்கற்களையும், கிளிஞ்சல்களையும் நாங்கள் நசுக்கிவிட்டோம்! பிறகு மண்டபத்துள் ஏறினோம். எதிர்ப் பக்கத்துக்குச் சென்று ஓரத்தில் உட்கார்ந்தோம். இரண்டடி தூரத்தில் கடலின் அலைகள் சுழன்று, பொங்கி, இருளைக்கக்கி, கீதம் பாடிச் சென்றன. இருளின் ஆட்சியில் உலகம் மங்கிப் போயிற்று.

அந்த இருளைக் கிழித்துக் கொண்டு அந்த வேளையில் மூன்று உருவங்கள் வான யாத்திரிகர்கள் போல் அணியாக வந்தன. கிட்ட நெருங்கி வந்த பிறகு அவர்கள் நாடோடிகளைப்போல் தோன்றினார்கள். யாருடைய கருணையை

யோ இரக்கப் போகிறவர்கள் போல் அவர்கள் தோற்றம் இருந்தது.

பிறகு அவர்கள் நாங்கள் இருந்த வரம்புக்கு வந்தார்கள். ஒரு நிமிஷம் நின்று கடலைப் பார்த்தார்கள். அவர்களது கண்கள் பக்க வெட்டில் ஒளிப் பிழம்புகளாக மின்னின. பிறகு அவர்களது தலைகள் வானை நோக்கி நிமிர்ந்தன. அங்கே ஒரு நட்சத்திரம் உலக மாந்தருக்கு சைகை காட்டுவதுபோல் ஜாடை செய்து கொண்டிருந்தது. அதன் நிலை அதற்கு இந்த கர்வத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

பிறகு அந்த மூன்று நாடோடிகளும் (!) நீண்ட பெரு மூச்சுகளை வெளிப்படுத்தினார்கள். அப்புறம் இடது பக்கம் திரும்பினார்கள். கோடிக் கம்பத்து மேடையருகே சென்று கடலை நோக்கிக் கொண்டு உட்கார்ந்தார்கள். அவர்கள் கடலையே பார்த்தார்கள். கடலின் எல்லையில் வானத்தைப் பார்த்தார்கள். அங்கே நீலம் திட்டுத் திட்டாகக் கிடந்தது.

இருள் மிகவும் அழகாக இருந்த அந்த வேளையில் முதல் பிச்சைக்காரன் பெருமூச்சுடன் பின்வரும் வரலாற்றைத் துடங்கிச் சொல்லிக் கொண்டே போனான்:—

"நான் முதலில் பிறந்திருக்க வேண்டும். அப்புறம் குழந்தையாகி, வாலிபனாயிருக்க வேண்டும்.

அந்த வாலிபத்திலேதான் என்னைத் தேடிக்கொண்டு காதல் வந்தது. அந்தக் காதலைத் தேடிக் கொண்டு காதலி வந்தாள்.

அந்தக் காதலி மிக அழகாக இருந்தாள். அவளது விழிகள், அன்பையெல்லாம் சேர்த்து அடைத்து வைத்திருந்த சிறு பேழைகள் போல் தோன்றின. செவ்விதழ்கள் தேன் கிண்ணங்களின் பட்டு வரம்புகளாகக் காட்சியளித்தன.

காதலை நான் அணைத்து என தாக்கிக் கொண்டேன். காதலியை அணைக்கப் போனேன். அவள் திடீரென்று நகர்ந்து கொண்டாள். அவளது கண்கள் என்னை உற்றுப் பார்த்தன. நான் கண்ணை மூடித்திறந்தேன். அவள் திரும்பி நடந்து கொண்டிருந்தாள். அவளைக் கூப்பிட எனக்கு நா எழவில்லை. நான் அவளைத் தொடர்ந்து நடந்தேன்.

பற்பல செடிகளையும் கொடிகளையும் தாண்டி அவள் போனாள். நானும் தாவிக்குதித்துப் பின் தொடர்ந்தேன். வழியிலிருந்த எண்ணற்ற முட்கள் என் கால்களைக் குத்தின. அவள் அலுப்பு சலிப்பின்றி நடந்து போனாள். தூரத்து லட்சியத்தை அடைவதில் முனைந்திருப்பவள் போல் அவள் காணப்பட்டாள். என் காதல் எனக்கு உயிரைக் கொடுத்து பலத்தைக் கொடுத்தது. நானும் தொடர்ந்து சென்றேன். பல பகல்கள் தங்கள் எல்லைகளை எங்கள்மேல் ஏவிவிட்டன. நாங்கள் வெற்றியுடன் சென்றோம் — அவள் முன்னே, நான் பின்னே.

குரு சிஷ்ய பாவத்தில் இது மாதிரி செல்வது எனக்குக் கஷ்டமாக இருந்தது. நான் ஓடினேன் தடுக்கி விழுந்தேன். அவள் ஒரு கணம் நின்றாள். அவளது பார்வையை நான் பானம் செய்தேன். பிறகு எழுந்தேன் — அப்புறம் என்ன? — நீண்ட யாத்திரை தான்.

கடைசியில் ஒரு மலைக்கு நாங்கள் வந்தோம். மரங்களின் அந்த

ரத்துள் நுழைந்து, வளைந்து சென்றோம். கதைகள் போன்ற புதர்களைத் தாண்டிச் சென்றோம். கவிதைகள் போன்ற அநேகம் குரல்களைக் கேட்டோம்.

அவள் சென்றாள் — வேகமாக நடந்தாள் — மறைந்து விட்டாள். நான் ஓடினேன். அவள் நுழைந்த குகை சிறிது தூரத்தில் தெரிந்தது. நான் இன்னும் துரிதமாகினேன். திடீரென்று எனக்குக் குறுக்கே அநேக குழந்தைகள் கும்பலாக நின்று மறித்தன. எனக்குக் கோபம் வந்தது.

"வழி விடுங்கள்" என்றேன்.

"எங்கள் கையில் இருப்பது என்ன?" என்று கேட்டன குழந்தைகள்.

"அவை திராக்ஷைப் பழங்கள். என் காதலியின் இதழ்களைப் போன்ற நிறங்கொண்டவை. நான் தேடிப்போகும் பழம் இவைகளைவிட உயர்ந்தது" என்று நான் மூச்சு விடாமல் பேசினேன்.

அக்குழந்தைகள் சிரித்து விட்டு "காதலி என்றால் யார்?" என்று கேட்டன.

"காதலி என்பது காதலின் ஒரு பாத்திரம்" என்று படபடப்பாகக் கூறினேன்.

"காதல் என்றால் என்ன?"

"என்னுள் அது இருக்கிறது!"

"எங்கே, காட்டுங்கள்!"

நான் கோபாக்கிராந்தனாகப் போனேன். என் கண்களில் தோன்றிய நெருப்பு அந்தக் குழந்தைகளைப் பயமுறுத்தியிருக்க வேண்டும். அவை விலகி வழி விட்டன.

நான் ஓடினேன். நினைவுப் பாதையில் நகர்ந்தேன். அவள் சென்ற திக்கில் வெகு தூரம் சென்றேன். அவள் நுழைந்த குகையைக் காணோம். எனக்கு இடி விழுந்தது போலாயிற்று. பிறகு உலகை நோக்கித் திரும்பினேன்.

"கடலுக்கு அப்பால் காதல் இருக்கிறது. உன்னுள் இல்லை" என்று அநேகம் குரல்கள் எக்களித்தன. அந்த எக்களிப்பு இளஞ்சிரிப்புடன் கதம்பமாகிக் கேட்டது.

பிறகு நான் கடலைத் தேடி அலைந்தேன். இந்த திக்கில் அலைகளின் இரைச்சல் கேட்டது. நான் விரைந்து வந்தேன். அப்புறம் உங்களை ஒருவர் பின் ஒருவராகச் சந்தித்தேன். நான் கடலுக்கப்பாலுள்ள காதலைத் தேடிப் போகிறேன்."

இந்த இடத்தில் முதல் பிச்சைக்காரனது வரலாறு முடிந்தது. அவன் எழுந்தான். அவனது உருவம் இயற்கைத் திரையில் ஒட்டப்பட்டிருந்த சித்திரம் போன்றிருந்தது. அவன் கடலை நோக்கி நகர்ந்தான். தூரத்து அலைகளின்மேல் அவன் உருவம் சில நிமிஷங்கள் தெரிந்தது. பிறகு மறைந்து போயிற்று.

●

மற்ற இரண்டு பேரும் இதை அரை நிமிஷம் கவனித்தார்கள். பிறகு இரண்டாவது நாடோடி பேச ஆரம்பித்தான்:—

"என் கதை இதைவிட ருசிகரமானது. நான் வாலிபனான பிறகு காதலைத் தேடிக் கொண்டு போனேன். அப்போது காதலியைப் பார்த்தேன். அவள்

என்னை 'வாருங்கள்' என்று அழைத்தாள். நான் வேகமாகப் பின் தொடர்ந்தேன். அவள் என்னைச் சாந்தப் படுத்தி அழைத்துக் கொண்டு போனாள். என் படபடப்பு ஆனாலும் அடங்க வில்லை.

நான் ஆவேசத்துடன் சென்றேன். என் உணர்ச்சிகள் என்னைத் துரத்தின.

பகல்களையும், இரவுகளையும் பறக்க விட்டுக் கொண்டே நாங்கள் சென்றோம். வானத்து மின்மினிகள் எங்கள் யாத்திரைகளை அலங்கரித்தன.

கடைசியில் ஒரு மலை வந்தது மனிதனைப் போன்ற மரங்களையும், ராக்கதர்களைப் போன்ற புதர்களையும் நாங்கள் கடந்து சென்றோம். நான் என் நடையில் தடுமாறத் துடங்கினேன். முட்கள் என் ரத்தத்தைக் குடிக்கப் பார்த்தன. என் கோபத்தைத்தான் அவை அதிகம் குடித்திருக்க வேண்டும்.

அவள் முன்னேறி விட்டாள். பிறகு தூரத்தில் ஒரு குகைக்குள் மறைந்ததைப் பார்த்தேன்.

திடீரென்று அநேகம் குழந்தைகள் திராட்சைப் பழங்களுடன் என்னை மறித்தன. என்ன வென்று கேட்டேன்.

"இங்கே எதற்காக வந்தீர்கள்?" என்று அவை கேட்டன.

"காதலியைத் தேடிக்கொண்டு" என்றேன்.

"காதலி என்றால்?"

"காதலைப்போல் அச்சாக அப்படியே இருப்பாள்"

"காதல் என்றால்?"

"எனக்கு வழி விடுங்கள், காதலும், காதலியும் இரட்டையர்கள்"

அப்புறம் அக்குழந்தைகள் வழி விட்டன. நான் முன்னேறினேன். குகையைப் பார்த்தேன். குகையின் வாயிலை அடைந்தேன். அதன் கதவைத் தட்டினேன். எண்ணற்ற முறைகள் கூச்சல் போட்டேன். பிறகு காலினால் உதைத்தேன்.

ஒன்றும் உபயோகமில்லை. திரும்பினேன். சிரிப்பொலி என் காதுகளைத் துளைத்தது. அத்துடன் ஒரு வாக்கியம் என் காதுகளில் விழுந்தது. "காதல் கடலுக்கப்பால் இருக்கிறது" என்று அது தொனித்தது.

நான் வேகமாகக் கடலைத் தேடிக்கொண்டு கிளம்பினேன். இந்தத் திக்கில் ஒரே நீலமாக இருந்தது. இது கடலாக இருக்கலாம் என்று நினைத்தேன். வழியில் மறைந்தவனையும், உன்னையும் ஒருவர்பின் ஒருவராகப் பார்த்தேன்.

நான் யாத்திரை கிளம்பும் காலம் வந்து விட்டது. நான் கடலைத் தாண்டப் போகிறேன்.

இரண்டாமவன் உயிருள்ள பதுமைபோல் நகர்ந்தான். கடலை நோக்கி அவன் ஓடினான். பிறகு கடலின் ரகசியம் அவனையும் மறைத்து விட்டது.

இந்த கட்டத்தில் எங்கள் ரோமம் குத்திட்டு நின்றது எங்களுக்குத் தெரிந்தது. கடல் மாயப்படுக்கையின் வெடிப்புகளைப் போன்ற, அலைகளை வீசிப் பொங்கிற்று. வானம் எப்போதும்போல் தன் சிற்றுடையைக் கடலில் நனைய விட்டுக் கொண்டிருந்தது.

எஞ்சியிருந்த ஒருவனைப் பார்த்தோம், அவன் சாந்தமுடன் இருந்தான். அவன் கண்களில் அன்பும், ஏக்கமும் நிறைந்து இருந்தன.

●

அவன் தனக்குத் தானே பின்வருமாறு பிரலாபித்தான்:—

என் கதையை இந்த மண்டபம்

கேட்கட்டும். அதுவே எனக்குப்போதும்.

நான் வாலிபனுனவுடன் காதலியைத் தேட ஆரம்பித்தேன். எங்கெல்லாமோ அலைந்து திரிந்தேன். கடைசியில் மலையொன்றை அடைந்தேன்.

ஒரு இடத்தில் பல குழந்தைகளை நான் பார்த்தேன். அவை விளையாடிக் கொண்டிருந்தன. என்னைக் கண்டவுடன் ஓடி வந்தன. அவை என்னைப் பரிவாகப் பார்த்தன. எவ்வளவு அன்பை நான் அவைகளின் மேல் அள்ளி வீசினேன்.

"எங்கே வந்தீர்கள்?', என்று அவை கேட்டன.

"காதலியைத் தேடி வந்தேன்" என்றேன் நான்.

"காதலி, காதல் இதெல்லாம் என்ன? உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று அவை கேட்டன.

"காதலி, காதல் இரண்டும் ஒரு உடலில் கூடியிருக்கும் இரண்டு உயிர்கள். ஒன்று அன்பைப் பெற்றுக் கொள்ளும் சக்தி. மற்றது அன்பைக் கொடுப்பது" என பதில் கூறினேன்.

அவை வழி விட்டன, சாந்தமாக நான் முன் சென்றேன். ஒரு குகையைப் பார்த்தேன். கதவை இடித்தேன்.

கதவு திறந்தது. காதலி வந்தாள். அவள் அன்பாக என்னை நோக்கினுள். நயன வாசகம் சில நிமிஷங்கள் தொடர்ந்து நடந்தது.

திடீரென்று அவளது குவளைக் கடல்களில் நீர் நிரம்பியது. அங்கே உணர்ச்சி அலைகள் துள்ளிச் சிலிர்த்தன.

அவள் பின் வருமாறு கூறினுள்:—

"நான் இளமை தாண்டி விட்டேன். எனது வளர்ச்சி என்னை அமுக்கி விட்டது. பெற்றுக் கொள்ளும் சக்தி, கொடுக்கும் சக்தி இரண்டும் என்னை விட்டு மறைந்துவிட்டன. காலம் என்னை சோதித்து விட்டது."

நான் சோர்ந்து போய் அவளைப் பார்த்தேன். அவள் சாந்தமாக என்னை நோக்கினுள். பிறகு குகையை விட்டு வெளிக்கிளம்பினேன். நடுவில் ஒரு குரல் கேட்டது.

அது, "மனுேயோகிகள் வசிக்கும் பிரதேசம் கடலுக்கப்பால் இருக்கிறது" எனச்சொல்லிற்று.

நான் கடலை நோக்கி வந்தேன். வழியில் இருவரைச் சந்தித்தேன். நானும் அவர்களைத் தொடரப் போகிறேன்"

●

மூன்ருவது உருவமும் எழுந்தது. தூரத்தில், வானக்கோடியில், நடனம் கற்றுக்கொள்ளும் இளங் குழந்தையைப் போல் கிருஷ்ண பட்சத்து சிறு நிலவு உதித்தது. அந்த அபூர்வப் பிச்சைக்காரனும் கடலில் மறைந்து போனுன்.

நானும், டாக்டர் தர்மராஜனும் எழுந்தோம். உலகத்திற்கு வந்து விட்ட என் மனம் "கடலில் முழுகியவர்களுக்கு முதல் சிகிச்சை என்ன?" என்று கேட்டது!

"இவர்கள் அபூர்வமான நாடோடிகள்" என்ருர் தர்மராஜன்.

நான் மௌனமாக நடந்தேன். அவரும் தொடர்ந்தார்.

கசிந்த கண்ணீர்

[சே. வண்ணக்கண்]

மாலை நேரம். களத்து வீட்டுத் தாழ்வாரத்தைப் பிடித்தபடியே வானத்தை நோக்கினார் ஆண்டியப்ப கவுண்டர். சக்கிலி சுப்பன் கிழிந்த தும்பியை மூட்டிக்கொண்டிருந்தான். காங்கயத்துக் கவலை யெருதுகள் மாமர நிழலில் அசை போட்டுக்கொண்டிருந்தன. தாழ்வாரத்தை விட்டுவிட்டு, முகவாயை பிடித்தபடி கிணற்றை நோக்கி நடந்தார் ஆண்டியப்ப கவுண்டர். கிணற்றினுள் எட்டிப் பார்த்தார். அடுத்தநாள் பழைய சோற்று நேரம் வரைகூட தண்ணீர் காணாது. சப்பையும், பிஞ்சுமாய் தண்ணீருக்கு ஏங்கி நிற்கும் பருத்தி காட்டை கண்ணுக்கெட்டிய தூரம் பார்த்தார். ஒரு லேசான பெரு மூச்சு விட்டுவிட்டு, பிள்ளையார் அமர்ந்திருந்த அரசமர மேடையில், சிரம பரிகாரம் தீர உட்கார்ந்தார்.

பருவ மழை காலா காலத்தில் பெய்து ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன. காலம் கடந்து பெய்யும் மழையும் தூத்தலும், தூரலுமாகவே இருந்து வந்தது. குடியானவர்கள் மனம் சோர்ந்து வானத்தை நோக்கி வறுமையில் வாழ்ந்து வந்தார்கள். ஊமத்தம்பட்டி கிராமமும் இந்த வறுமையின் வசமாகி ஊசலாடிக் கொண்டிருந்தது. ஊமத்தம்பட்டி மணியகாரர் ஆண்டியப்ப கவுண்டர், நல்ல மனிதர். ஊரில் அவருக்குச் செல்வாக்கு அதிகம். மழை, விலை, விளைவு, இம்மூன்றும் ஏமாற்றியதால் வரும்படி குறைவு. ஆகவே கவுண்டரும் மற்ற குடியானவர்களைப் போலவே கடனாளியாக வேண்டி வந்தது. கடன் பூமிகளை பந்தகம் செய்து கொடுக்க வேண்டிய நிலைமையில் இருந்தது. இந்நிலையில் தன் ஒரே பெண் சின்னம்மணிக்குக் கலியாணம் வேறு நிச்சயம் செய்துவிட்டார். கோட்டைமேடு என்ற கிராமத்து பெரிய தனக்கார ராமசாமிக் கவுண்டர் செல்வந்தர். ஆறுமுகம் என்ற அவருடைய தமையன் கல்வியில் உயர்தரப் பட்டம் பெற்றவர். அழகுள்ள அவ்வாலிபனுக்கும் சின்னம்மணிக்கும் விவாகம் நிச்சயம் செய்து கலியாணத்திற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஆண்டியப்ப கவுண்டருக்கு சின்னம்மணி ஏகபுத்திரியானதால் கலியாணத்தை வெகு விமரிசையாக நடத்தத் திட்டம் போட்டிருந்தார். குறைந்தது 4000/– ரூபாயாவது வேண்டும்.

இவ்விரு சங்கடமான பிரசினைகளுக்கு நடுவில் கவுண்டர் அவதிப்பட்டுக்கொண்டு வானத்தை நோக்கி வருந்திய வண்ணம் அரசமரத்தடியில் உட்கார்ந்திருந்தார்.

வானத்தை நோக்கியிருந்த பார்வையைக் கலைத்து வீட்டிற்குப் புறப்படக் கவுண்டர் எழுந்த பொழுது இருட்டி விட்டது. கிராமத்திலிருந்து ஐந்தாறுபேர் கூட்டமாக அவரிடம் விரைந்து வந்து கொண்டிருந்தனர். அவர்கள் யாவரும் சேரி வாசிகள். வந்த எல்லோரும் நெடுக பூமியில் விழுந்து "எஜமான்" என்று கும்பிட்டு எழுந்து நின்றார்கள். "எங்கடா வந்தீர்கள்." என்று அதிகார தோரணையில் கேட்டார் கவுண்டர். கூட்டத்தில் இருந்த மாசானிச்சக்கிலி "எஜமான்! நம்ம சங்கிலி வீட்டிலிங்க, ரெண்டு

மூணு எலி விழுந்து செத்துக் கிடக்குதுங்க. நாங்க எல்லோரும்மா களேவெட்டுக்குப் போயிட்டுங்கோ; இப்பத்தா வந்தமுங்க அவ, ஆதீனத்திலே சொல்ல வேண்டாமுண்ணு சொன்னுங்க. நாங்கதானுங்க அது பிளேக்கு எலியாயிருக்குமுணு ஆதீனத்திலே சொல்ல வந்தமுங்க'' என்ருன்.

கவுண்டர்:— கிராமம் இருக்கிற நேர்த்தியில், இதுவேரு. நீங்கள் எல்லோருமே எலியைப் பார்த்தீர்களாடா?

மாசானி சக்கிலி:— ஆமாங்க எஜமான்.

"அப்படியா? சரி வாங்கடா பார்க்கலாம்'' என்று ஆண்டியப்ப கவுண்டர் அவசரமாய் நடந்து வீட்டிற்கு வந்தார். தலையாரி வெங்கிட்டுவை விட்டு சங்கிலிச் சக்கிலியை கூட்டிவரச் செய்து விசாரித்தார்.

சங்கிலி சக்கிலி:— எஜமான் காப்பாத்துங்க. நா, களே வெட்டு முடிஞ்சு பொழுதுசாய வூட்டுக்கு வந்தனுங்க. தண்ணிப் பானேக் கிட்ட மூணு எலி செத்துக் கிடந்ததுங்க. நா பயிந்து மாசானி, முருக இவுங்களே கூட்டியாந்து காட்டுனனுங்க. அவுக "இது பிளேக்கு எலி; தொடாதேன்னு சொல்லிப் புட்டு, எஜமாங்கிட்டச் சொல்ல ஓடியாந்தாங்கொ. நா பயந்துங்க அதெ எடுத்து குப்பை மேட்டுலே எறிஞ்சு போட்டேனுங்க'' என்று சொன்னன்.

சங்கிலி சொல்லி முடிந்ததும் கவுண்டனுக்குக் கோபம் வந்து விட்டது. எலிகளேக் கையால் எடுத்துக் குப்பைமேட்டில் போட்டதற்கு அவன் நான்கு பூசைகள் கொடுத்து விட்டு, அவனேயே அவ்வெலிகளே ஒரு பானேயில் போட்டு குப்பை மேட்டில் மூடிவைக்கச் செய்தார். பிறகு தலையாரி வெங்கிட்டு மூலம் கிராம சுகாதார அதிகாரிக்குத் தகவல் கொடுத்தார். சுகாதார அதிகாரியும் அடுத்தநாள் காலையில் வருவதாகச் சொல்லி அனுப்பினர்.



பொழுது புலர்ந்தது. அதிகாலையிலெழுந்து காலைக் கடன்களையெல்லாம் முடித்து விட்டு, சுகாதார அதிகாரியின் வருகைக்காகக் காத்திருந்தார் கவுண்டர். தலையாரி வெங்கிட்டு அவசர அவசரமாய் ஓடி வந்து வள்ளுவர் தெருவில் இரண்டு மூன்று வீடுகளில் செத்த எலி விழுந்து கிடப்பதாய்த் தெரிவித்தான். ஆண்டியப்ப கவுண்டருக்கு மனதில் பல எண்ணங்கள் தோன்றியது. கலியாணப்பந்தல் போட்டாயிற்று. முகூர்த்த நாட்களுக்கு ஆறு நாட்கள் இருக்கின்றன. சாமான்கள் வந்து கொண்டிருக்கின்றன. கள்ள மார்க்கட் அரிசி வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டது. மணமகளுக்கு நகைகள் வீட்டிலேயே ஒரு "தட்டான்" செய்து கொண்டிருக்கிறான். இவ்வித நிலையில் கடன் வாங்க வேண்டும். அதற்காக ஏற்பாடு செய்ய தரகன் நஞ்சப்ப செட்டி நகரத்திற்குச் சென்றிருக்கிறான். கிராம நிலை அவருக்குப் பயத்தை ஏற்படுத்தியது. கலியாணத்தை ஒத்தி வைக்கலாம். ஆனால் கௌரவம்...? இவ்வித எண்ணங்களால் மெய் மறந்திருந்த கவுண்டரை சுகாதார அதிகாரியின் வருகை கலைத்தது.

விசாரணை ஆரம்பம் ஆயிற்று. முதலில் சேரிக்குச் சென்றார்கள் குப்பை மேட்டில் கிடந்த எலிகளை சுகாதார அதிகாரி பார்வையிட்டார். தீரவிசாரித்ததில் ஏற்கனவே நாலைந்து குடிசைகளில் எலி விழுந்தன வென்றும், நான்கு பேர்கள் கடும் ஜுரத்தால் கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பதும் தெரிந்தது. பிறகு வள்ளுவர் தெருவுக்குச் சென்றார்கள். அங்கு எலிகளைப் பரிசோதித்த பின்னர், ப்ளேக் வியாதி கிராமத்தில் பரவி விட்டதென அபிப்பிராயப்பட்டார் சுகாதார அதிகாரி. தான் மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு செய்து வேண்டிய மருந்துகளைப் பெற்று வருவதாகச் சொல்லி விடை பெற்றுச் சென்றார். கவுண்டர் உற்சாக மிகுந்தவராக வீட்டிற்குத் திரும்பி வந்தார். அதற்குள் தரகன் நஞ்சப்ப செட்டி நகரத்திலிருந்து திரும்பி வந்து, கடனுக்கு ஏற்பாடு செய்திருப்பதைத் தெரிவித்தான். சிறிது நேரம் யோசனை செய்தபின்னர் அன்றைய பொழுது சாய்வதற்குள், நஞ்சப்ப செட்டியுடன் சென்று போய் 5000 கடன் வாங்கிக் கொண்டு ஊர் திரும்பினார்.

ஊர் திரும்பிய கவுண்டர் கிராமம் கலவரப்பட்டு அல்லோல கல்லோலமாய் இருப்பதைப் பார்த்தார். கட்டை வண்டிகள் சுறுசுறுப்பாய்ச் சாமான்களை எடுத்துச் சென்றவண்ணம் இருந்தன. எங்குபார்த்தாலும் சத்தமும் சந்தடியுமாய் இருந்தது. மெதுவாகச்சென்று வீட்டினுள் நுழைந்த கவுண்டருக்குத் துக்ககரமான செய்தி ஒன்று காத்திருந்தது. கவுண்டர் வீட்டு உக்கிராண அறையில் ஒரு எலி செத்துக்கிடந்தது. கவுண்டரின் மனைவி சாமர்த்தியசாலி. வீட்டு வேலைக்காரருக்குக்கூடத் தெரியாமல் அவ்வெலியை மறைத்து வைத்திருந்து மணியகாரரிடம் காட்டினாள். விதியென்ற மொழியில் பலத்த நம்பிக்கை கொண்டிருந்த கவுண்டர், ஒருவருக்கும் தெரியாமலேயே சங்கதியையும், எலியையும் புதைத்து விட்டார்.

நான்குநாட்கள் கழிந்தன கவுண்டர் வீட்டில் உறவினர் கூட்டம் நிறைந்திருந்தது. மாப்பிள்ளை வீட்டார் வந்து விட்டார்கள். கலியாண அலைச்சலால் கவுண்டர் சலிப்புடன் காரியத்தைப் பார்த்து

வந்தார். விடிந்தால் முகூர்த்தம். எல்லாம் சரியாய் நடக்கவேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்தித்தார் கவுண்டர். பிரார்த்தனை கடவுளுக்கு எட்டியதோ இல்லையோ விதி மட்டும் விபரீதமாய் விளையாடத் தொடங்கிற்று. "முகூர்த்தத்திற்கு ஆறு-நாழிகை இருக்கிறதே. சற்றுக் கண்ணயர்ந்தால் தேவலை; தலை வலி சொல்ல முடியாது" என்று சொல்லி, மணவறைக்குச் சற்று தூரத்தில் ஒரு ஓரமாகப் படுத்தார் கவுண்டர்.

கிராமத்தில் எல்லா வீடுகளிலும் எலி விழ ஆரம்பித்து விட்டது. கிராமம் கலைந்து காடுகளுக்குக் குடி போய் விட்டது. ஆண்டியப்ப கவுண்டர் வீட்டுக் கலியாணத்தை ஒட்டி சிலர் மட்டும் கிராமத்தில் இருந்து வந்தார்கள். அதுவும் கவுண்டருக்காக. தினசரி "அங்கு எலி விழுந்திருக்கிறது. அவன் இறந்து விட்டான்" என்ற பேச்சே பலமாக இருந்தது.

முகூர்த்த நேரம் நெருங்கி விட்டது. மாப்பிள்ளை அலங்காரத்தோடு தயாராய் இருந்தார். மணமகளும் அப்படியே.

சம்மந்தி ராமசாமி கவுண்டர் மட்டும் வீதில் நின்று வானத்தை நோக்கிவிட்டு, பக்கத்தில் நின்றவர்களிடம் "இன்னும் சிறிது நேரத்தில் பலமான மழை வந்துவிடும்" என்று அபிப்பிராயப் பட்டார். காற்றடிப்பது நின்று விட்டது. வானம் ஒரே இருட்டாக, பார்க்க பயங்கரமாய் இருந்தது. "ஐந்து வருஷமாய் ஏமாற்றிய மழை இன்றுகொட்டி தன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளும்போல் இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே ராமசாமிக் கவுண்டர் வீட்டினுள் சென்று ஆண்டியப்ப கவுண்டரை "மாமா மாமா எழுந்திருங்கள் முகூர்த்தநேரம் சமீபித்துவிட்டது" என்று எழுப்பினார். எழுப்பின ராமசாமிக் கவுண்டர் எகிரிக் குதித்து 'ஹா' வென்றலறினார். பைரவி ராகம் நிறுந்தப்பட்டது. ஆண்டியப்ப கவுண்டருக்கு நினைவு இல்லை. தேகம் நெருப்புப்போல் தகித்தது. கைகால்கள் போட்டது போட்டபடி கிடந்தன. ஒரே கலவரம். வைத்தியர் வரவழைக்கப் பட்டார். அவரும் ஏதோ செய்தார். ஏக அழுகுரல். வைத்தியரின் சாமர்த்தியத்தாலோ, விதியின் முடிவாலோ, ஆண்டியப்ப கவுண்டர், எல்லோருக்கும் சிறிது மகிழ்ச்சி யூட்டும் வண்ணம் கண்களைத் திறந்து சுற்றிலும் பார்த்தார். அவர் யாருக்காகவோ தேடுவதாகத் தெரிந்தது. பிறகு மிக சிரமத்துடன் கைகளால், பேச முடியவில்லையென்றும், மகளையும், மாப்பிள்ளையையும் பார்க்க விரும்புவதாகவும் ஜாடைசெய்தார். கண்ணீரும் கம்பலையுமாயிருந்த மணப்பெண் மணமகனுடன் வரவழைக்கப்பட்டு, கவுண்டர் அவ்விருவர் கைகளையும்எடுத்துத் தன் நெஞ்சின் மீது வைத்துக் கொண்டார். சிறிது கழிந்து, ஜாடையால் மணமகனிடம் மாங்கல்யத்தைக் கொடுக்க சொன்னார். மாங்கல்யத்தைக் கையில் வாங்கி மணமகனிடம் கொடுத்து, தன் பிரிய மகளின் கழுத்தில் கட்டச்சொன்னார். முகூர்த்தம் முடிந்தது. கவுண்டர் புன்முறுவல் பூத்தார் கைகூப்பித் தொழுதார். அவர் கண்களிலிருந்து இரண்டு துளி கண்ணீர் கசிந்தது. கண்கள் சொருகின. மறு நிமிஷம் ஒரு விக்கல். ஆண்டியப்ப கவுண்டரின் உயிர்ச் சுடர் அணைந்து விட்டது, பிளேக்கினால்தான்!

அதுவரை வெட்டாப்பு விட்டிருந்த மழை, பலமாகப் பெய்ய ஆரம்பித்தது!

[சரஸ்வதி தியாகராஜன்]

★

"பட்டபாணரே! இந்தச் செந்நிறச் சமாதியில் நிரந்தரமாகத் துயிலும் புனித ஆத்மா எது? தங்கள் கண்ணீரால் அர்ச்சிக்கப் படும்படியான அவ்வளவு புண்யம் செய்த ஜீவனும் ஒரு காலத்தில் இருந்ததா?"

பட்டபாணன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தான். "அரசே! நீர் இளைஞர்! உமக்கு இந்த சமாதியைப் பற்றிய சரித்திரம் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆயினும் இதைப் பற்றி உமது தந்தை உம்மிடம் சொல்லாமற் போனது ரொம்ப ஆச்சரியமே!"

அரசனின் முகம் சட்டென்று மாறுபட்டது, எக்காரணத்தை முன்னிட்டும் மணி மகுடம் தனக்குச் சூட்டப்படும் வரையில் அந்தப்புரத்தைச் சார்ந்த இந்த இடத்திற்குத் தான் வரக்கூடாதென்று தந்தை சத்தியம் வாங்கிக் கொண்டது அவன் நினைவுக்கு வந்தது. தந்தையின் அந்த அபிலாஷையைத் தான் சரிவரப் பூர்த்தி செய்ததும், இன்று முடி தரித்த மன்னன் என்ற ஹோதாவில் தான் அவ்விடத்திற்கு வந்ததையும் நினைத்த பொழுது அவனுக்குச் சிறிது வெட்கமுண்டாயிற்று.

அரசனின் மாறுபட்ட முகத்தைக் கவனித்த பட்டபாணன் எழுந்திருந்தான். "ராஜபுத்திரா! என்னை மன்னியும். நானே தேசாந்திரி. வெகு காலத்திற்கு முன்பே இந்நகரை விட்டுச் சென்று விட்டேன். ஏதோ பழைய ஞாபகம் என்ற பாசக் கயிறு என்னை இங்கு இழுத்துக் கொண்டு வந்தது. உம் மனதை

வீணைக நோகச் செய்து விட்டேன்"

அரசன் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான். "பாணரே! உம்மை லேசில் விடப் போவதில்லை. இந்தச் சமாதியின் சரித்திரத்தை எனக்குச் சொல்ல இஷ்டமில்லாததினுல்தான் என்னை இங்கு வரக்கூடாதென்று தந்தை தடுத்து விட்டார். நீர் அதை எனக்குக் கட்டாயம் சொல்லத்தான் வேண்டும்" என்முன் பிடிவாதமாக.

அரசனின் பிடிவாதம் பாணன் மனதை இளகச் செய்தது. மீண்டும் சமாதியின் அருகில் அமர்ந்து கொண்டான். "அரசே! கடைசியில் நீர் ஆச்சரியப்படுவீர்! அல்லது துக்கமடைவீர்! அதற்கு மனதைத் தயார் செய்து கொள்ளுங்கள்!" என்று சொல்லி ஆரம்பித்தான், சரித்திரத்தை.

●

இப்பொழுது எங்கிருக்கின்றதோ எனக்குத் தெரியாது. அப்பொழுது அது அரண்மனை காட்சி சாலையில் வைக்கப்பட்டிருந்தது. அற்புதமாக சிருஷ்டிக்கப்பட்ட ஆடும் மயிலின் சிலா ரூபம். மனித முகம் படைத்த அந்த அதிசய சிலையை வடிக்க ராமவர்மனுக்குப் பனிரண்டு மாதங்கள் பிடித்தன. ஆனால் அந்த அழகிய முகத்தில் என்றுமழியாத ஒரு பின்னத்தை ஏற்படுத்த அரசனுக்குப் பனிரண்டு வினடிகள்கூட ஆகவில்லை!

ராமவர்மன் பெயர் பெற்ற சிற்பி!

ரஞ்சனு, அரசனின் ஒரே சகோதரி.

இவர்களின் காதல் சித்திரம் தான் இந்த சமாதியில் அடங்கியிருக்கிறது.

கார்காலம்.

வானத்தைக் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன. அன்று பிற்பகல் மிகுந்த வெப்பமாக இருந்ததால் அவசியம் பலத்த மழை வருமென்று யோசித்தவாறு நான் பளிங்கு மண்டபத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்தேன்.

இலை உதிரும் தறுவாயில் இருந்த குமுதக் கொடிகள் மழையின் வரவை மிக்க ஆவலோடு எதிர் நோக்கின. நெடுநாளாகத் தன்னை ஏமாற்றிக் கொண்டிருக்கும் நாதன் இப்பொழுது வரப் போகிருன் என்ற செய்தி நாணமிகுந்த மல்லிகையைத் தலை குனிய வைத்தது. தோட்டத்தில் ஒவ்வொரு செடியும், புல்லும், பூண்டும் மழையை இவ்வளவு ஆவலோடு எதிர் நோக்குவதைக் கண்ட எனக்கு மிக்க ஆச்சரியமாயிருந்தது.

"இங்கிருக்கின்றீரா, பாணரே! உம்மை எங்கெல்லாம் தேடிக் கொண்டு வருகிறோம்!" என்றுரைத்துக் கொண்டே ராமவர்மன் வந்தான். அவனுக்குப் பின்னுல் அரசரும் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

"ரஞ்சனு கவிதைகளைச் சரிவரக் கற்று வருகிருளா?" என்று என்னைக் கேட்டார்.

"வானத்தைப் பார்த்தால் இன்று வரப்போகும் மழையை பூமியே தாங்காதுபோல் தோன்றுகிறது!" என்முன் ராமவர்மன்.

"இளஞ்சிற்பியே! கல்லைச் செதுக்குவதுபோல் சொல்லையும்

செதுக்குகிறீர்களே!" என்றேன் ஹாஸ்யமாக.

அப்பொழுது அரசன் "அதோ பாரும் பாணரே! அதோ பாரும்!" என்று ஒரு இடத்தைச் சுற்றிக் காண்பித்தார்.

நாங்கள் பார்த்தோம். அற்புதமாகத் தோகையை விரித்து ஆடிக் கொண்டிருந்தது ரஞ்சனாவின் மயில். அன்னத்தைப் போன்ற நடையும் சிம்மத்துக்குரிய கம்பீரமும் கலந்து தோன்றின அந்த நடனத்தில். போதை நிறைந்த இளமையில் தன்னை மறக்கும் மங்கையைப்போல் கார் காலத்து அந்தியில் தன்னையே மறந்து ஆடிக்கொண்டிருந்தது அந்தமயில். பார்க்கப் பார்க்கத் திகட்டாத காட்சி!

அரசன் ராமவர்மனின் தோளைப் பிடித்துக் குலுக்கினான். "சிற்பியே! உமது அடுத்த சிலைக்கு ஒரு உன்னதமான பொருள் கிடைத்து விட்டது! உமது கைத் திறமையை உலகோர்க்கு எடுத்துக் காட்ட ஒரு அரிய சந்தர்ப்பம் வந்து கொண்டிருக்கிறது! நாளைக்கே ஆரம்பித்து விடுங்கள்! இந்த இடத்திலேயே சௌகரியப் பண்ணித் தருகிறேன்!" என்று அழுத்தமாகச் சொன்னார்.

எங்களுக்கும் அது ரொம்பப் பிடித்திருந்தது. ராமவர்மன் அரசனை வணங்கி விட்டுச் சென்றான். நானும் அரசனும் நெடுநேரம் வரை அந்த மயிலின் அதிசய நடனத்தைப் பார்த்து விட்டு அரண்மனைக்குத் திரும்பினோம்.

கவிக்கும் பைத்தியத்திற்கும் நெருங்கிய பொருத்தமுண்டு என்று சொன்னால் நான் வருத்தப் படமாட்டேன். சில சமயம் எனக்குப் பைத்தியக்கார எண்ணங்கள் தோன்றுவதுண்டு. மழைக்கு முன் தோட்டத்தைப் பார்த்தேன். மழைக்குப் பின்னும் பார்க்க வேண்டும் என்ற ஒரு ஆசை எனக்கு உண்டாயிற்று. மறு நாள் அதிகாலையில் எழுந்திருந்து தோட்டத்திற்குச் சென்றேன்.

மகிழ மரத்தடி மேடையில் மயிலைத்தடவிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் ரஞ்சனா. எதிர்ப் பக்கத்து வழியாக அவ்விடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான் ராமவர்மன். அவளுக்குப் பின்புறம் இருந்த செடிகளின் மறைவில் சென்று கொண்டு, நின்று சற்று நேரம் ரஞ்சனாவைப் பார்த்தான்.

அவர்கள் இருவரும் சந்தித்தால்?

என்ன நடக்குமென்று பார்க்கவே எனக்கு ஆசை உண்டாயிற்று. மறைவாக ஒரு இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டேன். திரும்பிப் போய்விட முயன்றான் ராமவர்மன் அடியெடுத்து வைத்த சப்தம் கேட்டு ரஞ்சனா திரும்பினாள். இரண்டு ஜதைக் கண்கள் சந்தித்தன. ரஞ்சனா அவனை ஏதோ சொல்லிக் கூப்பிட்டாள். அவர்கள் பேச்சு ஒன்றும் என் காதில் விழவில்லை. திடீரென்று ரஞ்சனா மயிலை விரட்டினாள். அவளும் ஓடி மறைந்தாள்.

ராமவர்மன் மட்டும் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தான். ஆடும் மயிலின் தோற்றத்தையோ அல்லது ரஞ்சனாவின் அழகிய முகத்தையோ அவன் கற்பனை செய்து கொண்டிருந்திருக்க வேண்டும். அப்பொழுது தூரத்தில் சிறகு படபடக்கும் சப்தம் கேட்டது. நான் அவ்விட

த்தை நோக்கினேன். ராமவர்மனும் திரும்பிப் பார்த்தான்.

தன் பொல்லாச் சிறகை விரித்தாடிக் கொண்டிருந்தது நீலமயில்.



ஆச்சரியம்!

பனித முகம் படைத்த அந்த மயிலின் ஆட்டம் ஆட்டமாக இருக்கவில்லை. சிறந்த நாட்டிய

மாக இருந்தது! அகன்ற கண்கள், கூரிய நாசி, பிறைமதியைப் பழிக்கும் நெற்றி, வட்ட முகம். அதிகம் விவரிப்பானேன்! அவள் தான் ரஞ்சனா!

நடனத்தில் தேர்ச்சி பெற்ற ரஞ்சனா மயிலின் வேடம் பூண்டு லாவகமாக நாட்டியமாடிக் கொண்டிருந்தாள். அதை நானும் பார்த்தேன். ராமவர்மனும் பார்த்தான்.

அவனோ ஏழைச் சிற்பி!

அவளோ ராஜகுமாரி!

சந்ததியில்லாத அரசனுக்குப் பின் அவள்தான் அந்த ராஜ்யத்திற்கிருக்கும் ஒரே வாரிசு!

இதென்ன வேடிக்கை!

பளுவான மனத்துடன் நான் அரண்மனைக்குத் திரும்பினேன்.

பனியில் அலைந்ததினாலோ என்னவோ அன்றிரவே எனக்குச் சுரம் கண்டது. அதற்குப் பிறகு சிறிது காலம் வரையில் நான் எழுந்திருக்காமலே படுத்திருந்தேன்.

அநேக நாட்களுக்குப் பிறகு நான் தோட்டத்திற்குச் சென்றேன். அவர்கள் எப்படியிருக்கிறார்களென்று பார்க்க எனக்கு மிக்க ஆவலாயிருந்தது. அதற்கு வேண்டியே கஷ்டப்பட்டு நான் தோட்டத்திற்குப் போனேன்.

நான் எதிர்பார்த்தபடி அவர்கள் இருவரும் அங்கு இருந்தார்கள். அவர்கள் இருந்த விதம் என்னைத் திகைக்கச் செய்தது. பளிங்கு மண்டபத்தில் ரஞ்சனாவின் மடியில் தலையை வைத்துக் கொண்டு படுத்திருந்தான் ராமவர்மன்! என்ன தைரியம்!

என்னைக்கண்டு திகைத்து எழுந்தார்கள். ரஞ்சனா சட்டென்று "பணிப்பெண் ராமி நமஸ்கரிக்கின்றேன்!" என்று என்னை நமஸ்கரித்தாள்.

என் உடம்பில் ரத்தம் அப்படியே உறைந்து விட்டது. இந்தப் பெண் ஏழை சிற்பியை நன்றாக ஏமாற்றி விட்டாள்! ஐயோ அரசனுக்குத் தெரிந்தால்?

"இந்த இடத்திற்குச் சிற்பவேலை முடியும் வரையில் ஒருவரும் வரக்கூடாதென்று அரசர் உத்திரவிட்டிருக்கிறார். அவரும் வருவதில்லை அது தங்களுக்குத் தெரியாது போலும்!" என்றாள் ரஞ்சனா.

நான் வியாதியில் படுத்துக் கொண்டிருந்ததால் எனக்கு அந்தத்தடை உத்தரவைப் பற்றி ஒன்றும் தெரியாது. ரஞ்சனாவின் சாகஸப் பேச்சுக்கள் என் வாயை அடைத்து விட்டன.

"நாங்கள் இருவரும் அரசர்களைப்போல் காந்தர்வ விவாகம் செய்து கொண்டு விட்டோம். இன்னும் கொஞ்ச நாளில் ராமிக்குக் குழந்தை பிறக்கப் போகிறது!" என்று ராமவர்மன் சந்தோஷத்துடன் சொன்னான்.

ரஞ்சனாவின் முகம் வெளுத்தது. என்னை ஏறிட்டுப் பார்க்கக்கூட அவளுக்குத் தைரியமில்லை. ராமவர்மனின் கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு ஓடி மறைந்தாள்.

சிற்பியின் ஆபத்தான நிலைமையை யோசிக்க யோசிக்க எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. அவளை நம்பிக் கொண்டிருக்கும் அரசனுக்கு ரஞ்சனா எப்பேர்ப்பட்ட கைம்மாறு செய்திருக்கிறாள்! தன் குலத்தில் மாசு ஏற்

படுவதை அரசன் எப்படிச் சகிப்பான்? ராமவர்மன்மேல் எனக்கு மிகுந்த இரக்கம் உண்டாயிற்று. அந்த இளம் சிற்பியை எப்படியாவது காப்பாற்றவேண்டும். அந்தச் சிற்பம் முடிந்தவுடன் அவனை எப்படியாவது ஊரைவிட்டு அப்புறப் படுத்த வேண்டும். இந்த எண்ணத்துடன் நான் அரசியை நாடிச் சென்றேன்.

புத்திரப் பேறில்லாத அரசி, ரஞ்சனாவை வெகுவாக நேசிக்கிருளென்று எனக்குத் தெரியும். அவளிடம் உண்மையை உரைப்பதில் ஆபத்தில்லை யென்ற நம்பிக்கையுடன் எல்லாம் சொன்னேன். அவளும் ரஞ்சனாவை அரசன் கண்ணில் படாமல் மறைத்து வைப்பதாயும் குழந்தை பிறந்தால் ஒருவருக்கும் தெரியாமல் வெளியில் அனுப்பி விடுவதாகவும் எனக்குச் சத்தியம் செய்து கொடுத்தாள். நான் நிம்மதியாக என் விடுதிக்குத் திரும்பினேன்.

நாட்கள் நட்சத்திரங்களைப் போல் உருண்டன. ஒரு நாள் அரசன் என்னிடம் வந்து தான் சிலையைப் பார்க்கப் போவதாகச் சொல்லி என்னையும் வரும்படி அழைத்தார். நான் மிக்க ஆவலோடு அரசனைப் பின் தொடர்ந்தேன்.

ராமவர்மன் சிலைக்கருகில் கையில் உளியுடன் நின்று கொண்டிருந்தான். அரசனைக் கண்டதும் வணங்கினான். நான் திரும்பி சிலையைப் பார்த்தேன். திடுக்கிட்டுப் போனேன். சாதாரண மயிலின் முகம் அங்கிருக்க வில்லை. ஆனல் மனித முகம்!

ஈடற்ற சௌந்தர்யம் படைத்த ரஞ்சனாவின் அற்புத முகம்!

அரசன் கோபாவேசமானார். மயிலின் முகத்தைச் சுட்டிக் காட்டி "இதென்ன?" வென்றார். அவரால் பேசக்கூட முடியவில்லை.

ராமவர்மன் சாந்தமாக "என் காதலி!" என்றான்.

நான் துணுக்குற்றேன்.

ராமவர்மன் கையில் பிடித்திருந்த உளியைப் பிடுங்கி சிலையின் முகத்தில் வீசி எறிந்தார் அரசர். அழகிய விசாலமான நேத்திரத்தில் போய் பொத்துக் கொண்டு நின்றது உளி. ராமவர்மன் ஏதோ முணுமுணுத்தான்.

அரசர் வேகமாக அந்தப்புரத்தை நோக்கிச் சென்றார். பதறிய உள்ளத்துடன் நானும் பின் தொடர்ந்தேன்.

அரசி எதிர்ப்பட்டாள். அவளைக் கூடக் கவனியாமல் முன்நோக்கிச் சென்றார். அவள் நடுங்கும் குரலில் "பாணரே! ரஞ்சனாவுக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது! என்ன செய்வதென்று தெரியவில்லை. பெட்டியெல்லாம் தயார் செய்து வைத்திருக்கிறேன். தங்களுக்கு இப்பொழுதுதான் செய்தி அனுப்பினேன்" என்றாள்.

வந்தது மோசம் என்று நான் உள்ளே ஓடினேன்.

ரஞ்சனாவின் அறையில் அரசனும் நானும் ஒரே சமயத்தில் நுழைந்தோம். அவள் மஞ்சத்தில் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். சற்று தூரத்தில் தொட்டிலில் வளர்க்கப் பட்டிருந்தது அந்த அழகிய குழந்தை.

"சண்டாளி! குலத்துரோகி!" என்று கத்தினார் அரசர்.

ரஞ்சனு கண்களைத் திறந்து பார்த்தாள். அரசரைக் கண்டதும் தன் குழந்தையைச் சுட்டிக் காண்பித்தாள்.

பற்களை நறநற வென்று கடித்தார் அரசர். மின் வெட்டும் நேரத்தில் அவர் கட்டாரி ரஞ்சனுவின் நெஞ்சில் பாய்ந்தது. நானும் அரசியும் ஸ்தம்பித்து நின்றோம்.

ஆத்திரம் தணிந்தது. தாம் செய்த காரியத்தை நினைத்துப் பொருமினர்; அழுதார். துடித்தார். என்ன செய்து என்ன! தன் ஒரே சகோதரியை இழந்து விட்டார்.

அன்றிரவே அரசியின் பிறந்தகத்துக்கு அவளையும் அக்குழந்தையையும் அனுப்பி விட்டார். ரஞ்சனுவுக்குத் தோட்டத்திலேயே சமாதி கட்டும்படி சொன்னர்.

சிற்பி!

ராமிதான் ரஞ்சனு வென்று தெரிந்ததும் அவன் துக்கமடைந்தான். அந்த ராஜகுமாரிக்காகத் தன்னைத் தியாகம் செய்ய அவன் சிறிதும் தயங்கவில்லை.

ராமவர்மன் உயிருடன் சமாதி கட்டிக்கொண்டான்! ரஞ்சனுவின் சமாதிக்குத் தன்னை அப்படியே அர்ப்பித்து விட்டான்! அவன் வேண்டுகோளுக்கிணங்கி அரசர் அவர்கள் இருவரையும் ஒன்ருக அடக்கம் செய்தார்.

ரஞ்சனுவின் குழந்தை பிற்காலத்தில் அரசரின் குழந்தையென்றே சொல்லப்பட்டது. முன் யோசனையுடன்தான் அது அரசியின் பிறந்தகத்திற்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் சிற்பியின் மகனை அரசனுக ஏற்றுக் கொள்ள மக்கள் துணிவார்களா?

'அரசே! ஆச்சரியப்படாதீர்கள்! ரஞ்சனுவும் ராமவர்மனும் பெற்றெடுத்தக் காதல் கனி, நீர்தான்!' என்ருர் பட்ட பாணர்.

யுத்தகால இலக்கியம் :

ஐந்தாம் படை அணுக்குண்டு

"சுகி"

காக்கிச் சட்டை; காக்கிக் கால்சராய்; காக்கித் தலைப் பாகை... இப்படிப்பட்ட துணிக்குள் தன்னை "கேமபிளாஷ்" செய்து கொண்டு ராஜப்பா, கையில் படுக்கையும் — காக்கி நிறம் தான் — வாயில் டிக்கட்டுமாக திருச்சி பிளாட்பாரத்தில் ஓடி வந்தான்.

ராணுவ இந்தியில் ரெண்டு ஹை ஹை போட்டபடியே "டோய் ராஜம்மா இங்கே வாடாம்மா" என்ற குரல் கேட்டது. ராஜப்பா அபாய அறிவிப்புச் சங்கு ஊளையிட்டதும் பாதசாரிகளை முறைத்துப் பார்த்த ஏ. ஆர். பி. வார்டனைப்போல, அக்குரல் கொடுத்தவனை முறைத்துப் பார்த்தான்.

அந்த நபரும் காக்கிச் சட்டை; காக்கி கால்சராய்; காக்கித் தலைப்பாகைக்குள் தன்னை "கேமபிளாஷ்" செய்து கொண்டிருந்தார். அடையாளம் கண்டு கொள்ள சற்று கஷ்டமாக இருந்தது. கூப்பிட்ட நபர் கண்ணபிரான். இருவரும் "வாடாம்மா" சரிதாண்டாம்மா, கண்ணு" என்று அன்யோன்யமாக பேசிக் கொள்ளும் பால்ய சிநேகிதர்கள். பிரிந்து பல வருஷங்களுக்குப் பின் சந்திக்கிறார்கள்.

வண்டிக்குள் படுக்கையைப் போட்டு விட்டு, ராணுவ வீரன் ராஜப்பா ரயில் ஏறினான். "எங்கடா கண்ணு மாமனார் வீட்டுக்கா?" என்று முதுகில் தட்டினான். ராஜப்பா முகத்தில் நெருப்புக் கக்கும் இரு பீரங்கிகள் ஜொலித்தன.

"மாமனாராம் மாமனார், அவர் தலையில் ஒரு அணுக்குண்டு விழ வேண்டுமடா."

" தீபாவளிக்கு 'மாப்பிள்ளைவெடி' ஒன்று இருந்தது. இப்போது மாமனார் அணுக்குண்டு வந்தால்......"

"வேண்டாம். அந்த மாமப் பயலே, இந்தத் தண்டவாளத்தில் பிடித்துத் தள்ளு."

"பாவம்! அப்படி அவர் என்ன யோகம் செய்தார். ஆமாம் நெற்றி வியர்வை பிளாட் பாரத்தில் விழ மாமனர் வீட்டுக்குப் போகிருயா?"

ராஜப்பா நெற்றி வியர்வையைச் சுண்டு விரலால் வழித்து, பிளாட் பாரத்தில் சுண்டினன். அது, வண்டிக்குள் இருந்த பெரியவர் முகத்தில் தெறித்தது. யுத்த கால த்தில் மழை பனியோடு குதிரைகளின் உதைகளையும் பட்டுப் பட்டு அவர் முகம், உணர்ச்சியற்றுக் கிடந்தது.

கண்ணபிரான் "ஏண்டாம்மா ராசாத்தி, உனக்கு எப்போடா கல்யாணம் ஆச்சு; எப்போ ராணுவத்திலே சேர்ந்தே? என்று கன்னத்தைக் கிள்ளினன்.

"நீயும் ராணுவத்திலே சேர்ந்தயா? எங்கே பர்மா அரங்கத்திலா."

"அடடா அங்கேதான் அடியேனுக்கும் சேவை. உனக்கு எப்போ கல்யாணம் ஆச்சுடா, செல்லம்மா."

"கலியாணம் காடயத்து எல்லாம் ஆச்சுடா. விட்டுத் தள்ளுடா, அந்தப் பேச்சை. நல்ல பேச்சுப் பேசடா."

வயதான அந்தப் பெரியவர், தொள தொள வென காக்கிச் சட்டை, காக்கிக் குல்லா—எல்லாம் காக்கி மயம் அவருடைய மீசை உள்பட—அணிந்திருந்தவர் கனைத்தார். அந்தக் கனைப்பில் கண்ணபிரான், மனம் லயித்து, "தாங்கள் ராணுவத்தில் என்ன உத்தியோகம்?" என்று கேட்கு முன்பே, "ஆமாம். குதிரைகளைப் பழக்குவதில் தேர்ச்சி பெற்றவன். அதுகளைப் பழக்கிப் பழக்கி அது போலவே கனைப்பு வந்துவிட்டது" என்று சொன்னர்.

"அசல் அரபிக் குதிரை கெட்டது, போங்கள் அதுகள் கனைப்பு அப்படி அப்படித்தான்" என்ருன் கண்ணபிரான். அந்தப் பெரியவர் சிரித்தார். அவருடைய காக்கி நிற மீசையும் சிரித்தது. "மிஸ்டர் உங்களுக்கு ஏன் அவ்வளவு அலுப்பும் வெறுப்பும்? முற்றும் துறந்த புத்தர் போல சொல்கிறீர்களே! ஆமாம் பெண் எந்த ஊரோ?" என்று பரிவோடு ராஜப்பாவைக் கேட்டார்.

"இதே ஊர்தான். இந்தத் திருச்சியில்தான் அந்த அயோக்கியன் இருக்கிருன்."

"அயோக்கியன் என்ருல் உங்கள் அகராதியில் மாமன் என்று அர்த்தமோ?" என்ருர் காக்கி மீசை.

"நாளை விடிந்தால் தீபாவளி ஆயிற்றேடா, ராஜம்மா ஏன் ஓடுகிருய்?"

"பாவம் மாமனரை அயோக்கியன் கியோக்கியன் என்பது நியாயமா சார்?" என்று மறுபடியும் சிரித்தார். அந்தச் சிரிப்பு டெல்லி மட்டக் குதிரையின் கனைப்பை நினைப்பூட்டியது. [கண்ணபிரான், "ஏண்டா ராசாத்தி கலியாணம் எப்போது நடந்தது?" என்று கேட்டான்.

"அந்த இழவு இந்த ஆவணி கடைசியில். இது தலைத் தீபாவளி."

"அடடா, தலைத் தீபாவளிக்கு இருக்காமலா ஓடுகிறீர்கள்?

மாமனார் பேரில் கோபமா? பெண்ணின் மீது ஆங்காரமா? பீரங்கி வாயில் புகை வருவதைப் பார்த்த கண்கள் தங்கள் நாசியிலும் புகை வதைப் பார்க்கிறேன். மிஸ்டர் ராஜப்பா.''

கையிலிருந்த கொள்ளிக்கட்டை (சிகெரெட்)யை ஜன்னலுக்கு அப்பால் எறிந்தான். ''இந்த மாமனார் பயல்களுக்கே கொஞ்சமாவது, அணுவாவது புத்தி கிடையாது,'' என்றான்.

''புத்தி, இருந்தால் பெண் கொடுத்திருப்பார்களா, அது இல்லாத குறைதான்'' என்று கண்ணபிரான் சேர்ந்து கொண்டான்.

''எல்லாரையும் என்னமாக அப்படிச் சொல்லலாம். உங்கள் மாமனார் கெட்டவர் என்றால் உலகம் அப்படியா?''

பெரியவரின் கேள்வி அவன் காதில் விலைவாசி (நாரசம்) ஆகப் பட்டது. ''மாப்பிள்ளை யென்றால் குதிரைக்கு அடிக்கிற லாடம் என்று நினைப்பா? அவன்கள் வீட்டுத் தோட்டத்திலே விளைகிற கிள்ளுக்கீரையா? ஒரு பெண்ணை அரபிக் குதிரையின் காம்பீர்யம் நிறைந்தவனை—ஆயுள் பரியந்தம் வைத்துக் காப்பாற்றுகிற வீரன் அல்லவா?'' என்ற பேச்சு, யுத்த முழக்கம் போல் இருந்தது.

''சரிதாண்டாம்மா. நம்மையும் நம்பி ஒரு பெண்ணைக் கொடுகிறவன் ஒரு கோவேறு கழுதை. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை. நீ என்னமோ பெரிய முறுக்காக முறுக்குகிறாயே?''

கண்ணபிரான் கொடுத்த ஒரு சூடு பெரியவருக்குத் தாக்கி வாரிப் போட்டது! எத்தனையோ ராணுவக் குதிரைகள் தாக்கி வாரிப் போட்டிருந்ததை அனுபவித்தவர் என்றாலும், அவருக்குக் கண்ணபிரான் மேல் பாசம் படர்ந்தது. உன்னிப்பாகக் கண்ணபிரானை நோட்டம் பார்த்தார், சரணாகதி சாசனத்தில் கையெழுத்திட வந்த ஜப்பானிய ராணுவ அதிகாரிகளை ஜெனரல் மக் ஆர்தர் நோட்டம் பார்த்தது போல்!

''அப்பா! கண்ணு, நீ சொன்ன படி என் மாமனாரை கோவேறு கழுதை யென்றுகூட நான் சொல்ல மாட்டேன். யுத்தகாலத்தில் அது செய்த சேவையை நான் நேரில் பார்த்துப் பழகியவன். இந்த மாமாப் பயலை அதற்கு ஒப்பிடுவது ரொம்பவும் மதியீனம். அவருடைய பல்லை உதிர்த்து, அவர் உள்ளங்கையிலே வைத்து எண்ணச் சொல்ல வேண்டுமடா.''

''கோபிக்காதே! தன் பல்லைத் தட்டித் தர ஆள் கிடைக்காமல் தான் உன்னை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டாரோ? போடா. இறங்கிப் போய் தலை தீபாவளியை அனுபவியடா, போ!'' என்றான் கண்ணபிரான்.

பெரியவர் காக்கிநிற மீசையைத் தடவி விட்டபடியே ''சார், இந்தக் காலத்துப் பிள்ளைகளே ரொம்பப் பிடிவாதமும் தலைக்கிறுக்கும் பிடித்தவர்கள். என் அனுபவத்திலே குதிரைகளைப் பழக்கி விடலாம்; படித்த பையன்களின் புத்திக் கோணலை நெளிசல் எடுக்க முடியாது. குடிக்கிறது ரேஷன் தண்ணீர்; கொப்புளிக்கிறது ரோஜாப் பன்னீர்' என்ற யுத்த காலப் பழமொழி போல உங்கள் மாமனார்.'' என்று மேலே சொல்லுமுன் ராஜப்பா முன்னேறினான்.

''ஓர், என்ன ஓர். வேண்டிக் கிடக்கு? மாமாப்பயல் என்று

சொல்லுங்கள். மாப்பிள்ளையிடம் மரியாதையாக நடக்க வேண்டாம்?''

"துரைவாள் ராணுவ முஸ்தீபுகளைக் கண்டு மாமனார் பயப்பட வேண்டுமா?''

"அவர் ஒரு டாங்கு போலிருக்கு! உங்கள் எதிர்ப்பைச் சமாளித்து விட்டார்'' என்றார் பெரியவர்.

"இல்லை பெரியவரே, இவனைக் கண்டதும் நாலு புஷ்பம், ரெண்டு மாலை, காலணு கற்பூரம் இது கொண்டு வந்து அடி பணிந்து விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டும். அப்படியானல் மாமனார் நல்லவர்.''

"மாப்பிள்ளையிடம் மாமனார் மரியாதையுடன் நடக்க வேண்டுமோ இல்லையோ, சொல்லுடா கண்ணு?''

"நடக்க வேண்டியதுதான்'' என்றும் கண்ணபிரான் ஒத்துக் கொள்ள, அவனைப் பின் தொடர்ந்தார் பெரியவரும்.

"சரி நடக்கவில்லை. அப்போ என்ன செய்கிறதாம்?''

"செய்கிறது என்னடா? 'கேமபிளாஷ்' செய்து கொண்டு சரி சரி யெனப் போக வேண்டியது தான். என்ன பெரியவரே, நீங்கள் சொல்வது என்ன?''

"ரொம்ப நியாயம். சரி சரி யெனப் போக வேண்டியது தான்.''

"அதைத்தான் நானும் செய்கிறேன்.''

"எனத்தைச் செய்கிருய்?''

"என் ஊருக்குப் போகிறேன்!''

இதற்குக் கண்ணபிரான், காட்டிய வழியும் கீதோபதேசத்தின் சாராம்சமும் இதுவே – சகிப்புத் தன்மை அவசியம்; பெருந்தன்மை வேண்டும். மாமனார் செய்த மா பெரும் பிழை யெல்லாம் மாப்பிள்ளை பொறுப்பது கடனே; வாழ்க்கைப் போரின் வெற்றி தோல்வி மனப்பாங்கைப் பொறுத்தது. கோபத்தை ரேஷன் செய்து குணத்தைப் பயிரிட வேண்டும் – இன்னேரன்ன பிற.

"ஓடுகிற நாயை எவ்வளவு தூரம் துரத்தலாம், எண்டா கண்ணு நீ சொல்லுடா?''

"அது நாயைப் பொறுத்ததடா ராஜம்மா.''

'இதிலே யார் நாய்' என்ற சந்தேகத்தைக் கிளப்பினர் பெரியவர். மேலும் புத்திமதிகள் சொல்லி மாமனார் வீட்டிற்கு மரியாதையாக இறங்கிப் போகச் சொன்னர்.

"என்ன லடாய்? மாமனருக்கும் உனக்கும்!''

“அவன் கூப்பிட்டதற்காகவா வந்தேன். அது லட்டர் எழுதியது. அது முகத்துக்கு ...”

“அது... அதுன்னு எதுடா?” என்று பரிகாசம் செய்தான் கண்ணபிரான்.

“அதுதாண்டா கல்யாணி!” என்ற ராஜப்பாவின் குரலில் உத்சாகமும், வாயில் பல்லும் தெரிந்தன.

கண்ணபிரானைப் பார்த்துப் பெரியவர் “ஏன் மிஸ்டர் கண்ணபிரான்! நீங்கள் எப்படி மனைவியைக் கூப்பிடுகிறது? அஃறிணையா, உயர்திணையா?” என்று கேட்டார். அவருக்குக் கண்ணபிரான் பிரம்மச்சாரியா, கிரகஸ்தனா என்று அறிய ஆசை. அவ்வளவுதான்.

“உம். மனைவியா? மனைவி ...... உயர்திணைதான்.” என்று சிரித்தவன், மேலும், “சரிடா ராஜம்மா. அது லட்டர் போட்டது. இது ராணுவத்திலிருந்து ரஜாவில் வந்தது. இப்போது இது தீபாவளிக்கு இருக்காமல் ஓடுவானேன்?” என்று கேட்டான்.

“ஓடாமல் என்னடாம்மா செய்கிறது? அந்த அயோக்கியன் எனக்கு ஒரு ரிஸ்டு வாட்சும், இருபத்தைந்து ரூபாயிலே ஒரு அங்கவஸ்திரமும் வாங்கி வைப்பதாக முகூர்த்த தினத்தில் சொன்னான்.

“வைக்கவில்லை. தீபாவளிக்கு வாங்கி வைத்தாராக்கும்.”

“பெரியவரே, அப்படி வைத்தால் நான் ஏன் ஓடுகிறேன்?”

கண்ணபிரான் கம்பீரமாக, “டேய் ராஜம்மா பூ வைக்க வேண்டிய இடத்தில் பொன் வைக்க வேண்டுமென்பது பழைய பழமொழி. பொன் வைக்க வேண்டிய இடத்தில் பூவாவது வைக்க வேண்டுமென்பது புதுமொழி! நாமெல்லாம் படித்தவர்கள். அங்கவஸ்திரமும், கைக்கடிகாரமும் வந்து தானாடா நிறையப் போகிறது? போடா முட்டாள்! ரயில் புறப்படுமுன் இறங்கிப் போடா” என்று கி. பி. 3-ம் நூற்றாண்டில் அலெக்ஸாந்தர் தன் வீரர்களைப் பார்த்து புத்திமதி சொன்ன ரீதியில் சொன்னான்.

“எனக்காகவாடா, இதெல்லாம்? எல்லாம் என் அம்மாவைத்

திருப்தி பண்ணத்தான்.”

பெரியவருக்கு “அங்கவஸ்திரமும் ரிஸ்ட்டு வாட்சும் அம்மாவிற்கா?” எனக் கேட்க ஆசை.

அதற்குள் அவருடைய அபிமானத்திற்கு ஆளான கண்ணபிரானே கேட்டு விட்டான். "பெண் எப்படி?" என்ருர் பெரியவர்.

"தங்கம், அத்தனையும் தங்கம். குணம், மணம், நிறம்."

"டேய் 'மணம்' எங்கிருந்து வந்தது?" என்ற கேள்வியைக் காதில் வாங்காமல் ராஜப்பா பேசினான்.

"என்னிடம் அளவுக்கு மிஞ்சின பிரியம். அன்புக்கும் பிரியத்துக்கும் ரேஷன் இல்லை. பாரடா கண்ணு என்னமா கல்யாணி லெட்டர் எழுதியிருக்கு, பாருடா," என்று காக்கிப் பைக்குள் இருந்த கடிதத்தை எடுத்தான்.

கண்ணபிரான் "டேய் இது கையெழுத்தாடா? ரத்தன ஹாரத்தில் முத்துக்களைப் பதித்ததாகப் படுகிறது என்று சொல்லவா? மலர் மாலையில் குண்டு மல்லிகையைக் கோத்தமாதிரி இருக்கிறது என்று சொல்லவா? இல்லை, சீன வெடிகளைச் சரஞ்சரமாகக் கட்டியது போல என்னவா?" என்று ஆரம்பித்தான்.

பெரியவர், "இதை இப்படிச் சொல்லுகிறீர்களே! நம்ம பொண் தங்கம் — பேரும் குணமும் எழுத்தும் நிறமும் பாட்டும் படிப்பும்... அடடா! ஏதோ பெருமைக்காகச் சொல்லவில்லை சார், மிஸ்டர் கண்ணபிரான்" என்று ஊடே 'வத்தி' வைத்தார்.

ராஜப்பா, கையில் எடுத்த கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

அன்புள்ள அத்தானுக்கு,

அனந்த கோடி நமஸ்காரங்கள். அடியாள் மனம், துளி நெருப்பிற்காகத் துடிக்கும் வெடிதுண்டு போல துடிக்கிறது. இன்று விடிந்தால் ஒருநாள் போச்சு; நாளை விடிந்தால் இரண்டு நாள் தொலைந்தது — இப்படி சதா சர்வதா உங்கள் எழில் கொழிக்கும் முகத்தைக் காணத் துடிக்கிறது. உங்களுக்குக் குஞ்சாலாடு பிடிக்குமே யென்று தீபாவளிக்குப் பிடித்து வைத்திருக்கிறேன்."

கண்ணபிரான் இடைமறித்து, "ஏண்டா ஓடி வந்தவன் ரெண்டு குஞ்சாலாடாவது கொண்டு வரக் கூடாதா?" என்று கேட்டான். அது அவன் காதில் விழுமா? காதற் கடிதம் அவன் உள்ளத்தையே துளையிடுகிற நிலையல்லவா அப்போது?

"மூன்றம் வாரம் அண்ணுவின் கலியாணத்திற்கு வந்தீர்களே, அப்போது எனக்குப் பூ — மல்லிகைப் பூ — வைக்கச் சொல்லிக் கொடுத்த பாடம் ஞாபகம் இருக்கிறதா? அதை நான் மறந்து விட்டேன். தாங்கள் அப்புறம் ஒரு கிள்ளுக் கிள்ளினீர்களே அதை மட்டும் மறக்கவில்லை. நான் மறந்தாலும் கன்னம் மறக்குமா? தங்கள் ராணுவ உடை தரித்த போட்டோவைக் கண்டு தினம் ஒரு 'ஸல்யூட்' போடுகிறேன். அதற்கு விளையாடத் தெரியுமா? இல்லை மல்லிகைப் பூ வைக்கத்தான் தெரியுமா? எல்லாம் தெரிந்தாலும் கன்னத்தைக் கிள்ளத் தெரியுமா?

பெரியவர் குதித்தார். "ஏன் சார் மிஸ்டர் ராஜப்பா, இப்படி அன்பையும் உள்ளக் களிப்பையும் எழுதியிருக்கும் போது தாங்கள் பின்னேறுவது நல்லதாகப் படவில்லை. இறங்குங்கள்" என நியாயம் போதித்தார். கண்ணபிரான் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"இந்த மாதிரி மருமகப் பயல்கள் இருக்கும் வரை சமூகம் உருப்படுமா? மாமனர் என்ருல்

அவரும் ஒரு மனுஷ வர்க்கம் தானே? அவர் என்ன மாடா ஆடா? கஷ்ட நஷ்டம் ஆயிரம் உண்டு. நாம் வேஷ்டிக்கும், பணத்துக்கும், கடிகாரத்துக்கும் ஆசைப்பட்டா கலியாணம் செய்கிரோம்? நாம் யார்? அவர் யார்? நாளைக்கு மாமன் முகத்தில் விழிக்காமல் போகப் போகிரோமா? இந்தத் தொந்தம் மாமன் – மருமகன் என்ற தொந்தம் இல்லையெனப் போய்விடுமா?''

மேலே சொல்லுமுன், "எல்லாம் அவனவனுக்கு வந்தால் தெரியும்'' என்று நொந்து கொண்டான் ராஜப்பா.

"ஒன்றுமில்லை. ராணுவத்திற்குள் வந்ததும் சேவைதான் முக்கியம். குடும்பத்தில் பணிவும் சகிப்பும் முக்கியம். மாமனர் கஷ்டத்தை எவனொருவன் சரிவர உணர்ந்து கொள்ளுகிருனே அவனே உண்மையான மாப்பிள்ளை!''

பெரியவர், அப்படியே மீண்டும் துள்ளிக் குதித்தார், "மிஸ்டர் கண்ணபிரான். என் மகள் தங்கம். அவளுக்கு நான் மாப்பிள்ளை பார்க்காத இடமில்லை. பயல்கள் ராணுவத்தில் சேர்ந்து விடவே மாப்பிள்ளைப் பஞ்சம் தலைவிரித்தாடியது. ஆகவே நானும் ராணுவத்தில் சேர்ந்தேன். நாலு வருஷமாகப் பார்க்கிறேன். பார்க்கிறேன்.'' என்று சொல்லி மெதுவாக கண்ணபிரான் விலாசத்தைக் கிரகிக்க முயன்ருன்.

பிளாட்பாரத்தில் மணியடிக்கும் சப்தம். வண்டி புறப்பட ஐந்து நிமிஷம்தான். பெரியவர் ஜன்னல் வழியாகத் தலை நீட்டிய போது, யாரோ ஒருவர் கையில் ரிஸ்டு வாட்சும், ஒரு ஜரிகை அங்கவஸ்திரமும் புரள ஜன்னல் ஜன்னலாக உற்றுப் பார்த்துக்கொண்டு ஓடி வந்தார்.

"மாப்பிள்ளை ... ஐயா மாப்பிள்ளை'' என்ற அபாயக் குரல் கொடுத்தார். இவர்கள் இருந்த வண்டி ஜன்னல்ப் பக்கம் வந்ததும்

"மாப்பிள்ளை, இறங்கணும். இதோ பில், ரிஸ்ட் வாட்சு ரூ. 100 என்ற பில். ஜரிகை அங்கவஸ்திரம் விலை ரூ. 38க்கும் பில். அடடா கை இறக்குகிருனே இறங்குங்கள். யாராவது பெட்டி படுக்கையை எடுத்துப் போடுங்கள்'' எனக் கெஞ்சினர்.

பெரியவர் ராஜப்பாவின் பெட்டி படுக்கையை எடுக்கப்

போனார், ராஜப்பாவிற்கு கோபம் வந்தது. அதைப் பிடுங்கி வைத்து விட்டுச் சும்மா இருந்தான்.

அந்த வேளையில் தன் பெட்டி படுக்கையைத் தடவினான் கண்ணபிரான்! "மாப்பிள்ளை இறங்குங்கோ. இறங்குங்கோ" என இரக்கம் தோன்ற அலறினார்.

பெரியவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவருடைய காக்கி நிற மீசை கறுத்தது. பரமாணு வெடிகுண்டைப் பரிசோதித்த அமெரிக்க விஞ்ஞானியைப் போல், கண்ணபிரானைப் பெரியவர் பார்த்தார்!

"இந்தப் பரபாணுக் குண்டுதானா இவ்வளவு பரமஸாதுவாக இருந்தது? டேய் கண்ணு... எனக்குப் புத்தி சொன்னவனடா நீ? டேய்... எய்... எனக் கத்தியும் கண்ணபிரான் தலை நிமிரவில்லை.

பரமாணுக்குண்டு பார்த்ததும் தலை வணங்கிய ஜப்பானிய சக்கரவர்த்தி போல, கண்ணபிரானுடைய காக்கிநிறச் சட்டை, காக்கி கால்சிராய், காக்கி நிறப் படுக்கையுடன் இறங்கினான். பரமாணுக் குண்டை தூக்கிச் சென்ற விமான ஓட்டியை விடப் பெருமிதமாக கைக் கடியாரத்தையும், ஜரிகை அங்கவஸ்திரத்தையும் தாங்கிச் சென்றார் அவன் மாமனார்.

பெரியவர் "மிஸ்டர் ராஜப்பா "இந்தக் கண்ணபிரான் பிரம்மாச்சாரி, யோக்யன், நல்லவன்..." என்று மேலே சொல்லுமுன் "குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியும் பறித்ததாம் என்பதை நேரில் கண்டீர்கள். பாவம் தங்கள் பெண் தங்கத்தை மணவிக்க நினைத்தீர்கள். ஆனால் தங்கம் பங்பம் ஆகாமல் தப்பினாளே?" என்று ராஜப்பா சொல்லவும் கார்டு பச்சைக் கொடி வீசினார்.

நிபந்தனையின்றி சரணாகதியடைந்த ஜப்பானிய வீரன் நேசதேச சேனாபதி முன்னால் எப்படிப் போயிருப்பான் என்பதை பிளாட்பாரத்தில், கண்ணபிரான் மாமனார் பின்னால் நடந்து போகும் காட்சியிலிருந்து கற்பனை செய்தார்கள். வண்டி நகர்ந்தது.

பாக்யசாலிகள்

[எச். விஜயகுமார்]

முழுசாக ஐம்பது வருஷங்கள். இந்த ஐம்பது வருடத் தாம்பத்ய வாழ்க்கையில் இடையில் ஒரு நாள் கூடப் பிரிவில்லை.

அந்தப் பிரிவு இன்று நேர்ந்து விட்டது. மூன்று மணி நேரத்துக்கு முன் — அந்த அணைந்து கொண்டிருந்த விளக்கு சிறிது பிரகாசமாக எரிந்தது. சென்னையிலிருந்து ஓடோடியும் வந்த ஜெகதீஷும் நீலகிரியிலிருந்து வந்த சுலோசனாவும் அருகில் உட்கார்ந்திருந்தார்கள். மீனாட்சிப் பாட்டி அவள்தான் ஜம்புநாத தாதாவின் வாழ்க்கைத் துணைவி படுக்கையில் மிக நெருங்கி உட்கார்ந்திருந்தாள். மரணப் படுக்கையில் கிடந்த ஜம்புநாததாதாவின் கண்ணிமைகள் அடிக்கடி குவிந்து மலர்ந்து கொண்டிருந்தன. மரணத்தின் பயங்கரச் சாயல் எதுவும் அவரது முகத்தில் படியவில்லை. அறை முழுதும் சாம்பிராணி தூபத்தால் மணங்கமழ விளங்கியது. ஒரு மூலையில் நெய் விளக்கொன்று நிதானமாக எரிந்து கொண்டிருந்தது.

அங்கு கூடியிருந்தோரின் கண்களெல்லாம் மீனாட்சிப் பாட்டி ஒருத்தியைத் தவிர நீர் அரும்பியிருந்தது. உலகை விட்டு விடைபெற முயற்சித்துக் கொண்டிருந்த ஜம்புநாததாதாவின் கண்களிலும் நீர் அரும்பியிருந்தது. ஜெகதீஷும், சுலோசனாவும் அடிக்கொருதரம் மீனாட்சிப் பாட்டியைப் பார்த்த வண்ணமாக இருந்தனர். அவளுடைய வறண்ட கண்களும், கவலையின் சுமையால் சுருக்கி விழுந்த முகமும், பார்த்தவர்கள் நெஞ்சில் இரக்கம் சுரக்க வைத்தது. தாதாவால்கூட பாட்டியைப் பார்க்க முடியவில்லை.

அவருக்கு வேகமாக மூச்சு வாங்க ஆரம்பித்தது. சுலோசனா அடிக்கடி விம்மி அழுது கொண்டிருந்தாள். ஜெகதீஷ் வெகுகாலமாகவே வெளியூரில் வசித்துக் கொண்டிருந்தவர் என்றாலும் இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறையாவது வந்து போய்க் கொண்டிருந்தார். அத்தகைய ஜெகதீஷ் கட்டிலருகில் சென்று கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தான்.

மணி பதினொன்றடித்தது! மூச்சின் வேகம் சிறிது தணிந்தது. அடுத்த கணம் நின்றே விட்டது. ஜம்புநாத தாதாவின் உயிர்க்கிளி உடற்கூண்டை விட்டுச் சென்று விட்டது. "அப்பா!" என்று அலறி விட்டார்கள். சுலோசனாவும் ஜெகதீஷும் ஜம்புநாத தாதாவின் மரணத்துக்காக வெளியே உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்த உற்றார் உறவினர்கள் உள்ளே வந்தார்கள். மீனாட்சிப் பாட்டியோ சிலையைப்போல் தாதாவின் மூடிய கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். உறவினர்களுள் ஒருவர் வந்து பாட்டியைச் சாந்தப்படுத்த முயற்சித்தார்கள். ஒன்றிரண்டு பேர் ஜெகதீஷையும் சுலோசனாவையும் தேற்றலானார்கள்.

"தாத்தா பாக்யசாலி! அவர் மரணத்துக்காக அழுவது கூடாது!" என்ற சொல் பலருடைய வாயினின்றும் வெளி வந்தது.

உண்மைதான்! இப்போது அறுபத்தெட்டாவது வயது பூர்த்தியாகிக் கொண்டிருந்தது. ஊர் முழுதும் அவரைக் கடவுளுடைய பிரதிநிதியாகவே கருதி வந்தது. அவருக்கு விரோதி ஒருவருமில்லை. அவரது உதவியால் உயர்வுபெற்ற குடும்பத்தார்களும், மற்றவர்களும் அவரை உண்மையாகவே தமது தாத்தாவாகக் கருதி வந்தனர். சென்ற வருஷம்தான் அவர் தாம் பார்த்து வந்த வேலையிலிருந்து ஓய்வுக்காக ராஜினமா கொடுத்து விலகிக் கொண்டார். அவரது பிள்ளை ஜெகதீஷ் வெளியூரிலிருந்து செலவுக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருந்தான். அதனல் அவருக்குப் பணத்தைப் பற்றிய கவலையே இருக்க வில்லை. போனதுபோக அவருக்குச் சந்தானமாக ஆசைக்கொரு ஆணும், அன்புக்கொரு பெண்ணும் இருந்தனர்.

ஜெகதீஷ் தந்தைக்கு அடங்கின பிள்ளை. சுலோசனவும் புத்திசாலிப் பெண். இரண்டு குழந்தைகளிருந்தும் ஜம்புனத தாத்தாவும், மீனட்சிப் பாட்டியும் தனியாகவே தான் காலங்கழித்து வந்தார்கள். சுலோசன பிறர் சொத்துதானே! ஆகவே பதினருவது வயதில் கணவன் வீடு சென்று விட்டாள். ஜெகதீஷும் பணம் சம்பாதிக்க வெளியூர் செல்ல வேண்டிய அவசியம் நேர்ந்தது. பணம் சம்பாதித்தான். மணம் செய்து கொண்டான். குழந்தைகளும் பிறந்தனர். இதனல் தாத்தாவும், பாட்டியும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். இருவரும் ஆரோக்கியமாய் வலிவுடனேயே இருந்ததால் பிறருடைய உதவியோ சேவையோ அவர்களுக்குத் தேவையாக இருக்கவில்லை. எனினும், மூன்ருவது மனிதனில்லா

மல் வீடு வெறிச் சென்று இருந்தது. அந்த 'வெறிச்' சென்றிருந்த நிலைமையில்தான் இருவரும் ஒருவர்மீது ஒருவர் அன்பு செலுத்தவும் ஆதரவு காட்டவும் சாத்தியமாயிற்று.

அப்பாடி! எவ்வளவு வருஷங்களுக்கு முன்னால் அவர்களிருவருடைய வாழ்க்கை ஆரம்பமாகியிருந்தது? அந்த எளிய, சரளமான, தொல்லையற்ற வாழ்க்கையில் அவர்கள் எவ்வளவு காதலுடன் வாழ்ந்து வந்தார்கள்? நிதானமாக ஓடும் ஓடையின் தெளிந்த நீரைப்போல் அவர்களது வாழ்நாட்கள் எவ்வளவு சுகமாக ஓடிக் கொண்டிருந்தன? அவர்கள் கண்ட கனவுகளையும் கற்பனைகளையும் யாராலும் அறிந்து கொள்ள முடியாது. அன்பின் ஆழத்தை யார்தான் அறிய முடியும்? கொதிப்பில்லை, துன்பமில்லை, தொல்லையில்லை, உலகிலாவது வாழ்க்கையிலாவது எவ்விதமாவது எவ்விதமான அவசரமுமிருந்ததில்லை. எதாகிலும் கொள்ளை போய்விடும், திருட்டுப் போய் விடும், பெயர்ந்துபோய் விடும் என்ற பயமுமிருந்ததில்லை. சாந்தமயமான — நிலையான அவர்களது வாழ்க்கை காதலின் இருப்பிடமாக இருந்தது.

கணத்துக்குப் பின் கணம், மணிக்குப்பின் மணி, நாளுக்குப் பின் நாள், இப்படி ஐம்பது வருடங்கள்! உள்ளத்தில் முளைத்திருந்த காதல்தரு வளர்ந்து கொண்டேயிருந்தது. அந்தக் காதல் தருவை யாரறிந்து கொள்ள முடியும்?

"தாத்தா — பாக்கியசாலி!"

என்று அங்கு கூடியிருந்தவர்கள் சொன்னார்கள். மீனாட்சிப் பாட்டியின் காதிலும் இந்தச் சொற்கள் விழுந்தன. ஆனால் அவளது எந்தக் கண்கள் சலனமற்றுச் சிலையைப் போலிருந்தனவோ அந்தக் கண்களில் ஞான ஒளி வீச ஆரம்பித்தது. அவளும்

அங்கிருந்தவர்களைப் பார்த்து "அவர் பாக்கியசாலி யாகவே போய் விட்டார்! யாரும் அழ வேண்டாம். அழுதால் அவருடைய புனித மரணம் தீட்டுப் பட்டு விடும்" என்று சொன்னாள்.

ஆனால் உறவினருக்கும் நண்பர்களுக்கும், ஜம்புநாத தாத்தாமேல் பக்தியும் அன்பும் அளவு கடந்திருந்தன. அதனால் மிகச் சிரமப் பட்டு அடக்கியும்கூட ஓரிரு நீர்த் துளிகள் அவர்களுடைய கண்களினின்றும் தன்னால் வழிய ஆரம்பித்தன. ஜெகதீஷனுக்கும் சுலோசனாவுக்கும் தந்தையின் மரணம் தந்த துயரைவிடத் தாயின் நிலைமை அதிக துயரைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

மீனாட்சிப் பாட்டி மௌனமாக உட்கார்ந்திருந்தாள். எதிரில் ஜெகதீஷனும், சுலோசனாவும் இருந்தார்கள். தாதாவின் தகனக்கிரியையை முடித்து விட்டு உறவினர்களும் நண்பர்களும் சென்று விட்டார்கள். வீட்டில் மீனாட்சிப்

பாட்டி, ஜெகதீஷ், சுலோசனா ஆகிய இம்மூவரைத் தவிர, வேறு யாருமில்லை. ஜெகதீஷும் சுலோசனாவும் தந்தை சென்ற பிறகு அவசியமான வேலைகளில் ஈடுபட எழுந்தனர். அதைக் கண்ட மீனாட்சிப் பாட்டி அவர்களை அமர்த்தி, 'ஜெகதீஷ்! அவர் போய் விட்டார். இனிமேல் வீட்டில் எல்லாக் காரியங்களையும் நீங்கள் தான் கவனித்துக் கொள்ள வேண்டும்!'' என்று கூறினாள்.

"நீ எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம் அம்மா!'' என்று பதிலளித்தான் ஜெகதீஷ்.

"நான் என் கவலைப் படுகிறேன்? தெய்வ நியதிக்கு முன்னால் நாமென்ன செய்ய முடியும்? நீங்களும் என்னைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம்.

உன் குழந்தைக்கு உடம்பு சரியில்லை. ஆதலால் நீ இன்று போகத்தான் வேண்டும்........... சுலோசனா! நீ காலை வண்டியிலாவது சாயந்திர வண்டியிலாவது......!''

"அப்படிப் போக முடியுமா என்ன? எங்களுக்கு ஒன்றும் அவசரமில்லை'' என்றாள் சுலோசனா.

"இல்லையம்மா! சடங்குகளெல்லாம் செய்வதாக எனக்கு உத்தேசமில்லை! அவர் எல்லாவற்றையும் அனுபவித்து விட்டுத்தான் போயிருக்கிறார். அவரது மனதில் எவ்விதமான ஆசையும் மீதியிருக்கவில்லை......!'' மீனாட்சிப் பாட்டி பேசுவதை நிறுத்திக் கொண்டாள் அவள் தன் குனிந்த தலையைச் சிறிது நிமிர்த்தினாள். லேசான வெளிச்சம் பரவியிருந்த அந்த அறையின் சுவரில் ஜம்புநாத தாத்தாவின் படம் தொங்கிக் கொண்டிருந்தது. ஜெகதீஷ் இரண்டு வருஷங்களுக்கு முன் வந்திருந்த போது மிகவும் வேண்டிக் கேட்டதின் பேரில் தாத்தாவுக்கு இஷ்டமில்லாதிருந்தும் அவனுக்காகப் போட்டோ எடுத்துக்கொண்டார். அந்தப் போட்டோவைப் பார்த்ததும் மீனா பாட்டியால் மேலே பேச முடியவில்லை.

"ஒரே ஒரு ஆசைதான் இருந்து விட்டது! இருவரிடையே இப்போது வெகு தூரம் இருக்கிறது'' என்று பாட்டி தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

ஜெகதீஷும், சுலோசனாவும் எழுந்து வெளியே வந்தார்கள். பாட்டியின் கண்கள் போட்டோவின் மீது பதிந்தது. வெகு நேரம் சிலையைப்போல் உட்கார்ந்து கொண்டிருந்து பின் திடீரென்று விழுந்து விட்டாள். விழுந்த சப்தம் கேட்டதும் உள்ளே ஓடி வந்தான் ஜெகதீஷ். பாட்டியின் கண்கள் மூடியவாறு இருந்தன. சுலோசனா தண்ணீர் கொண்டு வந்தாள். இருவரும் பதட்டத்துடன் தண்ணீரைப் பாட்டியின் முகத்தில் தெளித்தார்கள். பக்கத்தில் குடியிருந்த வேறிரண்டு மூன்று பெண்கள்கூட பாட்டியிருக்குமிடம் ஓடி வந்தார்கள். அவர்களுள் ஒருவளான ரம்பா, "பாட்டி இனி இருக்க மாட்டாள்! ஒரு நாள் கூடத் தம்பதிகளிடையில் பிரிவு ஏற்பட்டதில்லை. அப்படியிருக்க தாத்தா இவ்வளவு தூரம் போய் விட்டதை அவள் எப்படித் தாங்க முடியும்?'' என்றாள்.

அதற்குள் பாட்டிக்கு மூர்ச்சை தெளிந்தது. தன்னைச் சுற்றிப் பலர் சூழ்ந்திருந்ததைப் பார்த்த

தும் நிலைமையை சமாளிக்க எழுந்து உட்கார்ந்து கொண்டு "ஒன்றுமில்லை! நேற்றிரவு கண் விழித்ததால் தலை சுற்றுவது போலிருந்தது" என்று சொன்னாள். வந்திருந்தவர்கள் சற்று நேரத்தில் திருப்பிச் சென்று விட்டார்கள்.

பிறகு மாலை வரையில் பாட்டியின் உடம்பிலோ மனதிலோ எவ்விதமான சோர்வும் தென்படவில்லை. மற்றவர்களைப்போல அவளும் கூடமாட நடமாடிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்து அனைவருடைய மனதின் பாரமும் நீங்கியது. ஆனால் ஜெகதீஷின் மனப்பாரம் மட்டும் நீங்கவில்லை. அன்றிரவு அவன் பாட்டியைப் பார்த்து "அம்மா! நான் நிச்சயம் செய்து விட்டேன்!" என்று சொன்னான்.

"என்ன?" என்றாள் பாட்டி.

"நீ வந்தால்த்தான் இனி கல்கத்தா போவது! இனி உன்னைத் தனியாக வைத்திருக்க உத்தேசமில்லை!"

"என்ன? நான் தனியாகவா இருக்கிறேன்? கடவுள், கூட இருக்கிறாரே!"

"அதெல்லாம் முடியாதம்மா! நீ கட்டாயம் வந்துதானாக வேண்டும். அப்பாவுக்கோ ஊரை விட்டுப் போவதென்றாலே பிடிக்காது......"

"எனக்குங்கூடப் பிடிக்கவில்லை!"

"முடியாது! நீ......"

"எனக்கு அங்கே வருவதில் அவ்வளவாக விருப்பமில்லையே!"

"அப்போது நானும் போகவில்லை!"

"ஏனம்மா! நீ போனால்த்தான் என்ன? அண்ணா இவ்வளவு தூரம் சொல்லுகிற போது......" என்றாள் சுலோசனா.

"என்னவோ யோசித்துக் கொண்டு "சரி! அப்படியானால் வருகிறேன்!" என்றாள்.

"எப்போது போகலாம்?" என்று கேட்டான் ஜெகதீஷ்.

"நீ சொல்லுகிற போது!"

ஜெகதீஷும் சுலோசனாவும் மிக சந்தோஷமடைந்தார்கள். தேறுதல்கூற வந்த அனைவரிடமும் அவர்கள், "அம்மா கல்கத்தாவுக்கு வருகிறாள்" என்று சொன்னார்கள். அதைக் கேட்ட அனைவரும் மகிழ்வடைந்தார்கள். இப்பேர்ப்பட்ட சத்புத்ரனை அடைந்ததற்காக தாத்தாவை இன்னும் அதிக பாக்யசாலியாகக் கருதினார்கள்.

இருள் அதிகமாகிக் கொண்டே வந்தது. எல்லோரும் தம் தம் வீட்டுக்குச் சென்றார்கள். ஜெகதீஷ், சுலோசனா, மீனாட்சி பாட்டி மூவரும் படுக்கைக்குச் சென்றார்

கள். கடந்த மூன்று நாட்களாகச் சரியான தூக்கமின்மையால் எல்லோரும் விரைவிலேயே நித்திரா தேவியின் வசமாகி விட்டார்கள். மீனுட்சி பாட்டியும் தூங்கி விட்டாள். ஆனல் அடுத்த அறையில் கடிகாரத்தில் மணி பதினென்று அடித்தபோது விழித்துக் கொண்டு விட்டாள். நேற்றிரவு இதே நேரத்தில்தானே அவர் உயிர் உடல் விட்டுப் பிரிந்தது என்பது மின்னலென அவள் நினைவில் தோன்றியது.

பாட்டி படுக்கையிலேயே விழித்தவாறு படுத்துக் கொண்டிருந்தாள். மனேசாந்திக்காக பக்கத்தில் கிடந்த ஜபமாலையை எடுத்து ஜபிக்கலானுள். ஆனல் விரல்கள் விறைத்து விட்டதைப் போலிருந்தன. எழுந்து உட்கார்ந்தாள். பக்கத்தில் சுலோசனு ஆழ்ந்த நித்திரையிலிருந்தாள். இருளில் போட்டோ கண்ணுக்குத் தெரியவில்லை. ஆனல் கண்ணுடி மின்னிக் கொண்டிருந்தது. பாட்டியின் கண்கள் போட்டோவின் மீது விழுந்ததும் போட்டோ உயிர் பெற்று விட்டதைப்போல் அவளுக்குத் தோன்றியது. பாட்டி தன்னிலை இழந்தாள். எழுந்தாள். மெதுவாக அடிவைத்துப் போட்டோவுக் கருகில் வந்தாள். ஐம்பது வருஷங்கள் முன்னுல் சென்று விட்டதைப் போலிருந்தது அவளுக்கு!

தலைப்பாகை. பழைய 'பாஷனில்' செய்த பெரிய கோட்டு, கையில் 'வாக்கிங் ஸ்டிக்', களையான முகத்தில் அடர்ந்த மீசை! இவைகளுடன் போட்டோவில் காட்சியளித்துக் கொண்டிருந்தார் 'தாத்தா! பாட்டியின் கண்கள் போட்டோவை ஊடுருவிப் பார்த்தன. பதினெட்டு வயது யுவன், தலையில் பட்டுப் பாகை, பட்டுக் கோட்டு, அரும்பும் மீசையையுடைய அழகிய முகம், இவைகளுடன் மணக்கோலம் பூண்ட ஜம்புநாதனின் உருவம் அவள் கண்களுக்குத் தெரிந்தது.

பாட்டி தாழ்வாரத்துக்கு வந்தாள். சுவரின்மேல் ஒரு பலகை சாய்த்து வைக்கப் பட்டிருந்தது. "இங்கேதான் அவர் தினம் காலையில் பல்லுக்குச்சி சகிதம் உட்காருவார்." எண்ணிக் கொண்டாள். மறுபடியும் பாட்டி உள்ளே திரும்பினுள்! மாடிப்படிக்கருகில் மரத்தால் செய்த மிதியடி காலில் இடறியது. அதன் மேல் கையை வைத்தாள் பாட்டி. அவரது கால்களின் நினைவு வந்தது. 'எவ்வளவு இரவுகள் அந்தக் கால்களை இந்தக் கைகள் வருடியிருக்கும்?'' என்று சிந்தனை சிறகடித்தது,

பாட்டி எழுந்து மெதுவாகச் சப்தமிடாமல் மாடிக்குச் சென்று ஒரு கணம் மௌனமாய் நின்றுள். இருளில் அவள் கண்கள் சட்டென திரும்பியது. மெத்தையும் திப்பும் போடப்பட்டிருந்தன. ஒரு பக்கம் தண்ணீர்ப் பானை இருந்தது. இன்னெரு பக்கம் பானையின் மூடி கீழே கிடந்தது. 'பானையை மூடி வைக்க அவர் மறந்து விட்டாரா?'

மெத்தைக்குப் பக்கத்தில் பாட்டி உட்கார்ந்தாள். தான் தனியாக இல்லாமல் தன்னுடன் யாரோ பேசுவது போலிருந்தது பாட்டிக்கு.

அதற்குள் கீழே சுலோசனுவின் "அம்மா!" என்ற கூக்குரல் கேட்டது. பாட்டி திடுக்கிட்டாள். கீழே செல்வதற்கு ஓடினுள். மாடிப்படிக் கருகில் வந்தாள். விரைவாக இறங்கலானுள்.

கால் தவறி விட்டதோ — அல்லது படி தவறி விட்டதோ — கீழே உருண்டு வந்து விழுந்தாள். ஜெகதீஷ் மாடி உள் அறையில் தூங்கிக் கொண்டிருந்தான். கீழே விழுந்த சப்தமும், சுலோசனவின் கூக்குரலும் அவனை எழுந்து ஓடி வரச் செய்து விட்டன. சுலோசன விளக்கை ஏற்றினள். பாட்டி மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு படுக்கைக்கு அருகில் வந்தாள். எல்லாரும் திடுக்கிட்டுப் போயிருந்தனர்.

"என்ன சுலோசன ?" என்று கேட்டான் ஜெகதீஷ்.

"கெட்ட கனவு கண்டேன் !" என்று பதிலளித்தாள் சுலோசன பெருமூச்சு வாங்கிக் கொண்டே !

"என்ன கனவு ?"

"அப்பா வந்தார்.........நான் விழித்துக் கொண்டேன் ! அம்மாவைப் படுக்கையில் காணும் !"

ஜெகதீஷுக்கு ஒன்றும் புரியவில்லை. பாட்டியைப் பார்த்த போது அவள் கண்களை மூடிக் கொண்டு படுக்கையில் படுத்திருந்தாள்.

"அம்மா !" என்று கூப்பிட்டான் ஜெகதீஷ். பதில் கிடைக்கவில்லை.

"அம்மா !" என்று கூப்பிட்டுக் கொண்டே சுலோசன பாட்டிக்கருகில் வந்தாள். ஜெகதீஷ் விளக்கைப் பாட்டியின் முகத்துக்கெதிராகப் பிடித்தான், கண் திறக்கவில்லை ! பதில் கிடைக்கவில்லை ! சுலோசன மறுபடியும் "அம்மா!" என்று அலறினள்.

சுலோசன கண்ட கனவு நனவாகி விட்டது. அப்பா வந்திருக்க வேண்டும். அம்மாவைக் கூட்டிக் கொண்டு போய் விட்டார். ஒரு நாள் பிரிவைக்கூட அவர்களால் தாங்க முடியவில்லை! அவர்கள் பாக்யசாலிகள் !!

(ஒரு குஜராத்திக் கதையின் தழுவல்)



மூன்று மணி

[பெ. தூரன்]

மூன்றாம் வகுப்பு மாணவர்கள் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஐந்தாறு கணக்குகளைக் கரும்பலகையில் எழுதி வைத்துவிட்டு ராமசாமி வாத்தியார் யோசனையில் ஆழ்ந்திருக்கிறார்.

நாளைக்குப் போய் அந்த ஆட்டத்தில் ஒரு இருபது ரூபாயை வைத்துப் பார்த்து விடலாம். வந்தால் ஒரு ஐநூறு வரட்டும்; இந்த வேலையை உதறி எறிந்துவிட்டு ஒரு வெற்றிலை பாக்குக் கடை வைத்துக் கொள்ளலாம். சில்லரைக் கடை வைக்கக்கூட வகையில்லாமலல்லவா இதைக் கட்டிக் கொண்டு மாரடிக்க வேண்டியிருக்கிறது? இருபது ரூபாய் சம்பளம்; பஞ்சப்படி பத்து ரூபாய். சாமான்கள் விலை நான்கு மடங்கு உயர்ந்து விட்டது; சம்பளம் ஒண்ணரை மடங்கு தானாகியிருக்கிறது. எப்படித்தான் காலந் தள்ளுகிறது? இந்த லக்ஷணத்தில் பிரசிடெண்டுக்கு மனசு போனபடியெல்லாம் ஜில்லாவின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்கு எந்த சமயத்தில் வேண்டுமானாலும் மாற்றிவிடுகிறார். அதற்குத் தப்ப வேண்டுமானால் அவருக்குத் தொங்கு சலாம் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். சே, இந்த வாத்தியார் வேலை எவ்வளவு கேவலமாக இருக்கிறது.

நாளைக்குக் கட்டாயம் அந்தச் சூதாட்டம் ஆடிப் பார்த்து விடலாம். போனால் ஒரு மாதச் சம்பளந்தானே போகும்? என்னுடைய திட்டப்படி ஒரு ஐநூறு வந்து விட்டால் பிறகு கவலையே ஒழிந்து விடும்.

இப்படி அவர் நீள எண்ணமிட்டுக் கொண்டே இருந்தார். மணி மூன்றாகி விட்டது. அவர் தூங்கி விழலானார். பையன்கள் யாரும் இதை அதிகயாக கவனிக்கவில்லை. தினசரி கண்ட விஷயமாதலால் அவர்களுக்கு அதில் புதுமை ஒன்றுங் கிடையாது. மணி மூன்றானால் வாத்தியார் தூங்கி விடுவார் என்பது அந்தப் பள்ளிக்கூடத்தில் எல்லோருக்கும் தெரியும். கடிகாரம் கூட சில நாட்களில் பிசகிப் போவதுண்டு; ஆனால் அவர் தூங்குவதில் மட்டும் குறிப்பிட்ட காலம் தவறினதே இல்லை.

ராமசாமி வாத்தியார் அதிக நேரம் தூங்கிவிட மாட்டார். ஒரு பதினைந்து நிமிஷந்தான். அதன் பிறகு நிச்சயமாய் எழுந்து விடுவார். எழுந்ததும் ஏதோ யோசனையிலிருந்தது போலப் பாவனை செய்து கொண்டு, "என்னடா கணக்குகள் எல்லாம் போட்டாய் விட்டதா?" என்று சத்தம் போடுவார். அவர் எழுந்திருந்ததைக் கவனியாமல் குறுக்கும்

நெடுக்கும் திரிந்து கொண்டிருக்கும் பிள்ளைகளுக்குச் சுடச்சுட இரண்டு கிடைப்பதும் சகஜம்.

இது நாள்தோறும் நடக்கும் நிகழ்ச்சி. நாளைக்குத்தான் இந்த வாத்தியார் வேலையையே வீசியெறியப் போகிறாரே, இன்றாவது குழந்தைகளை அடிக்காமல் விடப்படாதா — இல்லை. ரொம்ப நாள் பழக்கம்; லேசில் விட்டு விடுகிறதா?

2

இன்று வெள்ளிக்கிழமை. நாளைக்குக் காலை நேரத்தில் மட்டுந்தான் பள்ளிக்கூட முண்டு. ஆகவே மத்தியானம் சாப்பிட்டதும் கண்காட்சியைக் காணச் செல்லலாம். கண்காட்சியிலே சூதாட்டந்தான் முக்கியமான அம்சம். இந்த யுத்தத்தில் தப்பிப் பிழைத்து அயல் நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வந்திருக்கிறார்களே அவர்கள் இதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல வரும்படியும் கிடைக்கிறது அவர்களுக்கு. அதைப்பற்றி எனக்கென்ன? எனக்கு மட்டும் ஒரு ஐநூறு வந்து விட்டால் இந்தத் தரித்திரம் பிடித்த வேலையைத் தூக்கி எறிந்து விடலாம் — என்றிப்படி யெல்லாம் ராமசாமி வாத்தியார் எண்ணித் திட்டம் போட்டு விட்டார். ஓரங்களிலெல்லாம் நூல் பிரிந்து தொங்கும் படியான அவர் சட்டைப் பையில் அன்று பெற்றுக் கொண்ட 'சம்பளம் ரூபாய் இருபதும் பஞ்சப்படி ரூபாய் பத்தும் அடிக்கடி ஓசையிட்டுக் கொண்டிருந்தன.

இந்தக் காரியத்தில் பிரவேசிப்பதற்கு ராமசாமி வாத்தியார் எத்தனையோ நாட்கள் யோசனை செய்திருக்கிறார். யோசனையென்றால் ஒரு வகையான யோசனையல்ல தலை கீழாக, கீழ் மேலாக எல்லாம் பார்த்திருக்கிறார். பல வருஷங்களாக ஜில்லா போர்டு தலைவருக்கும், அங்கத்தினர்களுக்கும், ஜூனியர் இன்ஸ்பெக்டருக்கும், அவர் சேவகனுக்கும், இன்னும் வேலை பார்த்த அநேக ஊர்களிலுள்ள கனதனவான்களுக்கும் பயந்து பயந்து, அந்தப் பயமே ரத்தத்தில் ஊறி இயற்கை சுபாவமாக மாறி விட்டமையால் துணிச்சலாக அவரால் எந்தக் காரியத்தையும் சட்டென்று செய்ய முடியாது. பல நாள் யோசனை செய்து, சிதறுண்டு கிடக்கும் தைரியத்தை யெல்லாம் திரட்டி அத்துடன் வாத்தியார் வேலை மேலுள்ள வெறுப்பையும் அதனால் படும் குடும்பக் கஷ்டங்களையும் கூட்டிக் கடைசியில் சூதாட்டம் ஆடிப் பார்த்து விடுவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். வந்த பிறகுங்கூட எத்தனை தயக்கம், எத்தனை மனக் குழப்பம்!

ஆனால் மறுநாள் மத்தியானம் இரண்டு மணிக்கு ஒரே தைரியத்துடன் கண்காட்சிச் சூதாட்டத்திற்குப் புறப்பட்டு விட்டார். அந்த நாளை விட்டு விட்டால் அடுத்த சனிக்கிழமை வருவதற்குள் கையிலுள்ள பணமெல்லாம் தீர்ந்து போகுமே!

வந்தவர் நேராகச் சூதாடுமிடத்திற்கே காலெடுத்து வைத்தார். ஒரு ஐநூறு ரூபாய் அடித்து விட்டால் அப்புறம் சாவகாசமாகக் கண்காட்சியைப் பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது என்ன அதற்கு அவசரம்?

சூதாட்டத்திலே எது தமக்குப் பிடிக்கிறது; எதில் நல்ல பணம் கிடைக்கும் என்று அவர் ஆராய்ந்து பார்த்தார். ஓரிடத்திலே

மேஜையின் மேல் ஒரு மெழுகு ரட்டு விரித்திருந்தது. அதில் யானை, குதிரை, ஒட்டகம் என்றிப்படி ஆறு மிருகங்களின் உருவங்கள் தனித் தனியாக ஆறு கட்டங்களில் வரையப் பட்டிருந்தன. பக்கத்திலே ஒரு பெட்டியில் பல காகித உறைகள் அடுக்காக இருந்தன. ஒருவன் அந்த அடுக்கிலிருந்து ஒரு உறையை எடுத்து அதிலிருந்த மூன்று மிருகங்களின் படங்களை வெளிப்படுத்தி, மெழுகு ரட்டில் உள்ள அதே மிருகப் படத்தோடு சேர்த்து வைக்கிறான். எந்த மிருகத்தின் மேல் பணம் வைத்தாலும் அதன் பிரதி ஒன்று உறையிலிருந்து கிடைத்தால் அவ்வளவுக் கவ்வளவு பணம் கிடைக்கும்; இரண்டு பிரதிகள் வந்து விட்டால் இரட்டிப்புத் தொகை கிடைக்கும். ஒன்றும் வரவில்லை யென்றால் வைத்த பணத்தை இழக்க வேண்டும்.

அந்த ஆட்டம் வெகு சுலபம். இதற்குத் திறமை யொன்றும் தேவையில்லை. பணத்தை ஏதாவது ஒரு மிருகப் படத்தின் மேல் வைப்பது—அதன் பிரதி உறையிலிருந்து கிளம்பினால் லாபம்; இல்லாவிட்டால் இல்லை. அவ்வளவு தானே? ரொம்பவும் பிடித்தமாக இருந்தது. அங்கேயே ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து மேஜையின் மேல் கையை ஊன்றி கன்னத்தில் உள்ளங்கையைக் கொடுத்துக் கொஞ்ச நேரம் கவனிக்கலானார். முதலில் சற்று நேரமாவது பிறர் ஆடுவதையும், ஆட்டத்தின் போக்கையும் கவனிக்க வேண்டாமா? திடுதிப்பென்று முன்னும் பின்னும் தெரியாதகாரியத்தில் இறங்கி விட முடியுமா? அவ்வளவு அவசரக்காரரல்ல ராமசாமி.

பிறகு ஒரு நாலணாவை எடுத்து ஒரு படத்தின்மேல் வைத்தார். அப்புறம் ஒரு நாலணா. இப்படி ஒரு பதினைந்து நிமிஷங்கள் கழிந்தன. வருவதும் போவதுமாக அதுவரை விசேஷ லாபமோ நஷ்டமோ எதுவும் ஏற்படவில்லை. ராமசாமி வாத்தியார் பார்த்தார். இந்த மாதிரி ஆடிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை யென்று தெரிந்தது. நாள் முழுதும் ஆடினாலும் நாலு ரூபாய் வரும்; அல்லது நாலு ரூபாய் போகும். அதனால் தமது எண்ணம் கைகூடாது என்பதை அவர் உணர்ந்தார். ஆதலால் இருபது ரூபாயையும் எடுத்து ஒரேயடியாக வைத்து விட்டார். இதற்குள் ஆட்டத்திலும் பழக்கமேற்பட்டு விட்டதால் அவருக்குத் துணிச்சல் பிறந்து விட்டது. பணத்தை யானையின் மேல் வைத்துவிட்டு கன்னத்தில் கைகொடுத்து உட்கார்ந்து விட்டார் ராமசாமி.

"வை ராஜா வை; வைக்க வைக்க ஜேய். நாய், குதிரை காலி—வை ராஜா வை" என்று ஆட்டம் நடத்துபவன் எல்லோரையும் கவர்ச்சி செய்து கொண்டிருந்தான். ஆறு படங்களிலும் பணம் கட்டப் பட்டிருந்தால் தானே அவனுக்கு லாபம் நிச்சயம்? தவிர ஒரு படத்தில் இருபது ரூபாய் விழுந்து விடவே அவனுக்கு மற்ற படங்களிலும் பணம் நிறைய வேண்டுமென்ற எண்ணம் அதிகரித்தது.

அதனால் கொஞ்சம் தாமதம் ஏற்படவே ராமசாமி வாத்தியார் யோசனையில் ஆழ்ந்து விட்டார். இன்று மட்டும் ஒரு ஐநூறு வந்து விட்டால் என் கவலையே தீர்ந்து போகும். சூதாடுவது நல்லதல்லத்தான். நானே எத்தனையோ தடவை மாணவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறேன். ஆனால் வேறு வகையில் நான் எப்படிப்

பணம் சம்பாதிக்கப் போகிறேன்? இந்த வாத்தியார் வேலையிலிருந்து கொண்டு மிச்சப் படுத்துவதென்பதோ முடியாத காரியம். ஊரார் தயவில் இலவசமாக காய் கறி, மோர் முதலியவை கிடைக்கா விட்டால் சோற்றுக்கே தாளம் போட வேண்டியதுதான். இன்றைக்கு ஒருநாள் மட்டும் சூதாடி விட்டு மறுபடியும் இந்தப் பக்கமே வரப்படாது. ஒரு ஐநூறு வந்து விட்டால் ராஜீனமாக் கடிதத்தை அந்த ஜில்லா போர்டு காரியதரிசி மூஞ்சியில் எறிந்து விட்டுப் பேசாமல் ஒரு சின்னக் கடை வைத்துக் கொள்ளலாம். தினம் மூன்று நான்கு சுலபமாகச் சம்பாதித்து விடலாம். யாருடைய தயவும் தாக்ஷண்ணியமும் வேண்டிய தில்லை.

இப்படியெல்லாம் அவர் ஒரே விஷயத்தைப் பற்றித் திருப்பித் திருப்பி எண்ணிக் கொண்டிருந்தார். மணியும் மூன்ருகி விட்டது. ஆட்டமும் தொடர்ந்தது. அவருக்கு அதிர்ஷ்டம் அடித்து விட்டது. இரட்டைப் படம் வந்தது. ஆனல் யானையின் மேல் கிடக்கும் அறுபது ரூபாயையும் அவர் தொடவே இல்லை. அடுத்த ஆட்டத்திற்கும் அது அப்படியே குவியலாக இருந்தது.

அடுத்த ஆட்டத்திலும் அவருக்கு யோகந்தான். பணம் வந்து குவிந்து கொண்டிருந்தது. இந்தத் தடவையில் எல்லாவற்றையும் வாரிக் கொள்வார் என்று மற்ற சூதாடிகள் எதிர் பார்த்தார்கள். ஆனல் அவர் பணத்தை தொடவே இல்லை. அவருடைய நெஞ்சத் துணிவைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள்.

இப்பொழுது ஆட்டம் பலத்து விட்டது. யானைமேல் நாநூற்று எண்பது ரூபாய் கிடக்கிறது. எல்லாம் ராமசாமி வாத்தியாருடையது. ஆனல் அவர் தொடவில்லை.

"வை ராஜா வை: வைக்க வைக்க ஜேய். வை ராஜா வை"...

இன்னும் ஒரு உறை வெளியில் வந்தது. அதிலும் ராமசாமி வாத்தியாருக்கு ஜயந்தான். ஆனல் அப்பொழுதும் அவர் பணத்தைத் தொடவில்லை. சில பேர், "என்னடா இந்த மனுஷனுக்கு இத்தனை ஆசை ஆகாது" என்றுகூடப் பேசிக் கொண்டார்கள்.

மற்ருேர் ஆட்டம். ஆனல் யானை வரவில்லை. அத்தனை ரூபாயும் ஆவலோடு ஆட்டக்காரன் வாரிக் கொண்டான். அப்பொழுதுதான் ராமசாமி வாத்தியார் ஒரு பெரு மூச்சு விட்டார். ஆனல் அத்தனை நேரமும் தான் தூங்கி விட்டதை யாருக்கும் காண்பித்துக் கொள்ளவில்லை. அப்படியே பார்த்தார். யானை காலியாக இருந்தது. "அடடா வழக்கம் போலப் பதினைந்து நிமிஷம் தூங்கி விட்டேனே. பணம் முதல் ஆட்டத்திலேயே போய் விட்டது போலிருக்கிறது. போனதைக்கூடப் பார்க்கவில்லை" என்று எண்ணிக் கொண்டே எழுந்து புறப்பட்டார்.

யாராவது தம்மை அங்கே பார்த்து விட்டால் கேவலமாகுமே என்று இப்பொழுது அவருக்கு ஒரே பீதி. வாத்தியார் சூதாடுகிருர் என்ருல் மானம் போய் விடுமே. கூட்டத்தின் ஒரு பக்கத்திலே மாணவர்கள் சிலரும், ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் இருவரும் இருப்பது அவர் கண்ணிற் பட்டது. அவர்களுக்குத் தெரியாமல் வெளியில் போக வேண்டுமென்று அவர் பட்ட அவஸ்தை சொல்லி முடியாது.

சூர சம்மாரம்

து. ராஜகோபால்

காளிப்பட்டி ஜனங்களிடையே உற்சாகமோ, கலகலப்போ துளிக்கூடக் காணாததற்குக் காரணமில்லாமலில்லை. மறுநாள் சூர சம்மாரம். ஆனால் சூரனைப் பற்றி நினைத்த போதுதான் எல்லோர் மனதிலும் கவலை குடிகொண்டது. சென்ற முப்பது நாற்பது வருடங்களிலே இது மாதிரித் தடங்கல் ஏற்பட்டதே யில்லை என்று விஷயமறிந்த கிழவர்கள் சொன்னார்கள்.

காளிப்பட்டி சூரசம்மாரம்தான் அந்த வட்டாரத்திலுள்ள ஆயிரக்கணக்கான ஜனங்களை வருஷந்தோறும் இழுக்கும். சுற்று வட்டாரத்திலுள்ள அத்தனை ஜனங்களுக்கும் அதுதான் பெரிய திருவிழா. திருவிழாவிற்கு நாலைந்து நாட்களுக்கு முன்பே ஜனங்கள் கூட ஆரம்பித்து விடுவார்கள். வயல் வெளிகளிலெல்லாம் எங்கு பார்த்தாலும் கூடாரங்களே தென்படும். அங்கே சமையல் சாப்பாடு வெகு மும்முரமாக நடந்து கொண்டிருக்கும். உற்சவம் மூன்று நாட்களுக்கும் ஊர் திமிலோகப்படும். கடைசி நாளன்றுதான் சூர சம்மாரம். அதைப் பார்ப்பதற்கென்றே அன்று விசேஷக் கூட்டம் கூடும். ஒரு பக்கத்திலே வாண வேடிக்கைகள் வானத்திலே பச்சை சிவப்பு நிறங் காட்டிப் பட்டிக்காட்டு ஜனங்கள் வாயை ஆவென்று திறந்து கொண்டு வைத்தவிழி வாங்காமல் பார்க்கும்படி செய்துகொண்டிருக்கும். மற்றொரு புறத்திலே திருவிழாக் கடைகள் விதவிதமாக அலங்கரிக்கப்பட்டு திருவிழாவிற்கு வந்தவர்கள் மனதில் ஏதாவது வாங்கியே தீரவேண்டுமென்ற தீர்மானத்தைக் கிளப்பிவிட்டுக்கொண்டிருக்கும். இவைகளைத் தவிர தெருவில் நின்று கொண்டும் நடந்து கொண்டும் விற்றுக் கொண்டு செல்லும் ஊதல் வியாபாரிகளின் பலவித ஊதல் சப்தம் ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டு எதிரொலிக்கும். போதாததற்கு ரங்கராட்டினம் வேறு, ஙொய் என்று மாறி மாறிச் சுற்றிக் கொண்டே இருக்கும். இவ்வளவு வேடிக்கைகள் நடக்கும்போது கூட்டத்துக்குக் கேட்பானேன்?

சுவாமி நன்றாக அலங்கரிக்கப்பட்டு பவனி வருவார். எதிரே சூரன் வேலும் கையுமாகக் கிளம்பி ஆடிக்கொண்டே வருவான். வெகுநேரம் சண்டை நடக்கும். சூரன் பலவிதங்களிலும் தன் வீரதீர சாமர்த்தியங்களைக் காட்டிக் காண்போரைத் திகைக்க வைப்பான். இரவு புறப்படும் ஊர்வலம் விடியற்காலம் கோயிலை யடையும். பிறகு சூர சம்மாரம். சூர சம்மாரத்தோடு திருவிழாவும் முடிந்துவிடும்.

●

அன்று என்ன காரணத்தினாலோ திடீரென்று சுக்கிரிக் கவுண்டனுக்கு சுரம் வந்துவிட்டது. சாதாரணமாக ஆரம்பித்த சுரம் கடுமையாக மாறிவிட்டது. நாட்

களை எண்ணிக்கொண்டே படுக்கையில் படுத்துக் கிடந்தான் கவுண்டன். துடியாய்த் துடித்த கவுண்டன் இன்று சரியாகிவிடும். நாளை சரியாகி விடும் என்று மனக் கோட்டை கட்டி ஏமாந்தது தான் மிச்சம். ஊராரும் நாட்களை எண்ணி வந்தனர். கடைசியில் அவர்களும் ஏமாந்தார்கள். "அப்பனே வேலாயுதம்! பழனியாண்டவா, கார்த்திகேயா, கந்தா, கடம்பா, உன்னுடைய திருவிழாவை நீதான் சரியாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். கந்தன் கை விடமாட்டானென்றே எல்லோரும் நம்பினர். தங்கள் பிரார்த்தனை இம்மாதிரி வியர்த்தமாகப் போய் விட்டதைக் குறித்து வருந்தாதவர் கிடையாது. சூரசம்மார தினம் நெருங்க நெருங்க அவர்கள் மனதிலும் கவலை சூழ ஆரம்பித்து விட்டது.

திருவிழாவிற்கு முதல் நாள் கிராமத்துப் பெரிய தனக்காரரும் பூசாரியும் மற்றும் சிலரும் சுக்கிரிக் கவுண்டன் வீட்டை அடைந்தனர்.

"வாருங்கள்" என்றான் கவுண்டன்.

"அண்ணே ஒடம்பு எப்படி இருக்குது?" என்றான் ஒருவன். இவர்களெல்லோரையும் கண்டதுமே கவுண்டனுக்கு என்னவோ போலிருந்தது. அவனுடைய மனம் 'திக்' கென்றது. அவர்கள் வந்த காரியத்தை ஊகித்தறிய வெகு நேரம் பிடிக்கவில்லை கவுண்டனுக்கு.

"ஏது, இப்படி எல்லாருமா கூடிகிட்டு வந்தது?" என்றான் கவுண்டன் சமாளித்துக்கொண்டு.

பெரிய தனக்காரர் விஷயத்தைத் தன் வாயால் சொல்ல பயந்தாரோ என்னவோ, "நீங்க தான் சொல்லுங்களேன்." என்றார் எல்லோரிலும் மூத்தவராகக் காணப்பட்ட ஒரு கிழவரை நோக்கி.

கிழவர் ஒரு கனைப்புடன் ஆரம்பித்தார். தாம் பேசவேண்டியதை முன் கூட்டியே யோசித்துக் கொண்டு வந்திருக்கும் பிரசங்கியைப் போல் அவர் ஆரம்பித்தார். "தம்பி! நாளைக்கி சூரசம்மாரம்னு உனக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதைப்பத்தி..." கிழவரின் பேச்சைப் பாதியிலேயே வெட்டிக் கேட்டான் கவுண்டன். "ஆமாம். அதுக்கென்ன?"

கவுண்டனுடைய குரலில் ஒரு வித கரகரப்பு தென்பட்டது. மேலே பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. அவனுடைய பதவிக்கும், கௌரவத்திற்கும் வந்திருக்கும் ஆபத்தை நினைத்தபோது அவன் கண்களிலிருந்து கண்ணீர் மளமள வென்று வழிந்தது.

கிழவரும் நீட்டி வளர்த்தாமல் சுருங்கக் கூறி விட்டார். "ராமக் கவுண்டனை சூரன் வேசம் போட்டுக்கச் சொல்லி எல்லோருமாகக் கேட்டோம். அவனும் சரியின்னு சொல்லி விட்டான். அதுக்கு ஒங்கிட்ட இருக்கிற துணி, மணி, மொத்த வேச சாமானையெல்லாம் வாங்கி கிட்டு போவலாம்மினு தான் வந்தோம்" என்றார் கிழவர் ஒரே மூச்சில்.

கவுண்டனுடைய மனம் இதை எதிர் பார்த்துக் கொண்டு தான் இருந்தது என்றாலும் அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் தவித்தது. அவனுடைய கண்களில் பழைய காட்சிகள் அப்படியே சினிமாக்

காட்சி போல் தோற்றமளித்தன. சின்ன வயதிலே அவனுடைய பாட்டன் வேலக் கவுண்டனுடைய ஆட்டத்திலே மயங்கி நின்றது, பிறகு அப்பனுடைய ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அஞ்சியது முதலியன எல்லாம் இன்று நடப்பது போலத் தோன்றியது. அப்பன் சிறியதும் ஞாபகம் வந்தது. அவனுடைய அப்பன் தன்னுடைய வாழ்க்கையிலேயே கடைசித்தடவையாக சூரன் வேஷம் போட்டுக் கொண்டதை ஒரு பெரிய வீரச் செயல் என்றே கூற வேண்டும். அவனுக்கு அப்பொழுது கடுமையான காய்ச்சல் அடித்துக் கொண்டிருந்தது. வைத்தியர் கூட அவனை சூரன் வேஷம் போட்டுக் கொண்டு ஆடக்கூடாதென்றும், ஆடினல் அந்த அதிர்ச்சி தாங்காது உயிருக்கு ஆபத்து நேரிட்டாலும் நேர்ந்து விடும் என்று எச்சரித்திருந்தும் அவன் கேட்கவில்லை. ஒரே பிடிவாதமாக ''உடலிலே உயிருள்ளவரை நான் கடமையைச் செய்தே தீருவேன்'' என்று கூறி சூரன் வேஷம் போட்டுக்கொண்டு அமர்க்களம் செய்து விட்டான். அதே மூச்சில் ஐந்தாறு நாட்களுக் கெல்லாம் எமனிடமிருந்து அழைப்பும் வந்துவிட்டது. ''பாவம்! காய்ச்சலோடு ஆடினது தான் உயிருக்கே உலைவைத்துவிட்டது'' என்றனர் எல்லோரும். உண்மையும் அதுவே.

இதை நினைத்த போது சுக்கிரிக் கவுண்டனுக்கு ஆவேசம் கட்டுக் கடங்காமல் கொதித் தெழுந்தது. கண்கள் கோபத்தில் நெருப்புப் பொறி கக்கின. துடிதுடிக்கும் மீசையை ஒரு தடவை நன்ருக முறுக்கி விட்டுக்கொண்டு நிமிர்ந்தான். ''ஹூம்......ராமக் கவுண்டன்...... சூரன் வேசம் போட்டுக்கிரானு? பலே! பூனையைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கிட்ட மாதிரிதான்...ஹஹ்ஹா...என்று கூறிக் கடகடவென்று சிரிக்க ஆரம்பித்து விட்டான் கவுண்டன். அந்தப்பயங்கரமான சிரிப்பு எல்லோர் மனதிலும் அச்சத்தைக் கிளப்பியது. அவர்களோடு வந்திருந்த ராமக்கவுண்டன் மெதுவாகப் பின்னல் போய்ப் பூனை போல்ப் பதுங்கிக் கொண்டான்.

கவுண்டன் தன் உயிரைக்கூட இழக்க சம்மதித்துவிடுவான். ஆனல் தன்னுடைய அந்தப் பதவியை — குல கௌரவத்தை இழப்பதென்ருல்......? உயிரையும் பொருட் படுத்தாது கடமையை நிறைவேற்றிய அப்பனுடைய ஆத்மா தன்னை மகன் என்று கூறிக்கொள்ளக்கூட வெட்கப் படுமென்பதை நினைத்தபோது கவுண்டன் துள்ளிக் குதித்தான். தான் உயிருடன் இருக்கும்வரை வேருெருவர் அந்தக்கௌரவத்தை அடைய விடக்கூடாதென்ற திட உறுதி அவன் மனதில் குடி கொண்டது. மதம் பிடித்த யானை போல் சீறியெழுந்து படுக்கையில் உட்கார்ந்தான்.

''ஹூம் இதெல்லாம் இந்த சுக்கிரிக் கவுண்டங்கிட்ட பலிக்காது. உயிருள்ள வரைக்கும் ஒரு கை பார்த்துத் தீத்துடுவேன். எந்தப்பயலுக்கு அத்தினி தைரியம்? அவனுக்கு என்னகுடல் ரெண்டா? பாத்துக்கரேன் ஒருகை நாளைக்கி'' என்று கூறிக் களைப்பு மிகுதியால் படுக்கையில் சாய்ந்துவிட்டான் கவுண்டன்.

''சரிதான் அவனை நம்புவதில் பிரயோசனம் இல்லை. காய்ச்சல் வேகத்திலே உளறுகிருன்'' என்று முடிவு கட்டிவிட்டார் கிழவர். மற்றவர்களும் அதை ஆமோதித்

தனர். ஆகவே கடைசியாக எல்லாம் புதிதாகவே தயார் செய்து விடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. வேலையும் மும்முரமாக நடக்க வாரம்பித்து விட்டது.

கவுண்டனுக்கு இரவு பூராவும் தூக்கமே வரவில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினான்,

மறுநாள் காலையில் திடீரென்று தன் உடம்பு முற்றிலும் குணமடைந்து விடாதா என்று ஏங்கித் தவித்தது அவன் மனம். "அப்பனே முருகா, வேலாயுதம் நீ தான்கதி" என்றது வாய் அவனையறியாமலேயே. சென்ற முப்பது நாற்பது வருஷங்களிலே நடந்த சூர சம்மாரங்களை நினைத்து நினைத்துப் பார்த்தது அவன் மனம்

முதல்தடவையாக அவன் சூரன் வேஷம் பேட்டுக்கொண்டபோது அதற்கென்றே தனியாக ஜிகினைச் சட்டைகள் தயார் செய்தான். அந்த உடையுடன் அவன் கூட்டத்தின் நடுவில் தோன்றியபோது அந்த காஸ்லைட் வெளிச்சத்திற்கும் புது ஜிகினைவிற்கும், அப்பாடா கண்களைப் பறித்தன வென்றே சொல்லவேண்டும். கையில் பளபள வென்று மின்னும் வேலை ஒரு சுழற்று சுழற்றி ஒரு 'ரவுண்டு' அடித்து நின்றானால் அவனைப் புகழாதவர்களே இருக்க மாட்டார்கள். முதல் வருஷத்திலேயே நல்ல புகழ். "அப்பனைத் தூக்கியடிச்சுட்டான் பயல். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" என்று பலபடியாகப் புகழ்ந்தனர் எல்

லோரும். அந்தக் காலத்திலேயே அவனுக்கு வயது இருபதுதான் இருக்கும். ஆள் வாட்டசாட்ட மாக சூரன் வேஷத்திற்கு வெகு பொருத்தமாக இருப்பான்.

●

அநேக வருஷங்கள் ஓடி மறைந் தன. எத்தனையோ இடைஞ்சல் களுக்கிடையே அவனும் தன் கடமையை விடாமல் நிறைவேற்றி வந்திருக்கிருன். ஒரு வருஷம் கடவுள் சோதனை செய்துவிட்டார். அவன் மனைவி காத்தாயிக்குக் கடுமையான காய்ச்சல் வந்து விட் டது. இப்பொழுதோ அப்பொழு தோ என்ருகி விட்டது நிலைமை. மனைவியைச் சாகும்நிலையில் விட்டு விட்டுச் சூரன் வேஷம் போட்டுக் கொள்ள மாட்டான் கவுண்டன் என்றே எல்லோரும் நினைத்தனர். ஆனல் அவன் தன் மனைவியின் உயிரைக் கூடப் பொருட் படுத்த வில்லை. "அப்பன் வேலாயுதம் கை விட மாட்டான்." என்று சொல்லிக்கொண்டே தன் கடமை யை நிறைவேற்றச் சென்று விட் டான். பாவம்! சாகும் தறுவாயி லுள்ள மனைவியின் கடைசி வேண்டுகோளைக் கூட நிறை வேற்றிவைக்க முடியாமற் போ யிற்று அவனல். சூர சம்மாரம் முடிவதற்கு முன்பே காத்தாயின் உலக வாழ்க்கை முடிந்துவிட்டது.

கவுண்டன் கண்களில் கண்ணீர் கிரம்பித் தளும்பியது. "ஆஹா! குலவிளக்கு மட்டும் ஒன்றிருந் தால்......" நீண்டதொரு பெரு மூச்சு வெளிவந்தது. கவுண்ட னுடைய புத்திரனில்லாக்குறை என்றைக்கு மில்லாத ஒரு புதிய வேகத்தோடு வந்து அவன் நெஞ்சை யழுத்தியது.

நெடுநேரத்திற்குப்பிறகு கவுண் டன் கண்ணயர்ந்தான். மறுநாள் காலை அவனல் எழுந்திருக்கக்கூட முடியவில்லை. என்ன இருந்தாலும் ராத்திரி தன் உயிரைக் கொடுத்தா கிலும் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று உறுதி கொண் டான்.

பகல் பொழுது எப்படிக் கழிந்த தென்று கவுண்டனுக்கே தெரி யாது. அவன் கண் விழித்த போது எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. தூரத்திலிருந்து கொட்டு முழக்கம் இருட்டைப் பிளந்து கொண்டுவந்து கவுண் டன் காதில் தாக்கியது. மின்சா ரம் தாக்கியதுபோல் துடித்தெழுந் தான் கவுண்டன். "கந்தா, கடம் பா, கார்த்திகேயா" என்று கூறிக் கொண்டே மூலையிலிருந்த பெட்டி யைத் திறந்தான். அதற்குள் வெகு பத்திரமாக வைக்கப் பட் டிருந்த துணிகளை எடுத்து அவசர அவசரமாக அணிந்துகொண்டான் மூலையில் சாத்தி வைக்கப்பட் டிருந்த வேல் அடுத்த நிமிடம் கவுண்டன் கையில் மின்னியது. புதியதொரு சக்தி உடலிற் பாய்ச் சப்பெற்றவன்போல கவுண்டன் "வேல் வேல்" என்று கத்திக் கொண்டே ஓடினன்.

கூட்டத்திலே ஏகப் பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. கையில் பளபளக்கும் வேலுடன் "வேல் வேல்" என்று கத்திக்கொண்டு மின்னலைப்போல் கூட்டத்தைப் பிளந்து கொண்டு சென்ருன் கவுண்டன். "அப்பனே ஷண் முகம்" என்ற கோஷம் வானைப் பிளந்துகொண்டு கிளம்பியது. மறுகணம் கவுண்டன் கைவேல் மின்னிச் சுழன்றது. ஹாவென்று அலறிக்கொண்டு கீழேவிழுந்தான்

சூரன் வேஷத்திலிருந்த ராமக் கவுண்டன். அவன் மார்பிலிருந்து சூடான ரத்தம் பீரிட்டது.

"சூரனைப்பார்க்கலே, சூரனை...... ஹ்ஹஹ......ஹா"! என்று பேய்க் கூச்சலிட்டான், சுக்கிரிக் கவுண்டன். அவனுடைய கண்கள் ரத்தவெறி கொண்டு விளங்கின. மறுகிமிடம் வாயில் நுரை கக்கிக் கொண்டு கீழேவிழுந்தான். பிறகு எழுந்திருக்கவேயில்லை.

வருஷா வருஷம் சூரனை வதைப்பதுபோல் பாசாங்கு செய்து பொய்வேஷம் போட்டு நடிப்பதில் குமரக் கடவுளுக்கு திருப்தி ஏற்படவில்லை போலும்! ஒன்றுக்கு இரண்டாகச் சூரனை நிஜமாகவே வதைத்து அபார திருப்தி அடைந்து விட்டார். ஆகவே அந்த வருஷத்திற்குப்பிறகு அந்த ஊரில் சூரசம்மாரம் நடக்கவேயில்லை. சுக்கிரிக் கவுண்டனின் குல கௌரவத்திற்கும் பங்கம் ஏற்படவில்லை.



[சுவாமி சுத்தானந்த பாரதியார்.]

அத்தியாயம் பதினாறு

வாணி வந்தாள்

கோலாலம்பூர் தமிழனில் கொட்டையெழுத்தில் விளம்பரம் :-

இன்னிசை விருந்து !

புகழ்பெற்ற தமிழ் வித்வான்கள் பாடுகிறார்கள்.

வாணிதேவி – வீணை

கமலாதேவி – பிடில்

கண்ணன் – குழல்

சாமிநாதன் – பாட்டு

ஜம்புநாதன் – மிருதங்கம்

கோலாலம்பூர் நகர மாளிகையில் கச்சேரி. டிக்கெட் தமிழன் நிலையத்தில் கிடைக்கும்.

முந்துங்கள் ! முந்துங்கள் !!

இதைக் கண்டதுமே தமிழர் திரள் திரளாக முந்திவந்து டிக்கெட் வாங்கினர்.

வாணி கோஷ்டி கோலாலம்பூருக்கு வந்ததுமே தமிழ்மணியைப் பற்றியே விசாரித்தாள். தமிழன் ஆசிரியர் நரசிம்மன் விவரம் சொல்லி உடனே தமிழ்மணிக்குத் தந்தி பேசினார். "இதோ வருகிறேன்" என்று உடனே பதில் வந்துவிட்டது. வாணியின் உள்ளம் குளிர்ந்தது.

அன்று மாலையே தமிழ்மணி வந்து வாணி முன் நின்றான். "வரவேண்டும்! நல்வரவு" என்று வாணியும், சாமிநாதனும், ஜம்புநாதனும் பிறரும் அன்புடன் வரவேற்று விருந்திட்டு உபசரித்தனர்.

வாணி தமிழ்மணியுடன் ஒரு மணி நேரம் தன் அந்தரங்கங்களை அந்தரங்கமாகப் பேசினாள். அந்தரங்கப் பேச்சு முழுதும் நமக்குத்

தெரியாது; என்றாலும் சாரம் இதுவே.

வாணி மணியின் பணிக்கே தன்னை அர்ப்பணித்து விட்டாள். மணி வாணியுடன் ஐக்கியமாய் விட்டான். இனி இருவரும் கலைக் கோயிற் பணிக்கே வாழ்வர்.

ஆனால் கலைக்கோயில் கட்டி முடியுமட்டும் இருவரும் பிரமசரியம் காக்க வேண்டும் என்பது தீர்மானம். நாளை கோலாலம்பூர் கச்சேரி யான்தும் எல்லாரும் சிங்கப்பூர் சென்று ஒரு திட்டம் தயாரிப்பார்கள். வாணியுடன் வந்த எல்லாரும் தமிழ்மணியின் பணியில் ஈடுபடுவார்கள். இவர்கள் முயற்சியால் வரும் பணமெல்லாம் கலைக்கோயிலுக்கே அர்ப்பணமாகும். இந்தக் கலைக் கூட்டத்தைக் கலைக்கோயிலார் (ஆங்கிலத்தில் Art Union.) என்போம். இப்போதைக்கு இம்மட்டும் அறிவோம். இதோ கச்சேரி.

கோலாலம்பூர் நகர மாளிகையில் திமுதிமு வென்று ஜனங்கள் நிறைந்தனர். தமிழன் ஆசிரியர் நரசிங்கம் தமிழ்மணியையே தலைமை வகிக்கப் பிரேரேபித்தார். கரகோஷத்திடையே தமிழ்மணி தலைமை வகித்து வாணியைப் பற்றிக் கலைக்கோயிலுக்கே வாழும் இசைவாணி என்றும் மற்றவர்களையும் கலைச் செல்வர்களென்றும் அறிமுகப் படுத்தினர். பிறகு கச்சேரி தொடங்கியது.

வாணி இனிமையாக ஹம்ஸத்வனி ராகம் வாசித்து, "அருள் புரிவாய் – கருணைக் கடலே" என்ற கீர்த்தனத்தை முழக்கினள். அவளுக்கிசைந்து சாமிநாதன் குரலும், கமலம் பிடிலும், கண்ணன் குழலும், ஜம்புநாதன் முழவும் கான வர்ஷம் பொழிந்தன. சங்கராபரணம், பியாகடை, கல்யாணி, காம்போதி, அடாணா, மோகனம், குந்தலவராளி முதலிய ராகங்களில் இனிய கீர்த்தனங்களும், தேவாரம், திருப்புகழ், காவடிச் சிந்து, தில்லானா முதலியவையும் நடந்தன. முதலில் சபையோர் தமிழ்மணி ஒரு பாட்டுப் பாடவேண்டும் என்றனர். தமிழ்மணி வெகு உற்சாகமாக ஆனந்த பைரவி ராகம் பாடி, சவுக்க காலத்தில் "பேரின்ப வெள்ளம் பெருகுதையே" என்ற இனிய கீர்த்தனம் பாடினன். சபை சொக்கிப் போனது. தமிழ் தெரியாதவர்கூட உள்ளக்கிளர்ச்சி கொண்டனர்.

முடிவில் தமிழ்மணி, "இன்று நன்னாள்; நாங்களனைவரும் தமிழ்க் கலைக்கே வாழ உறுதி பூண்டு "கலைக் கோயிலார்" என்ற பெயருடன் கூடியிருக்கிறோம். அடுத்த ஞாயிற்றுக் கிழமை ஆறு மணிக்குச் சிங்கப்பூர் நகர மாளிகையில் தமிழிசை விருந்து நடைபெறும். எல்லாரும் வந்து கேட்டு எங்களை ஊக்க வேண்டும். கோலாலம்பூர் மகா சனங்களின் ஆதரவுக்கு வந்தனம். இக்கச்சேரி இவ்வளவு விமரிசையாக நடக்கக் காரணமாயிருந்த தமிழன் ஆசிரியருக்கு வந்தனம். எங்கள் கலைப் பணிக்குப் பொது ஜனங்களின் அன்பும் ஆதரவும் தொடர்ந்து பெருகினல் தமிழன் மாண்பு உலகில் வளரும்– எந்தாய் வாழ்க!" என்றமர்ந்தான். தமிழன் ஆசிரியர் கலை வாணருக்கும் தமிழ்மணிக்கும் சபையோருக்கும் வந்தனம் கூறினர். அத்துடன் சபை கலைந்தது.

தமிழ்மணி மறுநாளே ஞாயிறு கச்சேரிக்கு வேண்டிய விளம்பரங்களை அச்சிட்டுக் கொண்டு, கலைக்கோயிலாருடன் சிங்கப்பூர் சென்றான்.

அத்தியாயம் பதினேழு
தமிழிசை வெற்றி

சாமிநாதன் விளம்பரப் பொறுப்பை ஏற்ருன். தமிழ்மணி, வாணி, கமலம், கண்ணன், ஜம்பு முதலியவர்களுடன் பத்து இனிய உருப்படிகளைப் பயின்ருன். பொன்னம்பலம் அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தான்.

"பேரிசை விருந்து! கலைக் கோயிலாரின் அரிய கச்சேரி—சிங்கப்பூர் நகர மாளிகையில்—ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணிக்கு—டிக்கெட் வாங்க முந்துங்கள்" என்று விளம்பரங்கள் பறந்தன. மலேயா முழுதும் இதே பேச்சு. பத்திரிகைகளெல்லாம் கொட்டையெழுத்தில் விளம்பரம் போட்டன.

ஞாயிறு புலர்ந்தது. வாணியும். மணியும் பள்ளியெழுச்சி பாடினர். கண்ணன் குழலும், கமலம் பிடிலும், ஜம்புவின் முழவும், சாமியின் குரலும் சேர்ந்து பாடின. மந்தமாருத அலைகள் கான ரசம் ததும்பிக் கூத்தாடின. அப்போது ஒரு கனவான் வந்து கதவைத் தட்டினன். பொன்னம்பலம் திறந்தான். "ஹலோ நாஷிமா வருக, வருக" என்று தமிழ்மணி வரவேற்றுபசரித்தான். நாகாஷிமா தமிழ்மணியைத் தழுவிக் கொண்டு, "என்னருமைநண்பா. நீ நீடூழி வாழ்க! நடக்கட்டும் பாட்டு" என்ருன். பதினைந்து நிமிஷம் பாடியதும் காலைக் கடன்களை முடித்து, நாகாஷிமாவும் மணியும் தனியே பேசினர்.

நாகாஷிமா சங்கீதப் பிரியன். வியாபாரமுறையில் தமிழருடன் நெருங்கிப் பழகியவன். இந்தியரிடம் உள்ளன்பு கொண்டவன். ஷிண்டாய் மதமென்ருலும், வேதாந்தத்தில் விருப்பமுள்ளவன். சுவாமி விவேகானந்தரையும், ராம தீர்த்தரையும் அவன் நேராகப் பார்த்ததுண்டு; அவர்கள் அருள் மொழிகளில் மோகங் கொண்டவன் நாகாஷிமா. சில காலமாகத் தமிழ் நாட்டு முனிவரைப் பற்றி அவன் ஆங்கிலந் தெரிந்த தமிழரிடம் கேட்டு அறிந்து வருகிருன். தமிழ்மணியின் கல்வியும், ஒழுக்கமும், கலையும், தியாகமும் அவனை வசீகரித்தன. டோகியோவிலும், நாகசாகியிலும்,கோபிலும் அவனுக்கு நல்ல நண்பர் இருக்கின்றனர். நாகாஷிமா விவாகமாகி இரண்டு ஆண் குழந்தைகளை அடைந்த பிறகு மனைவியை இழந்தான். பிறகு மணம் புரியவில்லை. பிள்ளைகள் படித்து சர்க்கார் வேலை பார்க்கிருர்கள். ஆதலால் தன் வாழ்வைத் தமிழ்மணியுடன் நல்ல காரியத்தில் செலவிட உறுதி கொண்டான். இந்த உறுதியின் முடிவாக அவன் தமிழ்மணியை ஜப்பானுக்கு வரும்படி அழைத்தான். தமிழ்மணியும் ஒப்புக் கொண்டான்.

இதுவே இருவர் பேச்சின் சாரமுமாகும். இனி நகர மாளிகைக்குச் செல்வோம்.

மாளிகை ஜகஜ் ஜோதியாக விளங்குகிறது. நகாஷிமா அழகான ஜப்பான் வேலைப்பாடுகளால் தானே நேராக இருந்து மேடையை அலங்கரிக்கச் செய்தான்.

மணி ஐந்துக்கே மாளிகை கொள்ளாது கூட்டம் கூடி விட்

டது. தமிழர், வருடர், இந்திவா லாக்கள், சீனர், ஜப்பானியர், ஐரோப்பியர் அனைவரும் கூடி மணியின் கான ரசத்தைப் பருக ஆவலாயிருந்தனர். தமிழ்மணியும், வாணியும் தங்கள் கோஷ்டியுடன் தயாராக மேடைத் திரைக்குப் பின்னால் வந்து தக்கபடி அமர்ந் தனர்.

டணர் என்று மணி ஆறு அடித் ததும் திரை உயர்ந்தது. பொன் னம்பலம் ஜம் மென்று நின்று ஆங்கிலத்தில் சுருக்கமாகப் பேசி னார்.

"நண்பர்காள், கலாபிமானி காள்! வணக்கம். இறைவனரு ளால் இன்று கலைக்கோயிலாரின் (Art Union) அரிய இசை விருந் தைக் கேட்போம், இவ்விருந்தை அளிப்பவர் இசைப் புலவர்கள். தமிழ்மணி என்னும் இராமநாதன் இசைத் திறமையை நீங்கள் அறி வீர்கள். வாணி, வீணை கானமே வாழ்வாகக் கொண்ட கலைத்திரு; கமலமும் கண்ணனும் உடன் பிறந்த இசை மணிகள். ஜம்பு நாதன் தாள நிபுணர். சாமி நாதன் நல்ல அறிஞர் இவர்கள் இன்று தமிழிற் பாடுவார்கள். தமிழிசை உலக இசைச் செல்வத் தில் மிகப் பழமையானது; பல வகையான இராக தாளங்களுடன் இயங்குவது. எங்கள் இசைக் கலையில் எத்தனையோ நுட்பங்க ளுண்டு. இது பல மொழியினர், பல கலையினர் கூடிய சபை. ஆதலால் அனைவரும் விரும்பிக் கேட்கும்படி இன்றைக் கச்சேரி நடக்கும். அதிகமான ஆலா பனங்களும் ஸ்வரசஞ்சாரங்களு மல்லாமல் நவரஸபாவனைகளும் பேசும்படி தமிழ் மணி பாடுவார்.

அவர்கள் பாடும் முதற் பாட்டு கல்யாணி ராகம் ஜம்பை தாளம். இப்பாட்டின் கருத்தைக் கேளுங் கள்:-

உலகில் உள்ள எல்லாப்பொருள் களைக் காட்டிலும் உயிருக்கு இன்ப மளிப்பது எது? இறைவ னுடன் கலந்திருக்கும் பேரின் பமே; அதுவே சுகம்; அந்தச் சுகநாதனைத் தன்னுடன் எப்போ தும் பிரியாமல் இருந்து வாழ்வை நடத்த வேண்டும் என்று பக்தன், வேண்டுகிறான்.

இறைவனே நான் குறையுள்ள மனிதன்; எத்தனையோ பிழைகளைச் செய்கிறேன். இருந்தாலும் என்னைக் கை விடாதே. என் குற்றங்களைத் தண்டித்துக் கண் டித்து என்னைக் கூடி உன் மய மாக்கி இன்பமருள். நீயின்றி நானில்லை; நீரின்றித் தோட்ட மில்லை. தாயின்றி மகவில்லை. மக வின்றிக் குலமில்லை. உன் அரு ளின்றி உலக வாழ்வில்லை. ஆத லால் உன்னைச் சரண் புகுந்தேன். இனி இப்பாட்டைக் கேளுங்கள்."

பொன்னம்பலம் அமர்ந்ததும் வாணி வீணை மீட்டினாள். மற் றொரு வீணைபோல் மணி குரலெ டுத்தான். கமலம் லாகவமாகப் பிடிலிழுத்தாள். கண்ணன் சுருதி யுடன் லயித்துக் குழலூதினான். ஜம்பு உத்ஸாகமாக மத்தளமடித் தான். சாமிநாதனும் ஜாலராப் போட்டுக் கொண்டே இடை யிடையே சேர்ந்து பாடினான்.

கல்யாணி ஜம்பை

பல்லவி

எப்போதும் பிரியாமல்
இருப்பாய் என் உள்ளத்தில்,
செப்பரிய சுக நாதனே,

அநுபல்லவி

தப்பிதங்கள் செய்தாலும்
தண்டித்துக் கண்டித்துத்

தயவாகக் கூடியுன்
மயமாகச் சுயமாக (எப்)

சரணம்

நீயின்றி நானில்லை;
நீரின்றி வனமில்லை
நிலமின்றிப் பயிருமில்லை
தாயின்றிச் சூலில்லை
சேயின்றிக் குலமில்லை
தண்ணருளிலாதிந்த
மண்ணுலக வாழ்வில்லை (எப்)

ஆலாபனத்தில் அதிகம் நீட்டாமல், கல்யாணியின் களை காட்டி ஒரு ரவையான பிர்க்கா இழுத்து விட்டுக் கச்சிதமாகக் கீர்த்தனம் பாடி நாலு சங்கதி சரணத்தில் போட்டு நிரவல் செய்து பாட்டின் உணர்ச்சியையும் குரலிற் காட்டிப் பாடினான் மணி. பக்க வாத்தியங்கள் அவன் குரலுடன் லயித்து ஐக்கியமாயின.

சபை ஆனந்தக் களிப் பெய்தியது. முதற் பாட்டானதும் கரகோஷத்திற்கிடையே பொன்னம்பலம் எழுந்து நின்று, இரண்டாம் பாட்டு, இந்தோள ராகம், சாய்ப்பு தாளம் – சொல்லடி பசுங் கிளியே – என்ற அரிய தெய்வக் காதற் பாட்டு. இதில் காதலி தன் மனக்கிளியை தன் காதலனை இறைவன் புகழைச் சொல்லி ஆறுதலளிக்க வேண்டுகிருள்.

இவ்வாறே காம்போதி, தோடி கேதாரம், ஹம்ஸத்வனி, ஸஹானு, பியாகடை, நீலாம்புரி, மோகனம் முதலிய ராகங்களில் கீர்த்தனம் பாடிப் பிறகு திருப்புகழும் சிந்தும், தில்லானுவும், நோட்டும் பாடினன் மணி. சபை எழுந்து கூத்தாடத் தொடங்கி விட்டது.

தலையாட்டினவர்கள் தாளம் போடத் தொடங்கினர். உள்ளக் கிளர்ச்சி சொல்லி முடியாது. முடிவில் சிந்துபைரவி, திஸ்ர ஏகதாளத்தில்,

அன்புமாலை பூண்டோர்களிரும்
அழகனுக்கு மங்களம்
இன்பமே சொரூபமான
இறைவனுக்கு மங்களம்

என்றுபாடி, கச்சேரியை முடித்தான் மணி.

கச்சேரி முடிவில் நாகாஷிமா இசைவாணருக்கு வந்தனமளித்து, "நான் எத்தனையோ பாட்டுக் கேட்டிருக்கிறேன்; இன்றுதான் இசையின்பம் பருகினேன். கலைக்கோயிலாரின் இன்னிசையை உலகெல்லாம் பருக வேண்டும். அவர்களை நான் டோகியோவுக்கு அழைத்துள்ளேன். வரச் சம்மதித்திருக்கிருர்கள் – என்றமர்ந்தான்.

உடனே ஒரு அமெரிக்க கனவானும் அவர் மனைவியும் (ஜெங்கின்ஸ் தம்பதிகள்) மேடையிலேறினர். தமிழ்மணிக்கு அழகான தங்கக் கடிகாரமளித்தனர். பிறகு கனவான், "இதுகாறும் இந்திய சங்கீதமென்றுல் நாங்கள் புரியாமல் கேலி செய்தோம். இன்றுதான் உண்மையான சங்கீதத்தைக் கேட்டோம். எங்கள் காதும் மனமும் இன்புற்றன. இந்தத் தேவகானத்தை அமெரிக்காவும் கேட்டு இன்புற வேண்டும். நானும் என் மனைவியும் ஆர்ட் யூனியனை அமெரிக்காவுக்கு அழைக்கிறோம். அவர்கள் ஜப்பான் சென்று அப்படியே வாங்குவர் துறைமுகத்திற்கு வந்தால், அங்கே வரவேற்போம்" என்றதும் வாணிக்குப் பெருமகிழ்ச்சி; கமலத்திற்கும் அப்படியே.

அடுத்த வாரம் ஜப்பானுக்குப் பயணம். இனி அவர்களை 'தோகியோ' என்ற கப்பலிற் சந்திப்போம்.

(தொடரும்)

ஆசிரியர்
சரத் சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு.
ஆர். ஷண்முகசுந்தரம்.

கிரணமயிடம் தெரிந்த அளவில் சுகத்தையே காணோம். அவள் பொறுமை யிழந்து, "துண்டு துண்டாக அல்லது 'முழுசாக' என்கிற வார்த்தைகள் எல்லாம், பேசுவதற்காக உண்டாக்கப் பட்டவை. தனக்கு இன்பம், எப்படிக்கிடைக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடும். அதுவும் எல்லா சமயத்திலும் முடியாது. உலகப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொள்ளுவதற்குத் துணிந்து எவன் முன் வருகிறானோ வரட்டும். அது என்னால் முடியாது. காசியில் உள்ள கோவில்களை யெல்லாம் இடித்துவிட்டு சணல், ஆலைகளைக் கட்டினால்தான் மனிதர்கள் சுகம் அடைவார்கள்' என்று ஒரு சணல் ஆலை முதலாளி நினைக்கலாம்.

ஆனால் மற்றவர்கள் எல்லோரும் அப்படி நினைக்க முடியுமா? சுகம் என்பது என்ன என்று எனக்கு விளங்காதவரையிலும் நீங்கள் சொல்லுவது ஒன்றையும் நான் கேட்கமாட்டேன்" என்று கூறி விட்டு எழுந்திருக்க தொடங்கினாள். அதைக் கண்டு ஆரான் அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "கொஞ்சம் உட்காரு; இவ்வளவு படித்துவிட்டு இதற்குக் கோபித்துக்கொண்டால் எல்லாம் வீணாகிவிடும். கிரண், உன்னிடம் உண்மையைச் சொல்லுகிறேன். சுகம் என்ன என்பது எனக்குத் தெரியாது. தெரிந்தவர்கள்தான் யாராவது உண்டா என்பதும் எனக்குத்தெரியாது. அது ஒரு வேளை தெரிய முடியாததாய் இருக்கலாம். நமது தேசத்திலே முதன் முதலில் துக்கத்தைப் போக்குவதற்கு மூன்று வழிகளில் முயற்சித்திருக்கிறார்கள். அம் மூன்றையும் விலக்கிவிட்டால் எஞ்சி இருப்பது தான் சுகம் என்றும் சொல்லி விட முடியாது" என்றான்.

கிரணமயி, இவைகளைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டு இருக்க முடியவில்லை. "இன்னது என்று சொல்ல முடியாதபோது பிறர் கற்பனை செய்யும் சுகத்தை மட்டும் எப்படிக் கேலி செய்வது? நன்மை தீமைகளைப் பற்றி சீர் தூக்கிப் பார்க்கும் முன் உங்களுடைய தராசை சரி செய்து கொள்ள வேண்டியது அவசியம். அதை நீங்கள் எந்த ஆதாரத்தின் பேரில் சரி செய்வீர்கள் என்பதும் எனக்குத் தெரியாது" என்றாள்.

ஆரான் சிறிது நேரம் பேசாம லிருந்துவிட்டு, "கிரண், மனப் போக்கு எத்திசையில் செல்கிறது என்பது எனக்குத் தெரியும். காலத்தைப் பற்றிய கற்பனே, ஆத்மாவைப் பற்றிய கற்பனே, கடவுளைப் பற்றிய கற்பனே முதலிய திரைகளை உன் இதயத்திலிருந்து அகற்றுதவரையிலும் உனக்கு சந்தேகம் இருந்து கொண்டுதான் இருக்கும். சுகம்தான் வாழ்க்கையின் முடிவான லட்சியம். சுகம் அடைவதில்தான் வாழ்க்கை பூர்த்தியடைகிறது. இது தெரியவில்லையா. இன்னும் ஒன்று இருக்கும் என்று மனம் சொல்லிக் கொண்டுதான் இருக்கும். ஆனால் அந்த 'இன்னும் ஒன்றைத்' தேட முடியாது. அது உன்னைச் சூழ்ந்து கொள்ளும். மேலே போக முடியாது. உன்னிடம் ஆவலைக் கிளப்பிவிடும். ஆனல் சந்தோஷத்தை அளிக்காது. வழியைப் பற்றி கூறும்; ஆனல் வழி காட்டாது" என்றான்.

சிறுவயதிலிருந்து இம்மாதிரி கல்வி முறையிலேயே வளர்ந்து பெரியவளானவள். இன்று ஒவ்வொரு விஷயங்களாக அனைத்தும் நினைவிற்கு வந்தன. அவளுடைய சிந்தனை நிகழ் காலத்தைக் கடந்து, கடந்த காலத்தில் சென்று நிலைத்தது. அப்போது வாடிய முகத்துடன் அறைக்குள் வந்து சேர்ந்தான் திவாகர் அவனைப்பார்த்ததும் கிரணமயினுடைய துர்க்கனவுகள் எல்லாம் ஓடி ஒளிந்தன. அவள் முகமலர்ச்சியுடன், "என்ன விஷயம் பாபு? எங்கு போயிருந்தாய்? இன்னும் சாப்பிடவில்லையே? அடேடே! சரியான ஆளப்பா நீ" என்றாள்.

அவளுடைய குரலைக் கேட்டு திவாகர் திடுக்கிட்டான். இதற்கு முன் அம்மாதிரிக் குரலைக் கேட்டதில்லை போலும்! அந்தக் குரலில் துவேஷமோ, துக்கமோ ஒன்றும் இல்லை. உண்மையிலேயே அன்பு ததும்பியதாக இருந்தது. திவாகர் ஆச்சரியத்தால் பேசாமலிருந்தான்.

கிரணமயி மறுபடியும் சிரித்துக் கொண்டு, "காலையிலிருந்து எங்கு போயிருந்தாய்?" என்றாள்.

திவாகர் மெதுவாக, "கீழே போயிருந்தேன்" என்றான்.

"கீழேயா? இன்னேரவரையிலும் அங்கு ஏன் உட்கார்ந்து கொண்டிருந்தாய்? இங்கு வந்து சாப்பிட்டுவிட்டுப் போகக் கூட நேரமில்லையா?" என்றாள்.

திவாகர் பேசவில்லை. மௌனமாக அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சரி, கீழே என்ன செய்து கொண்டிருந்தாய்?"

அவளுடைய முகத்திலே பழைய படியே அன்பு பொங்கி நின்றது. ஆனந்தத்தால் கண்ணீர் பொங்கியது. திவாகர் மிகுந்த அன்புடன், ',மன்னி, கீழே ஒரு வங்காளி தன் வீட்டுக்காரியுடன் ஆராகான் போகிறான். அங்கே அவனுக்கு வீடுகூட இருக்கிறது..." என்றான்.

கிரணமயி உற்சாகத்துடன், "என்ன?" என்றாள்.

"ஆமாம். அவர்கள் நல்லவர்கள் போலிருக்கிறார்கள்......"

"அப்படியானல் நாமிருவரும் அவர்கள் வீட்டிலே போய் இறங்கி விடலாமே. அந்தப் பெண்ணைப் பார்த்துப் பேசலாமா"

திவாகர் சந்தோஷத்துடன், "நன்றாகப் பேசலாம். வீட்டுக்

காரியும் உன்னைப் பார்க்க வேண்டுமென்கிருள்'' என்ருன்.

கிரணமயி ஆச்சரியத்துடன், "வீட்டுக்காரி யார்?'' என்ருள்.

"ஹரீஷ்பாபு, தன் மனைவியை இந்தப் பெயர் சொல்லித்தான் அழைக்கிருன். அங்கே அவர்களுக்கு ஒரு வீடும் இருக்கிறது.''

இதைக் கேட்டுவிட்டுக் கிரணமயி ஒன்றும் பேசவில்லை, வீடு வாடகைக்கு விடும் வீட்டுக்காரிகளின் நடத்தை நல்ல குடும்பப் பெண்களுடையதைப்போலிராது. ஆகையால்தான் திவாகர் கூப்பிட்டதிற்கு கிரணமயி சிரித்துக் கொண்டு, "அவர்கள் நல்லவர்கள் தானு?'' என்ருள்.

திவாகர், உற்சாகத்துடன், "ஆமாம். நல்லவர்கள்தான். ஒருதரம் பேசினல்......''

"வேண்டாம்; இன்னெரு நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்.''

"வேண்டாம் மன்னி; உன் காலைப் பிடித்துக்கேட்டுக் கொள்கிறேன். அவள் இங்கு வருவதற்குப் பிரியப் படுகிருள். அவள் வீட்டில்ப் போய் இறங்கப் போகிறேம். ஆகையால் அவளை அழைத்து வருகிறேன்'' என்று கூறிவிட்டு திவாகர் எழுந்தான்.

கிரணமயிக்கு வனே தாங்க முடியாத துக்கம் உண்டாயிற்று. அதை அவள் வெளிக்குக் காட்டாமல், "சரி போ'' என்ருள்.

முன்பின் தெரியாத ஊருக்குப் போகும் போது நண்பர்கள் கிடைத்தால் அதைப் பாக்கியமாகத்தான் யாரும் கருதுவார்கள். கடைசியாகக் கிரணமயி இதை நினைத்துக் கொண்டுதான் திவாகர் கருத்துக்கு இசைந்தாள். ஆனல் உண்மையாகவே அவளை அழைத்துக் கொண்டுவர திவாகர் கிளம்பவே கிரணமயி தன் நிலையை நினைத்துக் கொண்டு வருந்தினள்.

உடனே அவள் வந்து விடுவாள் அவளும் வங்காளிப் பெண்; நடுத்தர வயதுடையவள்; அவளை ஏமாற்ற முடியாது! திவாகருக்கும் எனக்கும் வயதில் உள்ள வித்தியாசம் வேறு எந்த வங்காளிக் கணவன் மனைவிக்கும் இருக்காது. இது அவள் கண்ணில் படாமலா போய்விடும்? இதை நினைத்துக் கொண்டு கிரணமயி மிகுந்த வருத்தமடைந்தாள்.

சிறிது நேரத்திற்குள் திவாகருக்குப் பின்னல் அந்த வீட்டுக்காரியும் வந்தாள். அவள் பெரிய வீட்டுப் பெண் அல்ல என்று கிரணமயி அவளைப் பார்த்ததும் அறிந்து கொண்டாள். கல்கத்தாவில் வீட்டு வேலை செய்யும் பெண்களைச் சேர்ந்தவள் என்று எண்ணினள். கிரணமயிக்குத் தலையிலிருந்த பாரம் இறங்கியது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவள் உடனே, "வாம்மா, உட்கார்!'' என்ருள்.

கிரணமயினுடைய அழகைக் கண்டு வந்தவள் பிரமித்து விட்டாள். மிகவும் மரியாதையுடன் வணங்கிவிட்டு கதவோரத்தில் உட்கார்ந்து கொண்டு, "பாபுஜி மூலம் உங்களைப் பற்றிக் கேள்விப் பட்டவுடன் வீட்டுக்காரர் உங்களைப் போய் தரிசித்துவிட்டு வரச் சொன்னர். நீங்கள் ரொம்ப போக்கிரிகள் நிறைந்த ஊருக்குத்தான் போகிறீர்கள். ஆனல் யாருக்கும் காமினி வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்கக் கூட துணிச்சல் உண்டாகாது. அப்படி யாராவது தலை காட்டினல்

துடைப்பக் கட்டையால் அடித்து விடுவேன்'' என்று கூறிவிட்டு துடைப்பம் வைத்திருந்த இடத்தைப் பார்த்தாள்.

கிரணமயி மிகுந்த சந்தோஷத்துடன், "இப்பொழுதுதான் உறுதியாயிற்று. புதிய இடத்திற்குப் போவது பயமாகத்தான் இருந்தது. நாங்களிருவரும் இதைப் பற்றி எவ்வளவோ யோசித்தோம்'' என்றாள்.

"பயம் என்னத்திற்கு? காமினி வீடு துறைமுகத்துக்குப் பக்கத்தில் இருக்கிறது. இதைக் கேட்டால் எமதர்மன்கூட வேறு வழியில் போய் விடுவான். அங்கே வந்தீர்களானால் உங்களுக்கு ஒரு கஷ்டமும் இருக்காது. வாடகை ஐந்து ரூபாய்தான். நீங்கள் நான்கு ரூபாய் கொடுத்தால் போதும். அப்புறம் பாபு வேலையில் சேர்ந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம். இதைப் பற்றி ஒன்றும் கவலைப் படாதீர்கள், அம்மா! என் வீட்டுக்காரர் பிடிக்கிற ஆள் 'மாட்டேன்' என்று ஒருக்காலும் சொல்ல மாட்டார். உங்கள் ஆசீர்வாதத்தால் நாங்கள் அவ்வளவு கௌரவமாகத்தான் வாழ்கிறோம்'' என்று காமினி கூறினாள்.

கிரணமயி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு, "ஆண்டவன் அருளால் உங்களுக்கு நன்மை உண்டாகட்டும்'' என்றாள்.

அவளுடைய முகத்தில் வீட்டுக்காரியின் கூறிய பார்வை விழுந்தது. "இது என்ன அம்மா, அதிசயமாக இருக்கிறது! நெற்றியில் குங்குமம் அடையாளத்திற்குக் கூடக் காணோமே? குங்குமப் பரணியைக் கொடுங்கள், நிரப்பிக் கொண்டு வருகிறேன். சுமங்கலிப் பெண் இப்படி இருக்கலாமா?'' என்றாள்.

கிரணமயி எதிர்பார்த்துத் தானிருந்தாள். "குங்குமம் வைத்து அழிந்து விடவில்லை. நான் வைக்கும் குங்குமம் ஒரு வருஷமாக காளிதேவிக்கு அர்ப்பணமாகி வருகிறது. அந்த வருஷம் பாபு பிழைப்பார் என்றே யாரும் நினைக்கவில்லை'' என்று கூறிவிட்டு திவாகரைக் கடைக் கண்ணால் பார்த்தாள். அவனுடைய முகம் வெட்கத்தால் சிவந்து விட்டது.

"ஓஹோ! அப்படியா சங்கதி!'' என்று கூறி வீட்டுக்காரி ஆமோதித்தாள். பிறகு, "பரவாயில்லை. ஆராகானிலும் காளி கோவில் இருக்கிறது. போனால் காளிக்குப் பூஜை செய்து குங்குமம் அணிந்து கொள்ளலாம். இல்லாவிட்டால் நாலு பேர் என்ன சொல்ல மாட்டார்கள்? ஆராகானைப் போல கெட்ட ஊர் இந்த மூன்று லோகத்திலும் கிடையாது. ஆனால் எங்கள் பயத்தால் எல்லாப் போக்கிரிகளும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால்......''

கிரணமயி புன்முறுவலுடன், பாபுவிடம் இரண்டு நாளாக இதைப் பற்றித்தான் பேசுவது. உங்களைப் பற்றிச் சொன்னதை உங்கள் எதிரில் சொல்லக்கூடாது. கப்பலில் கால் வைத்ததிலிருந்து பயந்து கொண்டிருந்தோம். எங்கே போவது......''

வார்த்தை முடிவதற்குள், "பயம் என்னத்திற்கு அம்மா?'' என்று கூறி அடைக்கலம் அளித்து விட்டு தன்னைப்பற்றிப் புகழ ஆரம்பித்தாள். பிறகு தங்கள் தங்கள் குடும்ப சுக துக்கத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். இதைப்

பார்ப்பவர்கள் யாரும், இவர்களிருவரும் சற்று நேரத்திற்கு முன் தான் பரிச்சயமானவர்கள் என்று சொல்ல முடியாது.

திவாகர் அருகில்தான் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். கிரணமயி கூறிய அளவு கடந்த பொய்களைக் கண்டு அவன் ஆச்சரியப்பட்டான். வெகு நேரத்திற்கப்புறம் அவன் எழுந்து வெளியே போனுன். இதைக் கண்டு கிரணமயி, "பொழுது போய் விட்டது. இன்னும் சாப்பிடவில்லை. மறுபடியும் வெளியில் போகிறீர்களே?" என்ருள்.

திவாகர் அளித்த பதில் காதில் விழவில்லை. ஆனுல் புரிந்து கொண்டாள். கிரணமயி வருத்தத்துடன், "அது முடியாது. வெளியில் போனுல் உடனே திரும்பி வர மாட்டீர்கள்" என்ருள். வீட்டுக்காரியின் முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு, "எனக்கு மாமியார் மாமனர் யாரும் கிடையாது. ஆகையால் அவரைச் சாப்பிட வைப்பதற்குள் பெரும்பாடாய் விடுகிறது" என்ருள். பிறகு சற்றுப் பொறுத்து, "நானுக இருக்க பலவந்தமாக வாவது சாப்பிட வைக்கிறேன். வேருெருத்தியாக இருந்தால் அழுது கொண்டே இருக்க வேண்டியதுதான்" என்ருள்.

திவாகர் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டான்.

வீட்டுக்காரி சிரித்துக்கொண்டு, "ஆமாம் பாபு நீங்களிருவரும் அயலூரில் எப்படிக் குடித்தனம் செய்யப் போகிறீர்கள்? ஆனுல் என் வீட்டில் அதெல்லாம் ஒன்றும் முடியாது. அம்மாளுக்கு வருத்தம் உண்டாக்கக் கூடாது" என்று கூறிவிட்டு கிரணமயியைப் பார்த்து, "பாபு வயதும் உங்கள் வயதும் சரியாக இருக்கும் போலிருக்கிறதே?" என்ருள்.

கிரணமயி தலையை அசைத்துக் கொண்டு, "நான் வயதில் பெரியவளல்ல. இரண்டு பேரும் சம வயதுதான். அவர் வைகாசியில் பிறந்தார். நான் ஆடியில் பிறந்தேன். இந்த இரண்டு மாதம் தான் அதிகம். ஆனுல் அநேகர் என்னை மூத்தவளாக நினைக்கிருர்கள். ரொம்ப வெட்கமாக இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டு சிரித்தாள்.

ஆனுல் வீட்டுக்காரியும் இந்தச் சிரிப்பில் சேர்ந்து சிரிக்கவில்லை. "எதற்காக வெட்கப்பட வேண்டும்? பத்து வயதுச் சிறுவனுக்கு ஐம்பது வயதுக் கிழவியைக் கலியாணம் செய்கிருர்கள். அதொன்றும் பிரமாதமில்லை, ஆராகான் போனதும் பூஜை செய்து குங்குமம் வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சுமங்கலியாகத் தெரியாது. சரி, நான் போகிறேன், நீங்கள் சாப்பிடுங்கள். நேரமிருந்தால் இரவு வருகிறேன்" என்று கூறி வணங்கிவிட்டுச் சென்ருள்.

அத்தியாயம் முப்பத்தி ஏழு

சதீஷின் வனவாச வாழ்க்கை ஒரே மாதிரியாகக் கழிந்துகொண்டு இருந்தது. அவனுடைய உறுதி சற்றேனும் தளரவில்லை.

"தன்னுடைய பந்து மித்திரர்களை விலக்கி தனியாக வந்து வாசம் செய்யும் மனிதனுக்கு திடீரென ஆடை அலங்காரங்களின் மேல்

இவ்வளவு மோகம் ஏற்படுவானேன்? பறவைகளின் கல கல கீதத்தில் மனம் லயித்து மூழ்கி இருந்தவன் மறுபடியும் பாட்டுப் புத்தகத்தை எதற்காகத் திருப்ப வேண்டும்? சிதார், புல்லாங்குழல் முதலிய வாத்திய கருவிகள் மேஜைமீது அழகாக வைக்கப் பட்டு இருக்கின்றனவே, அவன் முகத்தை மறைத்திருந்த சோகத் திரை எவ்விதம் மறைந்தது? இவைகளெல்லாம் யோசிக்க வேண்டிய விஷயங்கள்.

உண்மையிலேயே இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாக சதீஷ் எவ்வளவோ மாறுதல் அடைந்து விட்டான். அவன் உருவே மாறிவிட்டன. இந்த மாறுதலுக்குக் காரண மென்ன என்று நாம் தேடவேண்டிய தில்லை. ஒரு சமயம் இந்த பக்கத்து காற்றுக்கு இவ்வித சக்தி உண்டு என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். சரோஜினியின் கலியாண சம்பந்தமாக வெளிப்படையாக யாரும் பேசாவிட்டாலும் மாப்பிள்ளை யார் என்பதை அனைவரும் தெரிந்திருந்தார்கள் என்று சொன்னாலே போதும்.

சரோஜினியின் தாயார் இவ்விஷயத்தில் ஒரு வருஷத்திற்கு முன்பு கல்கத்தாவில் இருக்கும்பொழுதே மிகுந்த ஆவலுடையவளாய் இருந்தாள். ஆனாலும் அவள் மனதில் ஒரு சந்தேகம் குடிகொண்டிருந்தது. பழைய சமூகத்தின் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ளாமல் படித்த பெண்ணாகிய சரோஜினி எவ்வாறு விவாகம் செய்து கொள்ளச் சம்மதிப்பாள் என்று எண்ணினாள். இப்பொழுது ஜகத்தாரணி சாந்திப்பூர் போயிருந்தாள் திரும்பிவந்து அவள்தான் முடிவு செய்வாள். சாந்திப்பூர் போகும் பொழுதே இவைபற்றி குறிப்பாக உணர்த்தி விட்டுச் சென்றிருந்தாள்.

காலையில் சதீஷ் சாரங்கிக்குப் புதிய தந்தி போட்டுக் கொண்டு இருந்தான். அப்போழுது பிகாரி ஒரு கனவானை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தான். வந்தவர் ஜோதிஷ் வீட்டுக் கணக்குப் பிள்ளை ஜெகத்தாரணியுடன் சாந்திபூர் போய்விட்டு இப்பொழுது அவளுடன் திரும்பிவந்திருக்கிறுன்.

கணக்குப் பிள்ளை வணங்கி விட்டு, "இன்று அம்மா சாப்பாட்டிற்கு உங்களை அழைத்துவரச் சொன்னார்கள்" என்றுன்.

அதைக் கேட்டு சதீஷ், "அவர்கள் எப்பொழுது திரும்பி வந்தார்கள்?" என்றுன்.

"நான்கு நாட்கள் ஆகின்றன."

ஒருவாரமாகவே சதீஷ் அந்தப் பக்கமே போகவில்லை. தன்கருத்து வெளியான பிறகு ஜோதிஷ் வீட்டிற்குப் போவதற்கு வெட்கமாக இருந்தது. "சரி பத்து பதினெரு மணிக்குள்ளாக நான் வருவதாகப் போய்ச் சொல்லுங்கள்" என்றுன்.

கணக்கப்பிள்ளை வணங்கிவிட்டுச் சென்று விட்டான்.

சதீஷிற்கு அழைப்பு அனுப்பி விட்டு ஜெகத்தாரணி சமையலுக்கு எவ்வித ஏற்பாடும் செய்யாமல் இருந்தாள். சதீஷ் சாயங்காலமாகத்தான் வருவான் என்று எண்ணிக்கொண்டு இருந்தாள். இப்பொழுது கணக்குப்பிள்ளை கூறியதைக் கேட்டு அவள் திகைப் படைந்து விட்டாள்.

இன்று ஏகாதசி ஆகையால் தனக்காக ஒன்றும் சமைக்க

வேண்டியதில்லை. சமையல் காரியும் இரண்டு மூன்று நாட்களாக மலேரியாவில் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் கோபத்துடன், "நீ இப்பொழுதே எதற்காக வரச்சொல்லி விட்டு வந்தாய்? உனக்கு கொஞ்சம்கூட புத்தி இல்லையா?" என்ருள். கணக்குப் பிள்ளை பயத்துடன் "நான் வரச்சொல்லவில்லை. அவராகவே வருவதாகச் சொல்லும்பொழுது நான் என்ன செய்யட்டும்" என்ருன்.

ஜகத்தாரணி பழயபடியே கோபத்துடன், "அப்படியானல் சரி நீங்களே எங்கேயாவது போய் பெரிய மீனைகப் பார்த்து வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்ருள்.

இன்று காலையிலிருந்தே அவள் கோபத்துடன் இருந்தாள். சதீஷிற்கு அழைப்பு அனுப்பியபிறகு தான் மறுபடியும் சஷாங்கமோகன் வந்திருக்கிருன் என்பது தெரிய வந்தது. அவனுடைய நடை உடை பாவனைகளும், முக்கியமாக அவன் சரோஜனியைக் கல்யாணம் செய்துக்கொள்ள விரும்புகிருன் என்பதும் அவளுக்கு மிகுந்த வெறுப்பை அழித்தது. இருபது நாட்களுக்கு முன்பு ஏதோ காரணமாக அவன் இங்கு வந்திருந்தபொழுது சரோஜனியை அவன் விவாகம் செய்துக்கொள்ள முடியாது என்பதை ஜெகத்தாரணி தெளிவாகக் கூறியிருந்தாள். அப்படி இருந்தும் அழைக்காமலேயே அவன் மறுபடியும் வந்திருப்பதைக் காணக் கோபமாக இருந்தது. அதைத்தவிர, அவன் வந்திருப்பது கொஞ்சநேரத்திற்கு முன்பு தெரிந்திருந்தால்கூட அவள் சதீஷிற்கு அழைப்பு அனுப்பி இருக்கமாட்டாள். அவன் வந்திருப்பதை ஏன் தெரிவிக்கவில்லை என்று ஜோதிஷிலிருந்து வேலைக்காரர் வரையிலும் கோபித்துக் கொண்டாள். சரோஜனி வெளி அறையிலுள்ள தாயாரின் கண்ணிற்குப்படாமல் மேலே போய்க்கொண்டு இருந்தாள். அவளுக்கும் சஷாங்கமோகன் வந்திருப்பது இதுவரையிலும் தெரியாது. ஜெகத்தாரணி அவளைக் கோபத்துடன் பார்த்துக்கொண்டு "உலாவப் புறப்பட்டு விட்டாயா? சிறிது நேரத்திற்காவது காலில் மாட்டியிருப்பவைகளை கழற்றி வையடி அம்மா. சதீஷ் இங்கே சாப்பிட வரப்போகிருன். நான் சமையல் செய்யாவிட்டால் அவன் இங்கே தண்ணீர்கூட குடிக்க மாட்டான். அவைகளைக் கழற்றி வைத்துவிட்டு சமையல் அறைக்கு வா வயோதிக தாயாருக்கு உதவி செய்வதைக்கண்டு உங்கள் குரு நாதர் கோபித்துக் கொள்ளமாட்டார்" என்று கூறினள்.

கோபத்தில் ஜெகத்தாரணி என்ன வேண்டுமானலும் பேசிவிடுவாள் என்பது அனைவருக்கும் தெரியும். சரோஜனி மேலே போகாமல், "இதோ வருகிறேன் அம்மா!" என்ருள்.

ஆனல் தாயாரின் கோபம் மட்டும் இன்னும் தணியவில்லை. "நீ வந்துதான் என்னசெய்து கொடுக்கப் போகிருய்? பதினேழு பதினெட்டு வயதாகப்போகிறது. இன்னும் சமையல் செய்யத் தெரியாது. நானும் பணக்காரர் வீட்டுப் பெண்தான். இருந்தாலும் அந்த வயதிலேயே குடும்பத்தை நடத்தினேன். இன்று சமையல் காரி வரவில்லையானல் பசியால் தான் சாகவேண்டும். ஆகாரமில்லாத வீட்டில் பிள்ளை பிறப்பது வீண்தான்" என்று கூறிவிட்டு சமையல் அறைக்குள் சென்று விட்டாள். தன் குழந்தைகளின்

ஆகாரத்தில் இவள் ஏன் இவ்வளவு சிரத்தை காட்டுகிறுள் என்பதற்கு இவளுடைய பூர்வ சரித்திரத்தைத் தெரிவது நலமாயிருக்கும். பாரசநாத் வக்கீல் தொழிலில் நிறையச் சம்பாதித்தார். மேலும் சம்பாதிக்க ஆசை கொண்டு பாரிஸ்டருக்குப் படிக்கத் தீர்மானித்தார். அப்போது ஜகத்தாரணி அழுது தொழுது, பட்டினி கிடந்து கணவனைத் தடுக்க முயற்சித்தாள். அதில் அவளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. பாரசநாத் ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பனிரண்டுவயது பையன் ஜோதிஷ் ஆறுவயது சிறுமி சரோஜனி, ஜகத்தாரணி முதலியவர்களை விட்டு விட்டு அவர் அந்நிய தேசம் சென்றுவிட்டார். முதலில் சில காலம் ஜகத்தாரணி மிகுந்த துக்கமடைந்தாள். பிறகு மனதைத் தேற்றிக்கொண்டு கணக்குப் பிள்ளை உதவிகொண்டு குடும்பத்தை நடத்திவந்தாள். இருந்தாலும் கணவனை நினைத்து சதா துக்கப்பட்டுக்கொண்டே இருந்தாள். சில நாளைக்குப்பிறகு பாரசநாத் பாரிஸ்டராகித் திரும்பி வந்தார். மீண்டும் பேரளவில் சம்பாதித்தார் புதிய மாளிகைகள் கட்டினுர். ஆனுல் ஜகத்தாரணி ஒன்றிலும் சிரத்தை காட்டவில்லை. கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் பிளவு நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டு வந்தது. பேச்சு வார்த்தைகளும் முற்றிலும் நின்று விட்டன.

ஒருநாள் ஜோதீஷ் தாயாரிடம் வந்து, "அம்மா, அப்பா என்னை வெளிநாட்டிற்கு அனுப்பப் போகிறுர்" என்றுன்.

தாயாருக்கு முன்னமேயே இந்தப் பயம் இருந்து வந்தது. அவள் மிகுந்த வருத்தத்துடன், "எப்போது" என்றுள்.

"இரண்டொரு மாதத்திற்குள்ளாக" என்றுன்.

"சரி" என்று கூறிவிட்டுத் தாயார் எழுந்து போய்விட்டாள். மகன் புறப்பட்ட அன்று தாயார் கதவை தாளிட்டுக் கொண்டாள். ஜோதிஷ் மூடியகதவுக்கு முன்னல் இருந்து வணங்கி விட்டுப் புறப்பட்டு விட்டான். பாரசநாத், சரோஜினியை அழைத்துக் கொண்டு பம்பாய் வரையிலும் சென்று வழி அனுப்பி வந்தார். அவர் திரும்பி வரும்போது ஜகத்தாரணி வீட்டில் இல்லை. தனது தாயார்வீட்டிற்கு சாந்திபூர்போய் விட்டாள். அவளுடைய சகோதரன் கோவிந்தபாபு இங்குவந்து சாப்பிடாமல்கூட அழைத்துப் போயிருப்பதாகத் தெரிய வந்தது. மனைவி வீட்டை விட்டுப் போனதிற்காக அவர் துளிகூடக் கவலைப் படவில்லை.

மனைவியை அழைத்து வரும்படி ஆட்களை அனுப்பினுர். ஆனுல் ஜகத்தாரணி திரும்பி வரவில்லை. பாரசநாத், சரோஜினியை ஒரு போர்டிங் ஹவுஸில் சேர்த்து விட்டார். ஜகத்தாரணி கணவனது செய்கைகள் அனைத்தையும் கேள்விப் பட்டாள். ஆனுல் அதைத் தடுப்பதற்கு கொஞ்சம்கூட முயற்சிக்க வில்லை.

இவ்விதம் ஐந்து வருஷங்கள் கழிந்தன. ஜோதிஷ் திரும்பிவந்தான். தாயாரை அழைத்துவரச் சென்றுன். ஆனுல் தாயார் பிடிவாதமாக வர மறுத்துவிட்டாள். அவள் அழுதுகொண்டு, "எல்லாவற்றையும் கேள்விப் பட்டேன், நீங்கள் சுகமாக இருந்தால் போதும். என்னையும் அந்த நரகக் குழிக்கு இழுக்கவேண்டாம். என்னுல் அவைகளையெல்லாம் பொறுக்க முடியாது" என்றுள்.

"நாம் தனியாக வசிக்கலாம் அம்மா! உன்மேல் அந்தவீட்டு நிழல்கூட விழாமல் பார்த்துக் கொள். நான் சம்பாதிப்பது நமக்குப்போதும். நீவா!"

ரொம்ப கஷ்டத்துடன் ஜகத்தா ரணி ஒத்துக்கொண்டாள். மகனி டம் கல்கத்தாவில் தனியாக வீடு பார்க்கச் சொல்லிவிட்டு கல்கத்தா புறப்படுவதற்கு ஏற்பாடு செய்யத் தொடங்கினாள். ஒருவாரத்திற்குள் வீடு அமர்த்திவிட்டு வந்து கூட் டிப்போவதாகச் சொல்லிப் போனான். ஆனால் அவ்வளவுநாள்கூட ஆகவில்லை. ஐந்து தினத்திற்குள் திரும்பி வந்தான். அவனது தோற்றத்தைக்கண்டு ஜகத்தாரணி விம்மி விம்மி அழுதாள். ஜோதிஷ் திரும்பிப்போன மூன்றாநாளே பாரசநாத் திடீரென கால மடைந்து விட்டார்.

ஐந்து வருஷத்திற்கப்புறம் ஜகத் தாரணி அழுதுகொண்டு கண வன் வீட்டிற்குத் திரும்பிப் போனாள். ஆனால் கணவனைச் சந்திக்க முடியவில்லை.

பெண்ணை வீட்டிற்குத் திருப்பி அழைத்து வந்தார்கள். ஆனால், அவளிடம் ஏற்பட்டிருந்த மாறு தலைக்கண்டு தாயார் பயமடைந் தாள். ஜோதிஷைத் தனியாக அழைத்து "இனி பெண்ணிற்கு எப் படி கலியாணம் ஆகும்?" என்று கேட்டாள்.

ஜோதிஷ், தாயாரின் மனோபா வத்தைத் தெரிந்து கொண்டு, "இவளைவிடப் பெரிய பெண்ணிற் கெல்லாம் கலியாணம் ஆகிற தம்மா! நீ கவலைப் படாமல் இரு" என்றான்.

ஜகத்தாரணி ஆச்சரியத்துடன் "கவலைப் படாமல் இருப்பதா? உனது தகப்பனார் செய்துபோன காரியத்திற்கு வேறு ஒரு வழியு மில்லை. ஆனால், அதற்காக என் உயிர் இருக்கிற வரையிலும் பிரா மணப்பெண்ணை ஒரு கிருஸ்து வனுக்கோ, முகமதியனுக்கோ கலியாணம் செய்து கொடுக்க மாட்டேன். பெண்ணுக்குக் கலி யாணம் ஆகாமல் போனாலும் பர வாயில்லை. உன்னைப்பற்றி கவலைப் பட வேண்டியதில்லை. உனக்குப் பிராயசித்தம் செய்து கொள்ள லாம். ஆனால், ஆயிரம் பிராயச் சித்தம் செய்தாலும் பெண்ணின் வயது குறைந்து விடாது. அதற்கு வேறு என்ன வழி?" என்றாள்.

ஜோதிஷ், "அம்மா, நீ வயதைக் குறைக்கவேண்டாம். இரண்டு நாள் பொறுத்துக்கொள். நான் நல்ல பிராமணப் பையனைக் கொண்டுவந்து தருகிறேன். நீ அதற்காக கிருஸ்தவன் வீட்டிற் கோ முகமதியன் வீட்டிற்கோ அலைய வேண்டியதில்லை" என்றான்

ஜகத்தாரணி கோபத்துடன், "ஜோதிஷ் இன்னுமா என்னைப் பொறுத்துக்கொள்ளச் சொல்லு கிறாய்?" என்றாள்.

"அம்மா, இதில் என்மேல் என்ன தப்பு? அப்பாவும் நீயும் செய்ததுதான் தப்பு. நான் வேறு தேசத்தில் இருந்தேனே!"

அவன் கூறுவது உண்மைஎன்று அறிந்தாள். ஆனாலும் நல்ல குலப் பிராமணப் பையன் எப்படிக் கிடைக்கக்கூடும் என்று நினைத் தாள். "சரி, உன் இஷ்டம்போல் செய். நான் ஒன்றுக்கும் குறுக்கே நிற்கவில்லை." என்று கூறிவிட்டு அப்புறம் சென்றாள்.

பிராயச்சித்தம் செய்து கொண்டு ஜோதிஷ் தகப்பனா ருடைய கருமங்களைச் செய்தான்.

இதற்குக் கொஞ்ச நாளைக்குப் பிறகு வரனும் கிடைத்தது. அவனும் பாரிஸ்டருக்குப் படித்து வந்திருந்தான்.

ஷஷாங்க மோகனுடைய நிறம் நம் நிறத்தைப் போலத்தான் இருந்தது. ஆனால் நடப்பதோ அந்நிய தேசத்தினரைப் போல நடந்து கொண்டான். வங்காளி சுத்தமாக பேசுவான். ஆனால் ஆங்கிலம் பேசுவதில் தவறு செய்வான். நாளுக்குநாள் அவன் அதிகமாக வரத்தொடங்கினன். சரோஜினி அவன் மனதில் இடம் பெற்று விட்டாள்.

ஜகத்தாரணி இவைகளை எல்லாம் கண்டு கொதிப்படைந்தாள். ஆனால் அந்தக் கொதிப்பை மகளிடம் காட்டினாள். மகளைத் தனியாக அழைத்து, "நீ எல்லோர் முன்னும் போய் நின்றுகொள்கிருயே! உனக்கு வெட்கமில்லையா?" என்ருள்.

சரோஜினி மௌனமாக நின்று கொண்டிருந்தாள். தாயாரும் வேறு ஒன்றும் சொல்லாமல் வேகமாக அங்கிருந்து சென்று விட்டாள். இதற்கப்புறம் ஷஷாங்க மோகன் எத்தனையோ தரம் வந்திருக்கிருன். ஆனல் யாரைக்காண வந்தானே அவரைக் காண முடிவதில்லை. தாயாரின் எச்சரிக்கையால் சரோஜினி கவனமாக நடந்து வந்தாள். ஜோதிஷ் இதைக் கவனித்தான்.

ஒருநாள் அவன் சரோஜினியிடம், "இப்போதெல்லாம் நீ என் ஒடி ஒளிந்து கொள்கிருய்?" என்று கேட்டான்.

சரோஜினி தலையைக் குனிந்து கொண்டு, "அம்மா......."இதற்கு மேல் அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஜோதிஷ் பேசாமல் போய்விட்டான். அவன் முழுக் காரணத்தையும் தெரிந்து கொண்டான்.

இரண்டு மாதத்திற்குப் பிறகு ஜோதிஷ் தங்கையின் கலியாணத்தைப் பற்றி தாயாரிடம் தெரிவித்தான். ஷஷாங்க மோகனுக்கு என்று கேள்விப்பட்டதும் தாயார் அளவுகடந்த துக்கமடைந்தாள்.

மகன் பேசாமலிருப்பதை கண்டு தாயார், "அப்பா, நீயும் அந்நிய தேசம் போய்விட்டு வந்தவன் தான். ஆனல், நீயும் இப்படியா மாறிவிட்டாய்?" என்ருள்.

ஜோதிஷ் மெள்ள மெள்ள, "அம்மா, எல்லோரும் ஒரே மாதிரி இருப்பார்களா? ஷஷாங்கன் பாரிஸ்டருக்குப் படித்திருக்கிருன். இதற்குள் நல்ல பெயரும் சம்பாதித்து விட்டான். சரோஜினி அவனைக் கலியாணம் செய்து கொள்வது நமக்கு நல்லது. நடத்தையில் சின்னஞ்சிறு தவறுகள் இருக்கலாம். அதை மன்னித்து விட்டால் பின்னல் திருந்திக் கொள்வான்" என்ருன்.

"அப்பா, அவன் எப்போதும் திருந்த மாட்டான். அயல் நாடு சென்று அயல் நாட்டான் போலவே வந்திருக்கும் அவனை நான் நம்பவே மாட்டேன். பீஹாருக்குப் போனல் பீஹாரி ஆகிவிடுவது, காபூலுக்குப் போனல் காபூல்காரனகி விடுவது, இதெல்லாம் என்னப்பா? முடியாது, முடியாது. ஜோதிஷ், அவன் மனிதனல்ல, குரங்கு. குரங்கிடம் பெண்ணை ஒப்படைக்க மாட்டேன்."

பிறரைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கக் கொஞ்சம்கூட தயங்க மாட்டாள். எந்தக் குற்றத்திற்காகப் பதியைக்கூடத் தியாகம்

செய்தாளோ, அந்தக் குற்றத்தை அவளால் எப்படி மன்னிக்க முடியும்? இதைத் தெரிந்த ஜோதிஷ் பேசாமல் போய் விட்டான். பிறகு சிறிது நேரங் கழித்துத் திரும்பி வந்து, "அம்மா, இன்னொரு விஷயம் இருக்கிறது. அதைப் பற்றி நீ நன்கு யோசிக்க வேண்டும்" என்றான்.

"என்ன விஷயம்?"

"சரோஜினி படித்த பெண். அவளுடைய மனதை அறியாமல் நாம் காரியம் செய்து கொண்டு போக முடியாது. குழந்தையிலிருந்து அவளை நீ வளர்க்கவில்லை. அயல் தேசத்து 'மேட'த்திடம் ஒப்படைத்து விட்டாய். இப்போது அவள் பெரியவளாகி விட்டாள். அவள் மனதையும் தெரிந்து கொள்வதுதான் நல்லது."

ஜகத்தாரணி பேசாமலிருந்தாள். இதை அவளால் மறுக்கவும் முடியவில்லை. ஒப்புக்கொள்ளவும் முடியவில்லை.

சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "சரி, ஜோதிஷ், நீங்கள் துரை துரைசாணி ஆகிவிட வேண்டுமானால் ஆகிவிட்டுப் போங்கள். ஆனால் அதற்கு முன் என்னைக் காசிக்கு அனுப்பிவிடு! என்னால் இவைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது" என்றாள்.

ஜோதிஷ் சிரித்துக் கொண்டு, "அப்படியானால் நானும் காசிக்குப் போக வேணடியதுதான். அம்மாவை விட்டு நான் எப்படி இருப்பேன்? இதை நான் வெகு நாளைக்கு முன்பே தீர்மானித்து விட்டேனே" என்றான்.

ஜகத்தாரணி அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய கோபமெல்லாம் ஒரு நொடியில் மறைந்து விட்டது. சிறிது நேரம் மகனுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "வேண்டாமப்பா, காசியிலிருக்கும் வீட்டை காலி செய்யச் சொல்லி கடிதம் எழுது. நான் உன்னருகில் இருந்து கொண்டு உனக்கு சதா துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இப்படி இருக்க வேண்டாம்" என்றாள்.

"சரி, எல்லோரும் காசியிலேயே போய் இருக்கலாம்" என்று சிரித்துக் கொண்டு கூறினான்.

தாயாருக்கும் மகனுக்கும் இம்மாதிரி பேச்சுவார்த்தைகள் நடந்த சில நாட்களுக் கப்புறம்தான் உபேந்திரன், சதீஷை அழைத்துக் கொண்டு கல்கத்தாவிற்கு இவர்கள் வீட்டிற்கு வந்தது. இதற்கப்புறம் நடந்ததெல்லாம் அனைவருக்கும் தெரியும்.

ஜகத்தாரணி, சதீஷைக் கண்டாள். அவன் மார்பில் பூணூல் துலங்கியது. அவன் சந்தியா வந்தனம் செய்கிறான். அவன் முஸ்லிம்கள் ஓட்டலில் பிஸ்கட் சாப்பிடுவதில்லை; நல்ல அழகுடையவன். சதீஷின் தந்தை பெரிய செல்வந்தர். இவைகளையெல்லாம் காண ஜகத்தாரணி, சதீஷிடம் அளவற்ற அன்பு கொண்டாள். அவன் அயல் நாடு சென்று கல்வி கற்று திரும்பவில்லை என்பதைத் தெரிந்தும் கூட அவளால் சதீஷைப் புறக்கணிக்க முடியவில்லை. சதீஷ் அவளை 'அம்மா' என்று அழைக்கும் பேறும் பெற்றாள்.

இதற்கப்புறம் பலநாள் சதீஷ் காணப்படவில்லை. ஜகத்தாரணிக்கு ஒவ்வொரு நாள் கழிவதும்

ஒரு யுகம் கழிவது போலிருந்தது. இருந்தாலும் அவள் அவனைத்தேடு வதற்கு எவ்வித முயற்சியும் செய்யவில்லை. அவனைத்தேடினால் ஏதாவது கெட்ட சமாசாரம் காதில் விழுந்து விடுமோ என்ற பயத்தால் சும்மாயிருந்தாள்.

விவாகம் தன் மகளுடைய அபிப் பிராயப்படி நடக்காது என்பது அவளுக்கு நன்கு தெரியும். சதீஷின் நண்பன் இவ்விஷயத்தில் குறுக்கிட மாட்டான் என்பது ஜகத்தாரணிக்குத் தெரியும். ஆனாலும் சதீஷின் தந்தை உயி ரோடு இருக்கிறார். அதோடு அயல் நாடு சென்று திரும்பிய வனின் மகள் சதீஷ் ஏற்றுக் கொள்வான் என்று நிச்சயமாகக் கூறுவதற்கும் இல்லை.

இவ்விதம் சந்தேகம், சங்கடங் களாகப் பல தினங்கள் கழிந்தன. ஆனால் திடீரென ஒரு நாள் வைத் தியநாதத்தில் சதீஷ் தங்கள் வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப் பதைக் காணவே ஜகத்தாரணி கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. சதீஷ் அவளருகில் எழுந்து வந்து வணங்கினான்.

கல்கத்தாவிலிருந்து இங்கு வந்து தனியாக சதீஷ் வசிப்பதையும், அகஸ்மாத்தாக சரோஜினியைச் சந்தித்ததும் முதலிய எல்லா விஷ யத்தையும் தாயாருக்கு ஜோதிஷ் தெரியப் படுத்தினான். தன் மக ளுக்கு ஏற்பட்ட ஆபத்திலிருந்து காப்பாற்றியதைக் கேட்டதும் ஜகத்தாரணி சதீஷின் தலையில் கையை வைத்து ஆசீர்வாதம் செய் தாள். பிறகு ஆங்கிலம் கற்று விட்டு ஆங்கிலேயர்கள் போலத் திரிவதைக் கண்டித்தாள். "அப்பா சதீஷ், நீ செய்த உபகாரத்திற்குக் கைமாறே செய்ய முடியாது. நீ செய்த உபகாரத்தை எப்போதும் மறக்கவே முடியாது. அதிருக் கட்டும் நீ ஏன் தனியாக அந்தக் காட்டிற்குள் இருக்கிறாய்? நீ அந்நியனல்லவே! நாங்கள் இங்கி ருக்கும் வரையிலும் எங்களோடு ஏன் வந்திருக்கக் கூடாது?'' என்றாள்.

சதீஷ் சிரித்துக்கொண்டு, "நான் அங்கு சௌக்கியமாகத்தான் இருக்கிறேன், அம்மா! எனக்கு ஒன்றும் கஷ்டம் இல்லை'' என்றான்.

"கஷ்டத்திற்காக நான் சொல்ல வில்லையப்பா. தனியாக இருப் பதில் எவ்வளவோ தீமை இருக் கிறது. இந்த வீட்டில் எத்த னையோ அறைகள் காலியாக இருக்கின்றன. நீ வந்து ஒரு அறையில் இருந்து கொள்.''

"இங்கு வந்து இருந்தால் அவர் சாதி போய்விடும் அம்மா'' என்று சரோஜினி கூறினாள்.

ஜகத்தாரணி மனதிற்குள் மிகுந்த கோபமடைந்தாள். ஆனா லும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "போடீ! பேசுவ தைப் பாரு! நாம் வேறா? நம் மோடு இருந்தால் சாதி போய் விடுமா? அவள் பேச்சை நம் பாதே சதீஷ்! அப்படியானால் உபேந்திரன் மனைவியுடன் நம் வீட்டில் அத்தனை நாள் இருப் பானா? அவன் சாதி போய் விட் டதா? சரோஜினி, இனிமேல் இம் மாதிரி உளறாதே!'' என்றாள்.

சரோஜினி மறுபுறம் திரும்பிக் கொண்டு சிரித்தாள். சதீஷ், "இல்லையம்மா! சாதி என் போகி றது? நான் தினம் இங்கு வந்து சாப்பிட்டுக் கொண்டுதானே இருக்கிறேன்!'' என்றான்.

இதைக் கேட்டு ஜகத்தாரணி சந்தோஷமடைந்து, "ஆம், அப்

படிச் சொல்; இங்கேயே வந்து தங்கிக் கொள். நான் இங்கிருக்கும் வரையிலும் நீ இங்குதான் சாப்பிட வேண்டும்'' என்று கூறி விட்டுச் சமையல் அறைக்குச் சென்று விட்டாள். சரோஜினி, சதீஷிடம், ''எனக்கு நீங்கள் பாட்டுச் சொல்லிக் கொடுப்பதாகச் சொன்னீர்களல்லவா?'' ''நான்தான் தினமும் இங்கு வருகிறேனே! கற்றுக் கொள்வதற்கென்ன?''

''நீங்கள் வந்ததும் உங்கள் பாடல்களை கேட்கப் பலர் வந்து கூடிவிடுகிருர்கள். அந்தச் சமயத்தில் நான் எப்படிக் கற்றுக் கொள்ள முடியும்?''

சதீஷ் சிரித்துக் கொண்டு, ''உள்ளே அனுமதியின்றி யாரையும் விடாதே என்று ஒரு வேலைக்காரனை வைத்து விடுவது தானே?'' என்ருன்.

''இதைவிட அம்மா சொல்வதைக் கேட்பது நல்லது! இங்கேயே வந்து விடுங்கள். அந்தக் காட்டிற்குள் எதற்காக இருக்க வேண்டும்?''

''ஏன் இருக்கிறேன் என்ற காரணத்தை பிறரிடம் சுலபமாகச் சொல்லக் கூடும். ஆனல் சரோஜினியிடம் சொல்ல முடியாதே'' என்று கூறிச் சதீஷ் பேசாமலிருந்தான்.

''நாலைந்து நாளைக்கப்புறம் கல்கத்தா போய் வருவதாக அண்ணு சொல்கிருர். பின் எங்களை யார் கவனித்துக் கொள்வார்கள்?''

''எத்தனை நாள் அங்கிருப்பார்?''

''குறைந்தது பத்து நாள் அங்கிருப்பார்.''

''போவது நிச்சயமானல் அதற்கு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்துவிட்டுப் போவார்.''

''செய்து விட்டுப் போனல் நல்லதுதான். இல்லாவிட்டால் நீங்கள்தான் செய்ய வேண்டும்.''

சதீஷ் சிரித்துக்கொண்டு, ''எதற்காக இப்படி பயப்பட வேண்டும்? ஆண்கள் வீட்டில் இல்லா விட்டால் கவலைப் படுவதற்கு எங்கள் வீட்டுப் பெண்களைப் போல நீங்கள் கோஷாப் பெண்கள் அல்லவே! நீங்களெல்லாம் எத்தனையோ ஆண்களை ......''

சரோஜினியின் முகம் சிவந்து விட்டது. ''சரி சரி, சொல்லுங்கள். ஏன் நிறுத்திக் கொண்டீர்கள்? நாங்கள் என்ன செய்கிரோம்? ஆண்களின் காதை அறுக்கிருேமா? நாங்கள் ஹிந்துப் பெண்கள் அல்லவா?''

சதீஷ் வெட்கமடைந்து பேச்சை மாற்றுவதற்காக நிமிர்ந்து பார்த்தான். எதிரில் ஷஷாங்கமோகனை அழைத்துக் கொண்டு ஜோதிஷ் வந்து கொண்டிருந்தான். ஜோதிஷ் ஸ்டேஷன் பக்கம் உலாவப் போயிருந்தான் வழக்கம் போல. பாரிஸ்டர் முதல் வகுப்பு வண்டியிலிருந்து இறங்குவதைப் பார்த்தான்.

(தொடரும்)

★

கோணல்ப் பார்வை

[ரா. நா]

பூகோள பாடத்தைப் பற்றி உபாத்தியாயர் பிரமாதமாக பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறார். திறந்தவாய் மூடாமல் எல்லோரும் கேட்டுக்கொண்டிருந்தோம். அப்படியே தான் குப்புசாமியும் கேட்டுக்கொண்டிருந்ததாக எண்ணினேம். அவன் திடீரென எழுந்திருந்து "ஸார்" என்றஉடன் உபாத்தியாயரை ஏதோ சந்தேகம் கேட்கப் போகிறுன் என்றுதான் எண்ணினேம். நாங்கள் எண்ணியதற்கு மாருக அவன் இப்படி எல்லோர் தலையிலும் ஒரு வெடிகுண்டை வீசி எறிவான் என்று எண்ணவில்லை.

'ஸார்' என்றவுடன் உபாத்தியாயரும் "என்ன குப்புசாமி" என்ருர். "ஸார்! உங்கள் கடிகாரப் பையில் ஒரு மூட்டைப் பூச்சி நுழைகிறது என்ருன்." உபாத்தியாயர் பிரசங்க உற்சாகம் உடனே மறைந்து விட்டது. துயரக்குரலில் "குப்புஸாமி ஒருகதை சொல்லுகிறேன் கேள். ஒரு ரிஷி தம் சிஷ்யர்களுக்கு வேத உபதேசம் செய்துகொண்டிருந்தார். ரிஷி சொன்ன சுலோகங்களை சிஷியர்கள் திருப்பிச் சொல்ல வேண்டும். உச்சரிப்பு சரியாக இருக்கவேண்டும். ரிஷி ஒரு சிஷ்யனைப் பார்த்து 'நான் சொன்னது நுழைந்ததா' என்று கேட்டார். ஒரு சிஷ்யன் நுழைந்தது வால் மாத்திரம் தான், பாக்கி' என்ருன். ரிஷி சுலோகம் வாயில் நுழைந்ததா என்று கேட்டார். சிஷ்யன் தான் பார்த்துக் கொண்டிருந்த எலி நுழைந்தது அதன் வால் மாத்திரம் பாக்கியிருந்தது என்று பதில் கூறினன். அதுமாதிரி இருக்கிறது. குப்புஸாமி நீ என் பூகோளப் பிரசங்கம் கேட்ட அழகு'' என்ருர் உபாத்தியாயர்.

●

வருஷங்கள் பல ஆகிவிட்டன. குப்புஸாமியும் வாழ்க்கைப் படகில் போய்க்கொண்டிருக்கிருன். ஆனல் சிறுவயதில் ஏற்பட்ட குண விசித்திரம் மட்டும் இன்னும் மாறிய பாடில்லே. புறப்பார்வை தீக்ஷண்யமாகத்தான் இருக்கிறது. அகப்பார்வை இன்னமும் கோணலாகத்தா னிருக்கிறது.

அன்ெருருநாள் சினிமாவுக்குப் போயிருந்தோம், குப்புவும் வந்திருந்தான். படத்தைப்பார்த்து நாங்கள் மெய்மறந்திருந்தோம். பக்கத்திலிருந்த குப்புசாமி முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த சதிபதிகளின் லட்சணங்களைப் பற்றி விமர்சனம் செய்துகொண்டு பிறர் படம் பார்க்க வொட்டாமல் தடைசெய்து கொண்டிருந்தான்.

என் நண்பன் ரங்கநாதன் ஒரு நாள் என்னுடன் பேசிக் கொண்டிருக்கையில் "டேய் உங்கள் குப்புசாமியை கண்யமான கூட்டம் எதற்கும் அழைக்க லாகாது'' என்ருன்.

"ஏனப்பா அப்படிச் சொல்லும்படி என்ன செய்து விட்டான்'' என்று கேட்டேன்.

"என்ன செய்து விட்டானு? சொல்லுகிறேன் கேள். ஒரு பெரிய பண்டிதரை வரவேற்பதற்காகச் சிற்றுண்டி விருந்தளிக்கப் பட்டது. பிரதம விருந்தினரின் மேதையைப் புகழ்ந்து அரிய பிரசங்கங்கள் செய்யப்பட்டன. விற்பன்னர் பதில் பிரசங்கம் செய்கையில் அற்புதமாகப் பேசினுர். இதை எல்லோரும் பாராட்டிக் கொண்டு சென்ருர்கள். அச்சமயம் உங்கள் குப்புசாமி புகுந்து, "விருந்தளித்தானே விருந்து. எல்லாம் ஏற்பாடு செய்துவிட்டு கடைசியில் புரூட்ஸால்ட் போடவில்லையே அப்பா! என்று கூறினனப்பா" என்ருன் ரங்கநாதன்.

●

இதைக் கேட்டவுடன் அன்ருெரு நாள் சங்கீதக் கச்சேரியில் குப்புசாமி நடந்துகொண்ட அசம்பாவிதம் ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு பிரபல பாடகி அற்புதமாகப் பாடுகிருள். சாரீர மேன்மையைக் கண்டு ஆங்காங்கு சபையினர் கரகோஷம் செய்தனர். சங்கீதம் கேட்பதற்காக வந்த குப்புசாமி என்னைக் கூப்பிட்டு, "டேய் பார்த்தாயா?" என்ருன்.

"எதையடா" என்றேன் நான்.

"அந்த ஜமீன்தார் மேடைக்கு வந்தவுடன் அந்த பாடகி பல் எல்லாம் வெளியே தெரிந்தது பார்த்தாயா?" என்ருன்.

"டேய் உன் குணம் மட்டும் மாருது போலிருக்கிறதப்பா? மாணவனுயிருக்கும் போது மூட்டைப் பூச்சி பையில் நுழைவதைப் பார்த்த சுபாவம் இன்னும் மாறவில்லையே" என்றேன்.

அதற்கு அவன் என்ன பதில் கூறினுன் தெரியுமா? அதைக் கேட்டால் நீங்கள் அசந்து விடுவீர்கள்.

"வாழ்க்கை என்ருல் என்ன என்று நினைக்கிருய். கோணல்கள் கண்ணுக்குப் படாவிட்டால் தூரத்திலிருப்பது ஒன்றும் தெரியாது. நேரில் தெரிவதை மட்டும் நம்பினுல் உள்ளே மற்றவர்கள் கவனிக்க மாட்டார்கள். கோணல்ப் பார்வைதான் நாலுபேர் நம்மைக் கவனிக்கும்படி செய்யும். நாய் மனிதனைக் கடித்தது என்ருல் யாரடா நம்புவான்? மனிதன் நாயைக் கடித்தான் என்ருல்தான் 'என்ன' என்று உள்ள ஜனங்கள் திரும்பிப் பார்ப்பார்கள்." இதைக் கேட்டவுடன் எனக்குக் கோபம் வந்து விட்டது.

"குப்பு, தற்பெருமை கொள்ளாதே. உன் போன்றவர்கள் தான் சமூகத்தின் வேர்ப் பூச்சிகள். உங்கள் வர்க்கம் ஒழிந்தால் தான் உலகம் உருப்படும்" என்றேன். குப்பன் அன்று போனவன்தான். நாளது வரையில் அவன் என் கண்ணில் படவேயில்லை.

★

எழில்

கே. சி. எஸ். அருணாசலம்

★

பொங்கிவரும் புதுநிலவில் உன்னைக் கண்டேன்
பொன்னருவி தவழ்வதிலே உன்னைக் கண்டேன்
செங்கமல மலர் மார்பில் எழிலே! உன்றன்
திருவடிகள் களி நடனம் செய்யக் கண்டேன்

தங்கநிற ஒளிசிந்தி மாலைப் போதில்
தண்மை நிறை திரைகடலைத் தழுவிக் கொஞ்சும்
செங்கதிரின் இன்வடிவில் உன்னைக் கண்டேன்
சிரித்தசையும் மலர்களிலே உன்னைக் கண்டேன்

துள்ளும்இள மான்விழியில் உன்னைக் கண்டேன்
தோகைமயில் நடனத்தில் உன்னைக் கண்டேன்
தெள்ளு தமிழ் மொழியெங்கும் உன்னைக் கண்டேன்
தீங்காவி யங்களிலே உன்னைக் கண்டேன்

கொள்ளையிடும் அடிமையினாற், பசியால், வெம்பிக்
கொடுமையுறு பலகோடி மனிதர் வாழ்வில்
எள்ளளவு நின்னொளியும் காணேன் அந்தோ!
இருவிழியும் மழைபெய்ய ஏங்கி நின்றேன்.

★

திக்குத் தெரியாத காட்டில்

"பராங்குசம்"

உங்களில் சிலருக்கு ஞாபகம் இருக்கலாம். ஒரு பத்து வருஷங்களுக்கு முன், நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த காலம் அது. ஆடை ஆபரண அலங்காரங்களில் ஒரு புதுமை தோன்றிற்று. எங்கு பார்த்தாலும் எலியும், எலிக்குஞ்சுகளும் மூஞ்சூறும் காட்சி அளித்தன. பித்தான்களிலும், பின்களிலும் ப்ரூச்சுகளிலும், எங்கும் இப்பிராணிகள் தான். அதுவும் கருப்புப் பூனைகளும், கருப்பு எலிக்குஞ்சுகளும் வெகு அதிகம். நான் கூட எலி வடிவில் வெட்டிக் கருப்பு வர்ணம் தீட்டப்பட்ட 'கப்லிங்ஸ்' போட்டிருந்தேன். என் சிநேகிதன் ஒருவனுடைய தங்கையின் பிறந்த நாள் வந்தது. அவள் பெயர் சுமதி. அவர்களை எனக்கு நன்றாகத் தெரியும். ஒன்றாய் விளையாடி வளர்ந்தவர்கள். நல்ல நண்பர்கள். பிறகு நான் கல்லூரியில் படித்து வந்தபோது கூட, அவள் எனக்கு ஒருவகுப்பு கீழே என்னைப் பின் தொடர்ந்து கொண்டே வந்தாள். அப்புறம்... சரி அப்புறம் நடந்ததை அப்புறம் சொல்லுகிறேன். நான் குறிப்பிட்டது அவளுடைய பதினைந்தாவது பிறந்த நாள். அதற்கு மூன்று கருப்பு எலிக்குஞ்சுகள் செதுக்கியிருந்த ப்ரூச் ஒன்று அவளுக்குக் கொடுத்தேன். சின்னப் பெண்தானே, அவளுக்கு அதில் வெகு சந்தோஷம். என் சிநேகிதன் பெயர் ரஞ்சன். நானோ ராமு. அந்த மூன்று எலிக்குஞ்சுகளுக்கும் ரஞ்சன், சுமதி, ராமு என்று பெயரிட்டு, விளையாடி வந்தாள். தன் தாவணியிலிருந்து அதை எடுப்பதே கிடையாது. அதனிடம் அவ்வளவு பிரியம்.

அதெல்லாம் அந்தக் காலம். சில நாட்களுக்குமுன் நான் மதராஸ் போயிருந்தேன். சுமதியை சந்தித்துப் பல வருஷங்கள் ஆகியிருந்தும் அவளைப் பார்க்காமல் திரும்ப மனம் வரவில்லை. அவள் வீட்டிற்குப் போயிருந்தேன். நான் நாட்டுப்புறம். காலை ஏழுமணிக்குப் போய் கதவைத் தட்டினேன். வீட்டில் இன்னும் ஒருவரும் எழுந்தபாடில்லை. வேலைக்காரன் வந்து, என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு, 'என்ன வேண்டும்' என்று கேட்டான். சொன்னதும் அவன் என்னை அங்கேயே நிற்க வைத்துவிட்டு, பெயரைக் கேட்டுக்கொண்டு (என்னிடம் ஏது விஸிடிங் கார்ட்!) உள்ளே போனான். ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்போய்விடலாமா என்றுகூட யோசித்தேன். ஒன்றுமில்லை, ஐந்து வருஷங்களுக்கு முன், காலம் வேளை இல்லாமல், காரண காரியமில்லாமல், இதே வீட்டுக்குள் சொல்லாமல் கொள்ளாமல் வந்து போயிருந்தது நான்தானா அல்லது என் பெயர் கொண்ட இன்னொருவனா என்று சந்தேகம் கூட வந்துவிட்டது.

ஆனால் இதற்குள் மாடியிலிருந்து சத்தம் கேட்டது. சுமதியின் குரல் மாறவேயில்லை. அதுவும் கோபத்துடன் பேசும்போது, முன் தொனிக்குமே அந்த இனிமை போகவே இல்லை. வேலைக்காரனைத் திட்டிக்கொண்டிருந்தாள். உடனே என்னை அழைத்துப்போய் தன் அறையில் உட்கார வைக்கச் சொன்னாள். இறங்கி வந்துகொண்டே அவள் சொன்னதெல்லாம் என் காதில் விழுந்தது. கதவைத் திறந்துகொண்டு, "ராமு ஒரே ஒரு நிமிஷம்," என்று சொல்லிவிட்டு வேகமாக ஸ்நான அறையை நோக்கி நடந்தாள். வேலைக்காரன் என்னைத் தன் எஜமானியின் அறைக்கு அழைத்துச் சென்றான், கொஞ்சம் மரியாதையுடனேயே.



பெண்களுக்கு ஒரு நிமிஷம் என்றால் உங்களுக்குத் தெரியுமல்லவா? எனக்கும் தெரியும். ஆகையால் நான் அறையைச் சுற்றி இதையும் அதையும் பார்த்த வண்ணம் வலம் வந்துகொண்டிருந்தேன். அறைக்குள் சென்றவுடன் எனக்குக் கொஞ்சம்பயம் தெளிந்துவிட்டது; அந்த அறையின் அமைப்பும் அலங்காரமும் போலும்! அறையிலுங்கூட ஒரு மாறுதலும் இல்லை. அவள் கண்ணாடி மேஜையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென்று எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒருமூலையில் ரஞ்சன், சுமதி, ராமு மூவரும் படுத்திருந்தார்கள். ஆம், நான் வாங்கிக் கொடுத்த அதே ப்ரூச்சுத்தான். இத்தனை காலம் அதை சுமதி வைத்துக் கொண்டிருப்பாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஆச்சரியம் தணிந்த பிறகு, எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. அந்த மூன்று எலிகளும் இப்பொழுது அவ்வளவு வேடிக்கையாகத் தோன்றின. என்னையும் அறியாமல் என் முகத்தில், சிரிக்க மறந்து போய்விட்டதாக நினைத்திருந்த என் முகத்தில், ஒரு புன்சிரிப்பு. என்னால் அடக்க முடியவில்லை. பழைய நினைவுகள் கனவு போல் ஒன்றன் பின் ஒன்றாக வந்து நின்று மங்கி மறைந்தன. ஒரு காட்சி மட்டும் என்னை மிகத் துன்புறுத்திற்று. பல பலவென்று என் கண்களிலிருந்து நீர்த்துளிகள் உதிர்ந்தன.

"சற்றுமுன் எங்களைப் பார்த்துச் சிரிப்பானேன்? இப்பொழுது அழுவானேன்"? என்று மூன்று சிறு குரல்கள் சேர்ந்து கேட்டன, கொல்லென்று சிரித்தன. என் காதுகளையே என்னால் நம்பமுடியவில்லை. ஆனால், அந்த மூன்று எலிகள், குருட்டு எலிக்குஞ்சுகள்தான் அப்படிப் பேசியது. திருதிருவென்று விழித்தேனேயொழிய என்னால் பேசவே முடியவில்லை.

"எங்களுக்குத்தான் பேசத் தெரியாது. உனக்கு என் வாயடைத்துப் போய்விட்டது? முன்பெல்லாம் சும்மா அளப்பாயே."

"இருந்தாலும் எனக்குப் பேச முடியாமற் போனது சகஜம் தானே! இதோ நீங்கள் உட்கார்ந்திருக்கிறீர்களே, இந்த மேஜை திடீரென்று பேச ஆரம்பித்தால்......"

"பேசாது என்று யார் உனக்குச் சொன்னது?"

"ஓ! பேசுமா?"

"நன்றாக"

என் முகத்தில் அசடு தட்டினதைச் சொல்ல வேண்டுமா? ஆனால் அந்த எலிகள் என்னை விடவில்லை. முதலில் பேசினது ரஞ்சன்.

"ஆனால் அது உங்களுக்குப் புரியாது."

"இருக்கலாம்', என்றேன்.

உடனே இன்னொரு எலி ஆரம்பித்தது. "புரிகிறதைப் பற்றி இவர்களிடம் தானா சொல்ல வேண்டும்? மனிதர்கள், ஜீவராசிகளுள் முதன்மை ஸ்தானம் வகிப்பார்களாம்! இவர்களைப் போன்ற அசம்பாவித குடுக்கைகளை நான் பார்த்ததே இல்லை. இவர்கள் வார்த்தைகளுக்கு ஒரு அர்த்தம், செயல்களில் ஒரு ஒற்றுமை, எண்ணங்களில் ஒரு தொடர்பு ஒன்றும் கிடையாது."

சிரிப்பை அடக்கிக்கொண்டு நான் கேட்டேன், "என்ன புரியவில்லை உங்களுக்கு?"

"புரியவில்லை என்று யார் சொன்னது? புரிவதற்கு ஏதேனும் இருந்தால்தானே."

அப்படி ஒரே போடாகப் போட்டால், அதற்கு யார் பதில் சொல்ல முடியும்? புத்தகப் பரிச்சியம் உதவிற்று. "ஓ!" என்றேன். ரஞ்சன் மீண்டும் பேச வாரம்பித்தது.

"ஏன், இந்த ரஞ்சனைத்தான் எடுத்துக்கொள்ளேன். அவன் ஒரு மனிதன்தான். ஆனால் அவனுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம். நானாவது உன்னோடு பேசுகிறேன். அவனுக்கு அதுகூட அசாத்தியம். நீயும் அவன் மாதிரி ஒரு மனிதன்தானே. நீ பேச ஆரம்பித்தால் ஏன் அவன் அப்படிப் பிரமித்துப்போய், கண் கொட்டாமல், மூச்சு விட்டால் ஏதாவது கேட்காமல் போய்விடப் போகிறதோ என்று, கப்சிப் என்று உட்கார்ந்து கொண்டிருக்கிறான்? உன் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு கிடைப்பரும் முத்து என்று எண்ணம் போலும், அப்படிக் காது நோகக் கேட்டுக்கொண்டிருக்கிறான். உன்னை மட்டுமல்ல. அவனே அப்படித்தான். ஊருக்கு யாராவதுவந்து பிரசங்கம் செய்ய வேண்டியதுதான். முதல் ஸீட்டில் ரஞ்சன் இருப்பான். அவர்களும் நீயும் பேத்துவது எங்களுக்குத் தெரியும். அதில் என்ன அற்புதம்தானிருக்குமோ, அது ரஞ்சனுக்குத்தான் தெரியும். மனிதர்கள் மட்டும்தானா! அவனுக்குப் புத்தகங்களும் அப்படித்தான். கண்தான் நோகாதோ, தலைதான் சுற்றாதோ, அப்படிப் படிப்பான். புத்தகம் புத்தகமாக விழுங்குவான். இதற்கு நடுவில் ஏதாவது ஒரு வசனம் அவனுக்குப் பிடித்துவிடும். வசனமும் ஒன்றும் பெரிய ஞானச்சுடராக இருக்காது. "கலை மனிதன் விதியைவெல்லச்செய்யும் முயற்சி – விதியைத் தப்பி அல்ல, விதியைச் சுகித்து" என்றிருக்கும்.

அவ்வளவுதான், கன்னத்தில் கையைவைத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்துவிடுவான். நேரம் போவதும் தெரியாது, உலகம் உடைந்தாலும் தெரியாது. எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம் கூட, அப்படியே தூங்கிப் போய்விடுகிறானோ என்று. ஆனால் அப்படி

யும் சொல்லமுடியாது. கொஞ்ச நாழிக்கொருதரம், "ஆஹா! கலை மனிதன் விதியை வெல்லச் செய்யும் முயற்சி! பேஷ்!! அதை தப்பி அல்ல, விதியை சுகித்து...ஆஹா! ச்சு ச்சு!!!" என்று ரொம்ப கஷ்டப்படுவான். நீதான் சொல்லேன் அந்த வசனத்தில்தான் அப்படி என்ன இருக்கிறது. கலை, உம்! ஒரு அர்த்தமற்ற வார்த்தை. வேறொரு விதமாகவும் ஒன்றை வர்ணிக்க முடியாவிட்டால், அதுகலை; இதற்கு மேல் விதி. எங்கிருந்து வந்தீர்களோ, எங்கு போகிறீர்களோ, ஒன்றும் தெரியாது. நீங்கள் விதியைப்பற்றி என்ன கண்டீர்கள்? அதுவும் ஒரு வார்த்தை. மனிதனின் அறியாமையை உருட்டித் திரட்டிச் சித்திரிக்கும் ஒரு சின்னம். ஆனால் உங்களையெல்லாம் கேட்டால், ரஞ்சன்

படித்தவன், நல்ல ரஸிகன். விசால நோக்கமுடையவன். உம், கடைசியில் அந்த லலிதாவைப் போய் கல்யாணம் பண்ணிக்கொண்டான். படித்தவனும்!''

“அவன் ரசிகனல்லவா,'' என்று ஆரம்பித்தேன். அதற்குள், “ஓஹோ ரசிகனு,? சரி, உன்னுடன் ஏன் மனஸ்தாபம். நீயும் ஒரு ரஸிகன் என்று எண்ணிக் கொண்டு போய்விடுவதுதானே. அவன் விசால நோக்கம் எங்கே போயிற்று? சாதாரண பழைய கால மனிதன் மாதிரிதானே நடந்துகொண்டான்? புத்தகத்தில் படித்ததெல்லாம் ஏன் மறந்து போய்விட்டது? “கல்யாணம் ஒரு ஒப்பந்தம். என் மனைவியின் வாழ்க்கை அவளுடையது. நான் அவளை மணம் புரிந்துகொண்டிருப்பதால், அவள் என் அடிமையாகிவிடவில்லை. அவளிஷ்டப்படி அவள் நடந்துகொள்ள வேண்டும். என் இஷ்டப்படி நான்,' என்றெல்லாம் தத்வம் பேசினனே அதெல்லாம் எங்கே போயிற்று?''

மனித சுபாவத்தை இவர்கள் அறிவது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது, என்று நான் எண்ணி முடிப்பதற்குள், சுமதி எலி ஆரம்பித்தது.

“அதுதான் எனக்கும் புரியவில்லை. மனிதர்களின் எண்ணத்திற்கும் அவர்கள் செய்யும் செயல்களுக்கும் ஏன் இவ்வளவு வித்தியாசம்? அதற்கும் மேல் தங்களுக்கு நம்பிக்கையில்லாத, பிடிக்காத ஒரு விஷயத்தில் தங்களுக்கு நம்பிக்கையும் பிரியமும் இருப்பதாக ஏன் தாங்களே தங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டும்? இந்த சுமதியைத்தான் பாரேன். பச்சோந்தியின் நிறம் மாறுவதைவிட வேகமாக அவள் எண்ணங்களும் இஷ்டங்களும் மாறுகின்றன. மது தேடி அலையும் தேனீயைப்போல் ஒன்றிலிருந்து ஒன்றுக்குப் பாய்ந்தோடுகிருள். அந்தச் சமயத்தில் அவள் மனம் எதில் இருக்கிறதோ அதுதான் உலகமெல்லாம். நீங்கள் இரண்டு பேரும் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த சமயம், ஞாபகம் இருக்கிறதா? அப்பொழுது அவளுக்கு உலகத்திலேயே நீ ஒருவன்தான் உண்டு. அப்பப்பா! என்ன பிதற்றல் பிதற்றுவாள். என்ன ஆட்டம் ஆடுவாள். சரி, அதுதான் எங்களுக்குப் புரியாது உங்கள் காதல். ஆனல் நீ கல்லூரியில் சேர்ந்தவுடன் உனக்கு வேறு விஷயங்களில் கவனம் திரும்பியது. கவிதை, வேதாந்தம் தத்துவ சாஸ்திரம் என்று ஆரம்பித்தாய் நீ. சுமதிக்குப் பொருமை. அவ்வளவுதான், உடனே விளையாடுவதற்கு இன்னெரு பொம்மையை தேடியெடுத்துக்கொண்டாள். ஒரு பொம்மையாகப் போவானேன்? எத்தனையோ. நினைத்தாலே தலை சுற்றுகிறது. ஆனல் ஒன்று கவனித்தேன். எல்லோரிடமும் உன்னிடம் சொன்னதையேதான் சொன்னுள். அவர்களும் நீ பேசினதையேதான் பேசினர்கள். எனக்கு வெட்டுருவாகிவிட்டது. என்னேடு போவானேன்? எங்களுக்கெல்லாமே உன்போன்ற மனிதர்களைக் கண்டால் சீ யென்று ஆகிவிட்டது. அன்று காற்றுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவரும் அதுதான் சொன்னர், ‘இந்த மனிதர்களே இப்படித்தான். சொன்னதையே திரும்பத் திரும்ப சலிக்காமல் சொல்லுகிருர்கள்' என்று. வர வர உன்னிடம் அவளுக்கு இருந்த சிநேகம் கூட தேய்ந்து

போய்விட்டது. தப்பாக நினைத்துக் கொள்ளாதே, ஒரு நாள் அவள் என்ன சொன்னாள், தெரியுமா? 'ராமுவா, அவன் உடம்பில் ஓடுவது ரத்தமில்லை, ஐஸ்வாடர்!' என்றாள். அதற்கு எட்டேநாள் கழித்து, ரஞ்சனுக்கும் உனக்கும் லலிதாவைப்பற்றி மனஸ்தாபம். அவ்வளவுதான், உடனே ஐஸ் வாடர் எல்லாம் மறந்துபோய், உன்னிடம் பாசம் திரும்பி விட்டது.

அவளுக்கே ஒருமாதிரி தோன்றிற்றோ என்னமோ, ஒரு நாள் ராத்திரி படுக்கையிலிருந்தபடியே உன் போட்டோவை எடுத்து வைத்துக்கொண்டு உங்களுக்கு எல்லோருக்கும்தான் ஒரு பொய்க் குரல் உண்டே, அந்த போலிக் குரலில், நான் இங்கேயேதான் இதேமேஜையில்தான் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தேன், தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொள்கிறாள். 'ராமு, எப்பவுமே என் பிரியமெல்லாம் உனக்குத்தானே? நீ தான் உண்மை. மற்றவர்களெல்லாம் பொய்!, உம்! உனக்குத்தெரியாதா — அப்புறம் உன்னைச் சுற்றிச் சுற்றி வளையம் வந்தது உனக்கே தெரியும். அது ஒன்றிற்குத்தான் எனக்கு உன்னிடம் அபார மரியாதை. அவளிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிப் போய் விட்டாயே! ஆமாம், உன்னை ரொம்ப நாட்களாக கேட்க வேண்டுமென்றிருந்தேன். அன்று உனக்கு நிஜமாகவே வருத்தமா — அல்லது அதுவும் நாடகம் தானா? இன்னொன்று இங்கு ஏன் திரும்பிவந்தாய்?''

''அன்று பாசாங்கு அல்ல. நிஜமாகவே வருத்தம். அதனால்தான் இன்று வந்தேன். என்னால் வராமலிருக்க முடியவில்லை.''

''நான் முன்பே சொன்னேனல்லவா.'' பேசினது ராமு எலி. அந்தக் குரலில் இருந்த விஷமம், அப்பா! இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் பயமாக விருக்கிறது.

ஆனால் சுமதி எலி இன்னும் முடித்தாகவில்லை.

''பைத்தியம், நீ ஊருக்குப் போய் மூன்று மாதமாவதற்குள் சுமதிக்குக் கல்யாணம். அன்றுமுதல் இன்றுவரை ஒரே ஒரு நாள் தவிர, உன்னைப்பற்றி அவள் பேசினது கூட கிடையாது.''

''அந்த ஒரு நாள்?''

''அது ஏதோ அற்ப விஷயம். யாருடனோ பேசிக்கொண்டிருந்தாள் — ஆம், உனக்குக்கூட தெரியுமே சுசீலா, சுமதியின் சிநேகிதி. அவளுடன், சுசீலா குறும்பாக 'சரி, உன் பையனுக்கு என்ன பெயர் வைக்கப் போகிறாய்?' என்றாள். சுமதி ஒரு நிமிஷம் வெட்கத்தை மறைக்க சிரிக்க முயன்றாள். ஆனால் அடுத்த நிமிஷம், அவள் முகத்தில் ஒரு மாறுதல் தோன்றிற்று. நீ சொல்வாயே அடிக்கடி 'பெண்மையின் இனிமை' என்று, அதுதானோ என்னவோ, அந்தமாதிரி கண்களை வைத்துக்கொண்டு, முன் சொன்னேனே அந்தப் போலிக் குரலில், 'ராமு!' என்றாள்.

அந்த எலிகளுக்கு அவை கேட்டதும், பார்த்ததும் ஒன்றுமே புரியவில்லை. கண்களைக் கட்டிக் காட்டில் விட்டது மாதிரி நம் உலகில் அகப்பட்டுத் திண்டாடின. பால்யத்தில் படித்த ஒரு பாட்டு ஞாபகம் வந்தது. என்னையும் அறியாமல் ''மூன்று குருட்டு எலிகள்'' என்று முணுமுணுத்தேன்.

இதுவரை அதிகம் பேசாமலிருந்த ராமு எலி, "இரு, அவசரப் படாதே. மூன்றாவது குருட்டு எலி உன்னைப்பற்றியும் சொல்லிவிடுகிறேன்..." என்று ஆரம்பித்தது.

தூரத்தில் சுமதி வேலைக்காரனைக் கூப்பிட்டுக்கொண்டே அறைக்கு வரும் சப்தம் கேட்டது. இன்னொரு கதவைத் திறந்துகொண்டு வெளியே நடந்தேன். ஊர்வந்து சேரும்வரையில் ரயில் சக்கரங்கள் நான் பால்யத்தில் கற்ற அந்தப் பாட்டையே பாடிக் கொண்டிருந்தன. சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பார்த்தேன், சுமதியின் ப்ரூச்சு இருந்தது.

ஊருக்கு வந்ததும், சுமதிக்கு ஒரு கடிதம் எழுதினேன். அவசரமாகத்திரும்ப வேண்டியிருந்ததால் காத்திருந்து அவளைப் பார்க்க முடியவில்லை என்றும், பழைய காலத்து ஞாபகார்த்தமாக நான் அவளுக்கு சில வருஷங்களுக்கு முன்கொடுத்த ப்ரூச்சை எடுத்துக் கொண்டு வந்ததாகவும் எழுதியிருந்தேன். அதற்கு சுமதி பதில் எழுதவில்லை. தன் சிறு மகன் ராமுவின் போட்டோ ஒன்று மட்டும் அனுப்பினாள். ப்ரூச்சை நான் எடுத்து வருவதற்கு முன்பே ராமு—எலி அவளுக்கு என் கதையைச் சொல்லியிருக்குமோ?...

197836

மலர் மணம்

முகப்புப் படம் :

இயற்கையாகப் பூரித்து நிற்கும் நெற்கதிர்களைத் தன் பொற் கரங்களால் அள்ளிச் சேர்க்கும் ஒரு அரிய காட்சி இப்பண்டிகை இதழைப் பரிமளிக்கச் செய்கிறது.

இந்த "ஐப்பசி" இதழிலே பல சிறந்த கதை, கட்டுரை, கவிதைகள் வெளியாகி இருப்பதைப் பார்க்கலாம்.

'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்ற கருத்தை அழகாக எடுத்துக் காட்டி, ஒரு சிந்தனைச் சித்திரத்தை டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் உதவி இருக்கின்றார்கள்.

பல கலைகளிலும் தேர்ச்சி பெற்ற "பராங்குசம்" கவிதாவேகத்துடன் "திக்குத் தெரியாத காட்டில்" என்ற அருமையான கதையை அளித்திருக்கின்றார்.

இளம் கவிஞர் "செந்தாமரை" அவர்களின் குடும்பத்துக்கே கவிதை, பரம்பரைச் சொத்து. இங்கு 'செந்தாமரை' தந்திருக்கும் 'வாழ்க்கை'யில் அந்தப் பண்பின் மணம் வீசுவதைக் காணலாம்.

எங்கெங்கெல்லாமோ எழிலைத் தேடி அலைந்த கே. சி. எஸ். அருணசலம், 'இரு விழியும் மழை பெய்ய ஏங்கி நின்ற' சோகத்தையே பாடலில் 'எழிலாக' வடித்துத் தந்திருக்கிறார். "சிறுமை" யில் திரு. பார்த்தசாரதி அவர்கள் ஒரு பெரும் தத்துவத்தை நிறைத்திருக்கிறார்.

விஞ்ஞானப் பகுதியைப் பாராட்டிப் பல நண்பர்கள் எழுதி இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இத்தடவை 'உப்பும் உயிரும்' மிக மகிழ்வூட்டுமென நம்புகிறோம்.

இளம் சொற் சிற்பி "ஸ்ரீ ரா," கனவுமாளிகை நிர்மாணிக்கும் சரஸ்வதி தியாகராஜன், மற்றும் கலைவாணியின் மணி விளக்குகளான, விஜயகுமார், வண்ணக்கண், து. ராஜகோபால், முதலானவர்கள் அற்புதமான கதைகளைத் தீட்டியிருக்கிறார்கள்.

நமது சர். ஆர். கே. எஸ். அவர்களுடைய சிலப்பதிகாரத் தொடர் கட்டுரைகள் மட்டுமல்ல, பயனுள்ள பல விஷயங்களைப் பற்றியும், அவர்கள் தொடர்ந்து எழுதும் கட்டுரைகள் "வசந்த"த்தைச் சிறப்பிக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்.

இன்றுவரை நிகரற்றது.

கிடைக்கக்கூடிய சந்தன அத்தர்களில் மைசூர் சந்தன அத்தர்தான் மிக உயர்ந்ததும் சுத்தமானதும் ஆகும். வைத்திய உபயோகத்திற்கோ அல்லது சோப், இதர வாசனை திரவியங்கள் தயார் செய்யவோ மைசூர் பெயர் கொண்ட சந்தன அத்தருக்கு மிஞ்சியது ஒன்றுமில்லை.

மைசூர்

சந்தன அத்தர்

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு. MSR-V-TC

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் :: மதருஸ்

எதிர்பாராத விருந்து

மிக்க தயாரிப்புகளுடன் நாம் எதிர்பார்க்கும் விருந்தைக் காட்டிலும் திடீரெனவரும் ஓர் விருந்தாளிக்கே அதிக வரவேற்பு.

வீட்டிலோ வேலை செய்யுமிடத்திலோ, கோடையிலானாலும் சரி, குளிரிலானாலும் சரி, புத்தப்புதிய ஒருகோப்பை தேனீரே அந்த விருந்தினருக்கு நல்ல வரவேற்பு.

இந்தியா பூராவுமுள்ள எங்கள் டெப்போக்களிலிருந்து ப்ரூக் பாண்ட் தேயிலையை எங்கள் சொந்த விற்பனையாளர்கள் இடைவிடாமல் விநியோகிக்கிறார்கள்.

நீங்கள்எங்கேயிருந்தாலென்ன ?

பறித்தபோதுள்ள மணத்தோடேயே எங்கள் தேயிலை உங்களை வந்து சேருகிறது.

தோட்டத்திலிருந்து
தொண்டைவரை
சதா புதுமணம்

ப்ரூக் பாண்ட்

" இரு இலையும் ஒரு மொட்டும் "

தமிழ் நாடெங்கும் விரைவில் வெளிவருகிறது!

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸாரின்
மாபெரும் மகத்தான காக்ஷி!

சிரிப்பும், சிங்காரமும், வீரமும்
நிறைந்த சிறந்த தமிழ்ப் படம்

சித்ரா

தென்னிந்திய ஹாஸ்ய நடிகர்கள்
எல்லாம் திறம்பெற நடித்தது!

—:: விபரங்களுக்கு ::—

மாடர்ன் தியேட்டர்ஸ் லிட்.,
சேலம்.

With Victory Achieved
His Excellency's
"Amenities for Troops Fund"
has become His

"AMENITIES AND RELIEF FUND"

The change is significant and the need very great

Please send a subscription Earmarked

"AMENITIES AND RELIEF"

To The Honorary Treasurer,
Governor's War Fund
c/o Imperial Bank of India Madras

அழகிய கூந்தல்

நீங்களும் பெறக்கூடியதே, டாம்கோ கூந்தல் தேங்கா யெண்ணெயும், ஷாம்பூவும் வழக்கமாக உபயோகியுங்கள். செட்டாகச் செலவிட்டு உங்கள் ஸப்ளைகளைப் பாதுகாத்தும் வாருங்கள்.

யுத்தகால போக்குவரத்து நிலைமை காரணமாக, எமது மார்க்கெட்டுகளுக்கு அடிக்கடி தவறாமல் ஸப்ளைகள் ஊட்டிவருவது எங்களுக்கு வர வர மிகுந்த பிரயாசமாயிருக்கிறது. ஆனால் இந்தப் பஞ்சம் தாற்காலிகமானதுதான்.

உங்களுக்குத் தேவையானது மட்டும் வாங்கி, உங்களுக்கும் மற்றவர்களுக்கும் சங்கடத்தை, கூடுமான வரைக்குறையுங்கள்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி,
லிமிடெட்,

T. H. 5653.

Vasantham, Oct, 1945.

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.

REGD. NO. 4319 VASANTHAM OCT. 1945.

ஜூபிடர் பிக்சர்ஸ்

Lessees of:

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

[illegible] யந்திர சாதனங்களைக் கொண்டு தென்
இந்தியாவிலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த
அநேகம் தமிழ்ப் படங்களைத் தயாரித்த
[illegible] பெற்ற ஸ்டுடியோ!

[illegible]பொழுது தயாராகிவரும் பட[illegible]:

[illegible]	— சென்ட்ரல் ஸ்டுடியோஸ்
[illegible]ன் மகன்	— ,, ,,
ஸ்ரீ முருகன்	— ஜூபிடர் பிக்சர்ஸ்
மஞ்சு கோஷா (ரத்னகுமார்)	— முருகன் டாக்கி பிலிம் கம்பெனி
[illegible]தம்பரி ([illegible])	— [illegible] பிக்சர்ஸ்

P. A. R.

தீபாவளிக்கு

அழகுதரும் ஆபரணங்கள்!



ி.ஏ.ராஜு செட்டியார் & பிரதர்

யமுத்தூர் — போன்

ால் பெட்டி 139 :—